பக்கங்கள் : 18+VIII=26

அண்டுக்குலி இணை

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 புரட்டாதி 17 ஞாயிற்றுக்கிழமை (03-10-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:313

மட்டு. வாகரை மதுரங்குளத்தில்

## ஜெயந்தன் படையணியின் அதிரடியில் கருணா குழுவினர் நால்வர் மரணம்!

மட்டக்களப்பு,ஒக்.3

மட்டக்களப்பு - பொலன்நறுவை எல்லைப் பகுதியான வாகரையில் உள்ள மதுரங்குளத்தில் நேற்றுக்காலை 7 மணியளவில் விடுதலைப் புலிகளின் ஜெயந்தன் சிறப்புப் படை அணி மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் நால்வர் கொல்லப்பட்டனர்.

கருணா குழுவினரின் மறைவிடம் எனக் கருதப்படும் ஒரு வீட்டைச் சுற்றிவளைத்த சிறப்புப் படை அணியினர் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலிலேயே இந்த நால்வரும் கொல்லப்பட்டனர்.

அங்கு தங்கியிருந்த ஏனையோர் அருகில் உள்ள இராணுவ நிலைகளை நோக்கித் தப்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட இருவரின் சடலங்களையும் ஏ.கே.47 ரக துப்பாக்கிகள் இரண்டையும் புலிகள் மீட்டுள்ளனர்.

விக்கி, நித்தி என அடையாளம் காணப்பட்ட இந்தச் சடலங்களை அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைக்க புலிகள் ஏற்பாடு செய்துள்ளனர். (ஐ-3)

## கருணா அணியின் முக்கியஸ்தர் தாக்குதலில் பலி!

மட்டக்களப்பு,ஒக்.3

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகனேரியில் குளத்துமடு என்னும் இடத்தில் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ஒரு தாக்குதலில் கருணா குழுவின் முக்கியஸ்தரான ரூபன் என்பவர் கொல்லப்பட்டுள்ளார். வேறு இருவர் காயங்களுடன் தப்பிவிட்டனர்.

வாகனேரிப் பகுதியில் விடுதலைப் புலிகள் பதுங்கியிருந்து இத்தாக்குதலை மேற்கொண்ட

(16ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் உயர்மட்ட அரசியல் குழுவினர் இன்று சொல்ஹெய்முடன் முக்கிய பேச்சு

## ஜெனீவா கூட்டத்தின் தீர்மானங்கள் பின்னர் ஊடகங்களுக்கு வெளியிடப்படும்

ஜெனீவா,ஒக்ரோபர்3

**சுவிற்ஸர்லாந்தில் தங்கியிருக்கும் விடுதலைப் புலிகளின் உயர் மட்ட அரசியல் குழுவினர், நோர்வே அனுசரணையாளர்களின் விசேட ஆலோசகர் எரிக்சொல்ஹெய்மை இன்று சந்தித்து முக்கிய பேச்சு நடத்துகின்றனர். ஜெனீவா நகரில் கடந்த இரண்டு தினங்கள் நடத்தப்பட்ட கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட விடயங்களை, அரசியல் குழுவினர் எரிக்சொல்ஹெய்முக்கு எடுத்து விளக்குவர் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.**

விடுதலைப் புலிகளின் உயர்மட்ட அரசியல் குழுவினருடன் பேச்சு நடத்துவதற்காக நோர்வே விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம் இன்று காலை ஜெனீவா நகருக்கு வந்து சேர்வார் என்று தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் அங்கு தங்கியிருக்கும் அரசியல் விவகாரக் குழுவினரை எரிக்சொல்ஹெய்ம் சந்திப்பார். லண்டனில் இருந்து ஜெனீவா வந்துள்ள புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தலைமையில் இச்சந்திப்பு இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் குழுவின் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகத் தாயகத்தில் இருந்து ஜெனீவாவுக்கு வந்துள்ள புலிகளின் பிரதிநிதிகளும் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்வர்.

ஜெனீவாவில் நேற்று அரசியல் குழுவின் இரண்டாவது நாள் கூட்டம் நடைபெற்றது. நேற்றும் நேற்றுமுன்தினமுமாக இரு தினங்கள் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர் ஒன்றுகூடி நடத்திய கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்களையும் அவற்றின் இறுதியில் சமாதா

(16ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே சூரியகாந்தியில்

- புலிகளின் யோசனையை தூக்கி எறிந்துவிட்டாரா ஜனாதிபதி
- குடாநாட்டின் இன்னொரு முகம்
- நவீன தொழில்நுட்பத்தை நாடும் தற்கால முடிச்சுமாறிகள்....!
- மசகு எண்ணெய்க்கு மவுசு குறைகின்றதா?
- சின்ன றோஜாக்களைக் கூட சிலுவையில் அறைந்த சிங்களம்...
- சனியின் பகைவீட்டுச் சஞ்சாரம் இலங்கையில் அமைதியைக் குலைக்கும்?

இவற்றுடன்

★ யாரொடு நோவோம்! ★ கடுகுக் கதை ★ கவிதைகள் ★ நினைக்க.... சிரிக்க... சிந்திக்க...

## ஜெனீவா மாநாட்டுத் தீர்மானம் நல்லதொரு சமிக்ஞையாக அமையும்

### சுவிஸ் வெளிவிவகார அமைச்சு அதிகாரி நம்பிக்கை

ஜெனீவா,ஒக்.3

இலங்கையில் போர்நிறுத்தமும் அமைதி முயற்சிகளும் பெரும் ஆபத்துக்குள் சிக்கியுள்ளன. இந்நிலையில் ஜெனீவாவில் விடுதலைப் புலிகள் நடத்தும் மாநாடு மூலம் எடுக்கப்படும் தீர்மானம் நல்லதொரு செய்தியைத் தரும் என நம்புகிறோம்.

சுவிஸ் வெளிவிவகார அமைச்சின் முதன்மை அதிகாரி ஏ.எம்.பி.இம்கோவ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுவிற்ஸர்லாந்துக்குச் சென்றுள்ள விடுதலைப் புலிகளின் உயர்மட்ட அரசியல் குழுவினர், மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் தலைமையில் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினர்.

சுவிஸ் அரசு வடக்கு - கிழக்கு புனரமைப்புக்கு உதவி வழங்கி வருவதற்கும் உயர்மட்ட மாநாடு ஒன்றை அங்கு நடத்த உதவியதற்காகவும் அன்ரன் பாலசிங்கம் தமது இயக்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்தார். பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக தமது அமைப்பின் நிலைப்பாட்டை அவர் விளக்கிக் கூறினார்.

அதன் பின் அங்கு உரையாற்றிய சுவிஸ் முதன்மை அதிகாரி இம்தோவ் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச அமைதிக்கான நகரமாக விளங்கும் இந்த நகரத்தில் கூடியிருக்கின்றீர்கள். தடைப்பட்டுப்போயுள்ள பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான முடிவுகள் எடுக்கப்படும் என நம்புகிறோம்.

இந்த மாநாடு சமாதான முயற்சிகளின் நல்லதொரு சமிக்ஞையாக அமையும் எனக் கருதுகிறோம். இந்த முடிவுகள் நோர்வே மற்றும் ஸ்ரீலங்கா அரசுகளுக்கு நல்ல செய்தியாக அமையும்.

இலங்கையில் நாளாந்தம் மோசமடையும் நிலைமையையிட்டு சுவிஸ் அரசு கவலையடைகின்றது. போர்நிறுத்தமும் பேச்சுக்களும் பெரும் ஆபத்தில் சிக்கியுள்ளன. இதிலிருந்து விடுபடவேண்டும். சுவிஸ் அரசு சமாதான முயற்சிகளுக்குத் தொடர்ந்து ஆதரவை வழங்கும் - என்று தெரிவித்தார். (ஐ-3)

## ஆலோசனைக் கவுன்ஸில்: முதல் கூட்டம் நாளை

கொழும்பு,ஒக்.3

சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான தேசிய ஆலோசனைக் கவுன்ஸிலின் அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை நடைபெறவிருக்கின்றது. இக்கூட்டத்தில் அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மட்டுமே பங்குபற்றும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதியால் கூட்டப்படும் இக்கூட்டத்தில் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவும், தமிழ்க்கூட்டமைப்பு, ஜாதிக ஹெலஉறுமய, மலையக மக்கள் முன்னணி ஆகியனவும் பங்குபற்றுவதில்லை என முடிவுசெய்துள்ளன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இக்

(16ஆம் பக்கம் பார்க்க)

தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் பற்றி

## ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச அனுமதி கோருகிறது மு.காங்கிரஸ்

கொழும்பு,ஒக்.3

சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான தேசிய ஆலோசனைக் கவுன்ஸிலின் கூட்டத்தில் பங்குபற்றுவது குறித்து தீர்மானிப்பதற்கு முன்பாக அந்தக் கவுன்ஸிலின் செயற்பாடுகள் குறித்து மேலும் விளக்கம் தேவை என்றும் -

அது தொடர்பாகக் கலந்துரையாடுவதற்குச் சந்தர்ப்பம் தரும்படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதியிடம் கேட்டிருக்கிறது.

ஜனாதிபதிக்கு நேற்று அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் இப்படிக் கேட்டுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எதிர்கால சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்களின் சுதந்திரமான தனியான தூதுக் குழு பற்றியும் அதனூடாக அவர்களது அபிலாஷை

(16ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த சில தினங்களுக்கு மழை தொடரும் அறிகுறி

கொழும்பு,ஒக்.3

அடுத்துவரும் சில தினங்கள் நாடளாவிய ரீதியில் கடும் காற்றோடு கூடிய மழை பெய்யும் என்று வானிலை அவதான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வங்களா விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் தீவிரம் அடைந்துள்ளது. இதனால் கடும் காற்றுடன் கூடிய மழை மேலும் சில தினங்களுக்கு நீடிக்கும். ஆனால் சூறாவளி ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவாகவே உள்ளன. குறிப்பாக கிழக்கு மாகாணம், சப்ரகமுவா மாகாணம் ஆகிய இடங்களில் நாட்டின் ஏனைய பகுதிகளை விட அதிகமான மழை பெய்யும். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை

காங்கேசன்துறை, பொத்துவில் ஆகிய பகுதிகளில் கடற் கொந்தளிப்பு வழமையை விட சற்று அதிகமாக இருக்கும். இதனால் கடற்றொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவிக்கப்பட்டது.(ஐ-5)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# உதைபந்தாட்ட நடுவர் மீது பாடசாலையில் தாக்குதல்!

யாழ்ப்பாணம்,ஒக்.3

தெல்லிப்பழைக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டியில் கடமையாற்றிய மத்தியஸ்தர் ஒருவர் குறிப்பிட்ட பாடசாலையைச் சேர்ந்தவர்களால் தாக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும் அளவெட்டி அருணோதயக் கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற இறுதிப்போட்டி முடிவடைந்ததைத் தொடர்ந்து இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறிப்பிட்ட ஒரு பாடாசாலையின் பயிற்றுவிப்பாளர் ஒருவரின் ஏவலில் அவரது சகாக்களே பிரஸ்தாப மத்தியஸ்தரைத் தாக்கினார்கள் என்று கூறப்பட்டது.

இதேநேரம், உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள், தாக்குதலில் ஈடுபட்ட தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்வரை போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களை அனுப்புவதில்லை என்று தீர்மானித்துள்ளனர்.

ஏற்கனவே, மத்தியஸ்தர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

இப்போது அதுபோன்ற மற்றுமொரு சம்பவம் இடம்பெற்றிருப்பது குறித்து மத்தியஸ்தர்கள் மத்தியில் கடும் விசனம் தெரிவிக்கப்பட்டது.

(4-68)

# தொண்டர் ஆசிரியர் விவரங்களை அனுப்புமாறு அதிபர்களிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.3

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தொண்டர் ஆசிரியர்களாகத் தற்போது பணியாற்றிக் கொண்டிருக்கும் ஆசிரியர்களது விவரங்களை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாகத் திரட்டுவதற்கு மாகாணக் கல்வித்திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தனியார் நிறுவன அனுசரணையுடன் பணியாற்றும் ஆசிரியர் உட்பட அரச வேதனம் பெறாது ஆசிரிய சேவை ஆற்றும் அனைவரது விவரங்களை வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பிவைக்குமாறும் அதன் பிரதியினை உடனடியாகத் தனக்கு அனுப்பிவைக்குமாறும் வடக்கு - கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் இ.விசாகலிங்கம் சகல அதிபர்களையும் கேட்டுள்ளார்.

அனுப்பப்படவேண்டிய அறிக்கையில் பாடசாலையின் பெயர், தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றும் ஆசிரியர்களின் பெயர், கற்பிக்கும் பாடம், தற்போது சேவையாற்றும் பாடசாலைக்கு இணைக்கப்பட்ட திகதி என்பனவற்றை உள்ளடக்கியதாகக் கல்வி அலுவலகத்தினால் அனுமதிக்கப்பட்டிருப்பின் அக்கடித இலக்கம், திகதி என்பனவற்றையும் சேர்த்து அனுப்பிவைக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

(3)

# தீவகத்தில் இருந்து 47 ஆசிரியர்கள் வேறு வலயங்களுக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம்,ஒக்.3

தீவகப் பாடசாலைகளில் தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் கடமையாற்றிய 47 ஆசிரியர்கள் ஜனவரி மாதம் தொடக்கம் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை யாழ். கல்வி வலயத்தில் அதிகாரிகளுடன் நடைபெற்ற சந்திப்பில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கஷ்ரப் பிரதேசமான தீவகக் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் 47 ஆசிரியர்களை யாழ். கல்வி வலயம் மற்றும் வலிகாமம் கல்வி வலயத்துக்கு உள்ளக இடமாற்றம் செய்வது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவர்களுடைய இடத்துக்கு யாழ். கல்வி வலயம் மற்றும் வலிகாமம் கல்வி வலயங்களிலுள்ள பாடசாலைகளில் ஐந்து வருடங்கள் தொடர்ச்சியாகக் கடமையாற்றிய 47 ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

இதேவேளை, தீவகக் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் 90 ஆசிரியர்களுக்கான வெற்றிடம் நிலவுவதாகக் கூறப்பட்டது.

(3-7)

# பாதாளக் குழுக்களுடன் தொடர்புடைய அரசியல்வாதிகளின் பட்டியல் தயார்!

## ஆனால் நடவடிக்கை எடுக்கமுடியாதாம்

கொழும்பில் இயங்கிவரும் பாதாள உலகக் கோஷ்டியினருடன் நேரடியாகத் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் முன்னாள் மற்றும் தற்போதைய அமைச்சர்கள், அரசியல்வாதிகள் ஆகியோரின் பெயர்ப் பட்டியல் அடங்கிய விவரங்களைக் குற்றத்தடுப்புப் பொலீஸார் சேகரித்துப் பொலீஸ் திணைக்களத்துக்கு வழங்கியுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

குறிப்பிட்ட அரசியல்வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தால் அது ஓர் அரசியல் பிரளயமாகிவிடும் என்ற காரணத்தால் பொலீஸ் திணைக்களம் இந்த விடயத்தில் அடக்கி வாசிக்க வேண்டிய ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது எனப் பொலீஸ் தலைமையகத்தில் - தனது பெயரை வெளியிட விரும்பாத - உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் படுபாதகமாகச் செயல்களைப் புரிந்த பல நபர்களைக் கைதுசெய்ய எத்தனித்த சமயங்களில் அரசியல்வாதிகளின் நேரடித் தலையீடு காரணமாக அதைக் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே கைதுசெய்யப்பட்டுச் சிறையில் வைக்கப்பட்டிருப்பவர்கள் சுகபோகமாகச் சிறைவாசத்தை அனுபவிக்கின்றனர். அவர்கள் சிறையில் இருந்து விடுக்கும் உத்தரவுக்கு அமைய வெளியில் உள்ள அவர்களின் சகாக்கள் செயற்பட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் பொலீஸ் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் 28 பாதாள உலகக் குழுக்கள் கொழும்பில் செயற்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ஐ-க)

## பயிற்சிநெறியும் ஒன்றுகூடலும்

யாழ்ப்பாணம்,ஒக்.3

யாழ். மாவட்டத்தில் மக்கள் நலன்புரிச் சங்கமும் படையணிகளில் அங்கம் வகிக்கும் பாடசாலை ஆசிரியர்களுக்கான தகுதிகாண் விரிவுரையாளர் பயிற்சிநெறியும் ஒன்றுகூடலும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளன.

இப்பயிற்சிநெறியில் வீதி ஒழுங்கு மற்றும் முதலுதவி தொடர்பான பயிற்சிகள் இடம்பெறும். அத்துடன் ஆசிரியர்களுக்கான சங்க செயற்பாட்டு நியமனக் கடிதம் யாழ். மேலதிக அரச அதிபரால் வழங்கப்படவுள்ளது. (3)

# மாவீரர் தினத்தை முன்னிட்டு மாபெரும் நாடகப் போட்டி

யாழ்ப்பாணம்,ஒக்.3

மாவீரர் தினத்தை முன்னிட்டு இணுவில் கிழக்கு கலாஜோதி சனசமூக நிலையத்தினர் மாபெரும் நாடகப் போட்டி ஒன்றினை நடத்தவிருக்கின்றனர்.

எதிர்வரும் நவம்பர் மாதம் திறந்தமுறையில் நடத்தப்படவிருக்கும் இப்போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றன.

'மாவீரர் தியாகம்', 'தேச விடுதலைக்கு உரமிடுவோம்', 'சமாதானம் மலருமா?' போன்ற விடயங்களில் ஏதாவது ஒன்றை மையப் பொருளாகக் கொண்டு நாடகம் அமைதல் வேண்டும் என்றும் -

இதில் பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன் கலாஜோதி சனசமூக நிலையம், தியேட்டர் வீதி, இணுவில் கிழக்கு, இணுவில் என்ற முகவரிக்கு நேரிலோ தபால் மூலமோ தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டிருக்கிறது.

இதில் முதல் மூன்று இடங்களையும் பெறும் நாடகங்களுக்கும் சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த இயக்குநர் ஆகியோருக்கும் பரிசில்கள் வழங்கப்படவிருக்கின்றன.

(4-5)

# எமது வரலாற்றின் ஞாபகங்களை நாள் தோறும் இழந்து வருகிறோமா?

தேசியம் ஒரு பிரக்ஞை நிலை என்பார்கள். இந்த பிரக்ஞை உருவாக்கத்தில் கடந்த கால ஞாபகம் அல்லது நினைவு என்பது மிக முக்கியமானது. இவைதான் சமூகத்தை ஒன்றுபடுத்தி வைத்திருக்கும் இழையாகக் காணப்படுகின்றன. பொது ஞாபகங்கள் இல்லாதபோது அங்கு தேசம் இருப்பதில்லை என்பதுடன், ஞாபகங்கள்தான் குறித்த சமூகத்திற்குத் தனிப்பண்பை வழங்குகின்றன. இதனால்தான் தேசங்கள் தமது ஞாபகங்களைப் பாதுகாக்க ஞாபகச் சின்னங்களையும், நினைவிடங்களையும், அருமபொருளகங்களையும் கொண்டுள்ளன. இதனூடு அவை தமது பெறுமதியற்ற நினைவுகளை அடுத்த சந்ததிக்கும் பிற பண்பாட்டிற்கும் கைம்மாற்றுகின்றன. இன்றைய தகவல் புரட்சியிலும், தொழில்நுட்ப வளர்ச்சியும் அனைத்து தேசங்களுக்கும் பொதுவாகியுள்ள நிலையில் இந்தத் தேசங்கள் தமது அடையாளத்தைத் தமக்குத் தனித்துவமான ஞாபகங்களினூடுதான் தக்கவைத்துக்கொண்டுள்ளன. மறுதலையாக, இன்றைய பண்பாட்டு அரசியலில் ஞாபகங்களே குறித்த சமூகத்தின் அதிகாரத்தையும் கட்டியமைக்கின்றன. இந்தநிலையில், இருபதுக்கும் மேற்பட்ட வருடங்களாகப் போரின் இரத்தம் தோய்ந்த யதார்த்தங்களைச் சந்தித்த சமூகம் என்றவகையில், எமது ஞாபகங்களை அடுத்தவர்களுக்குக் கைம்மாற்ற நாம் என்ன செய்துள்ளோம்? என்ன செய்யப்போகிறோம்? என்பது நம்முன்னே உள்ள கேள்வியாகும். மாவீரர்கள் நினைவு தினங்களையும், நினைவுச சின்னங்களையும் தவிர, எமது போர்க்கால வாழ்வின் நினைவிடங்கள் எம்மிடம் இல்லை என்பது இந்தவகையில் அச்சமூட்டும் யதார்த்தமாகிறது. இவ்வாறு ஞாபகங்கள் நினைவுபடுத்தப்படாதபோது நாம் யாராலும் சுலபமாக ஆளப்படவும், ஆட்கொள்ளப்படவும், மந்தைகளாக நடத்தப்படவும் கூடியவர்களாக மாறுவதுடன் எமது சுயத்தை இழந்து அந்நிய மோகத்தில் திளைக்கக் கூடியவர்களாகவும் ஆகிவிடுகிறோம்.

எரியூட்டப்பட்ட யாழ். நூலகம் அந்த வகையில் மிகவும் முக்கியமான ஒரு ஞாபகச் சின்னம். ஆனால், அது இச்சமூகம் விளிப்படைய முன்னரே வெள்ளையடிக்கப்பட்டுவிட்டது. எமக்கு ஞாபகச் சின்னங்களின் முக்கியத்துவம் தெரிந்த அளவிலும் அதிகமாகவே அரசு அதைப் புரிந்து வைத்துள்ளது. அதனால்தான் தமிழ்த் தேசியத்திற்கு அடிப்படையான வரலாற்றுச் சின்னங்களை அழித்து வந்த அரசு, யாழ்ப்பாணம் கட்டுப்பாட்டுக்குள் வந்தவுடன் இந்த நூலகத்தை வெளிநாட்டு உதவியுடன் வெள்ளை அடித்தது. இதைப் பார்த்து நாம் மௌனித்திருந்தோம். இன்றுவரை அது எரியூட்டப்பட்டது என்ற ஒரு குறிப்புப் பலகையைக் கூட நிறுவத் தவறியுள்ளோம். ஆனால், தலதா மாளிகை ஒரு வணக்கத் தலமாக இருந்தாலும் அதன்மீது நிகழ்ந்த குண்டுத் தாக்குதலைச் சித்திரிக்கும் பாரிய புகைப்படங்களைக் கொண்ட காட்சியகம் அந்தக் கட்டடத்தினுள் காணப்படுகிறது. இதனூடாக அதனைக் காணத் தினமும் வரும் பக்தர்களிடத்திலும் உல்லாசப் பிரயாணிகளிடத்திலும் இக்கட்டடம் பற்றிய ஒரு ஞாபகத்தைப் பகிர்ந்து கொள்கிறது. இதனூடு தமிழர்கள் 'காட்டுமிராண்டிகள்' என்றும் அவர்களது போராட்டம் "காட்டுமிராண்டித்தனமானது" என்ற செய்தி சொல்லாமல் உணர்த்தப்படுகிறது. ஆனால், நாம் வெளிநாட்டு உதவி என்ற பெயரிலும் மீள்கட்டுமானம் என்ற பெயரிலும் எமது ஞாபகங்களை நாள்தோறும் இழந்து வருகிறோம். சிங்களவர்கள் எமது இறந்தகால வரலாற்றைத் திரித்தார்கள் என்று அவர்களைக் குற்றஞ்சாட்டும் எமது அரசியல்வாதிகளும் புத்திஜீவிகளும் இன்றைய எமது ஞாபகத்தை, வரலாற்றைக் காப்பாற்ற என்ன செய்தார்கள்? நாமே போதும் எமது அடையாளங்களையும் துயரங்களையும் அழிக்க இழப்புக்களைச் சொல்லி நிவாரணம் பெறுவதா அல்லது இழப்புக்களின் பொது ஞாபகத்தில் ஒரு தேசத்தை நிர்மாணிப்பதா என்ற கேள்வியே இன்று எம்முன் உள்ளது.




இந்தக் கேள்விக்குத் தேசமே முக்கியம் என்கின்ற பதிலை அகம் - புறம் என்ற காண்பியக்காட்சி தருகிறது. இந்தக் காட்சியானது தென்னிலங்கையில் ஜே.வி.பி. கிளர்ச்சியையும் அரச வன்முறையினது ஞாபகங்களையும் வடக்கு - கிழக்கு யுத்த வடுக்களின் நினைவுகளையும் புறவுருவப்படுத்தி மற்றவர்களுடனும் எம்முடனும் பகிர்ந்துகொள்கிறது. சேது - காண்பியக் கலைக்கான கற்கைப் புலத்தாலும் தீர்த்த சர்வதேச கலைஞர்களின் கூட்டிணைப்பாலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக்காட்சியானது, தானே வரலாறாகிப்போன யாழ். பொது நூலகத்தில் கடந்த செப்ரெம்பர் 5ஆம் திகதி முதல் இம்மாதம் 5ஆம் திகதி வரை நடந்து வருகிறது. பொதுமக்கள் சார்பான யுத்தத்தின் வடுக்களை ஞாபகப்படுத்தல் என்ற வகையிலும், காண்பியக்கலை வெளிப்பாட்டில் அவற்றை வெளிக்கொணர்தல் என்ற வகையிலும் இது பாரிய முதல் முயற்சியாகும்.

எரிந்துபோன உணவைக் கொண்ட 'சாப்பாட்டு மேசை', புளுத்து நாறும் 'சுவர்க்கத்துப் பொய்கை', செல்லரித்த புத்தர் சிலைகள், ரயரால் எரியூட்டப்பட்ட உடலின் எஞ்சிப்போன 'கரங்கள்' காணாமற்போனவர்களின் ஒற்றைச் செருப்புகள், கால்சட்டைகள், எரியூட்டப்பட்ட நாள்காட்டி என பல தென்னிலங்கைப் படைப்புகள் வன்முறையை ஞாபகமூட்டுகின்றன. எமது உடனடி சமகால அனுபவத்தை எவ்வாறு கலையில் பேசலாம் என்பதற்கும் அவ்வாறு பேசப்படுகையில் அது எப்படித் தனித்துவமான மொழியாகிறது என்பதற்கும் இது ஓர் எடுத்துக்காட்டு. அத்துடன், யாழ்ப்பாணத்துக் கலைஞர்களாலும் மக்களாலும் தொகுக்கப்பட்டுள்ள 'வரலாறுகளின் வரலாறு' என்ற பாரிய தாபனக் கலைப்படைப்பானது பொதுமக்கள்சார் போர் பற்றிய நினைவுச் சின்னமாகியுள்ளது. ஒவ்வொரு வீட்டில் இருந்தும் பெறப்பட்ட போரின் ஞாபகம் சம்பந்தமான ஒரு பொருள் என்பது இங்கு தொகுக்கப்பட்டு சமூகத்தின் பொது ஞாபகமாகக் கட்டியமைக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் எம்மையே மறந்த எமது அண்மைக் கால ஓட்டங்களுக்குள், எம்மைச் சற்று நேரம் நிறுத்தி, சற்று நேரம் எம்மைப் பழைய காலத்திற்கு அழைத்துச் சென்று எமது நிகழ்கால இருப்பின் பெறுமதியை, அர்த்தத்தை இது உணரவைக்கிறது.

**ஆர்.விதுரன்**

பொது நூலகக் கட்டடத்துள் இது ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதால் அது அக்கட்டடம் பற்றிய ஞாபகங்களையும் கிளர்த்திவிடுகிறது. வெள்ளையடிக்கப்பட்ட சுவர்களினுள் உள்ள குண்டு காயங்களையும் பழிங்குத் தரைக்கு கீழ் உள்ள புத்தகங்களின் சாம்பல்களையும் ஞாபகப்படுத்த ஒரு சந்தர்ப்பத்தை இக்காட்சி வழங்கியுள்ளது. இதைப் பார்வையிடப் பெருந்தொகையானோர் தினமும் வருகிறார்கள். இக்கண்காட்சி இம்மாதம் 5ஆம் திகதியுடன் முடிவடைந்தாலும் இப்பேர்ப்பட்ட ஞாபகங்களைத் தொடர்ந்து பேண ஏதாவது முயற்சி செய்யப்படவேண்டும். இந்தப் பணி சமூக அக்கறை கொண்ட அனைவர்களதும் பணியாகும். அதற்கு முன்னர் இக்காட்சியை அனைவரும் ஒரு முறையாவது காணவேண்டும். ★

| | | | |
|---|---|---|---|
| | ரா. | சந். | சனி |
| | இராசிச் சக்கரம் | | வெ. |
| | | | |
| | | கே. | சூரி. ▲ வி. செ. புதன் |

# இந்த வார இராசி பலன்

## 03.10.2004 – 09.10.2004

★ 03.10.2004இல் கார்த்திகை 4 - இடபத்தில் சந்திரன் நிற்கும்.

★ 08.10.2004இல் புதன் துலாம் இராசிக்கு மாறும்.

### மேடம்

நன்மைகள் அதிகரித்தாலும் ஒருசில கௌரவக் குறைவான சம்பவங்கள் நடக்கும். புத்திரர் சிறப்பு மகிழ்ச்சி அடைவர். பொருளால் வேதனை கொடுக்கும். மேலதிகாரிகள் உதவிகள் செய்வார்கள். விருந்து கிடைக்கும். வயிற்றில் வருத்தம், சிந்தனை வேகம் அதிகரிக்கும்.

அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வியாழன்.

### இடபம்

புதிய எண்ணம், சிந்தனை நன்மை தரும். தொழில் சித்தி, பண வரவு எதிர்ப்பாலார், தாய் வழி உதவி கிடைத்தல், வீட்டில் கலகலப்புக் கொடுக்கும். பெரியவர்க்ளின் உதவிகள் கிடைக்கும். இடமாற்றங்கள் சிலருக்குக் கொடுக்கும். சளித்தொல்லை, காலில் காயங்கள் ஏற்படும். முதுகுநோ சிலருக்குக் கொடுக்கும். குருத்துறையினருக்கு அதிக நன்மைகள் ஏற்படும்.

அதிர்ஷ்டநாள்: வியாழன்.

### மிதுனம்

உலகப் போகப் பொருள்களுக்காகப் போராட்ட நிலை. கலைத் தொடர்பு, சினிமா மோகம், அதிக செலவுகள் கொடுக்கும் நிலை ஏற்படும். அடிகாயங்களுக்கு வைத்தியம், புதிய திட்டங்கள், தொழில் முன்னேற்றம் கொடுக்கும் நிலை தோன்றும். தரகு வேலை கம்பியூட்டர், ரீ.வி., வீடியோ சம்பந்தமான துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

அதிர்ஷ்டநாள்: வியாழன்.

### கடகம்

உறவினர் கொண்டாட்டம், உழைப்பில் கவனம், அடிக்கடி மனப்பயம், பொருள் இழப்பொன்று கொடுக்கும். மேலதிகாரிகள் நன்மைகள் செய்வார்கள். புதிய துறையில் நாட்டம். வெளிநாட்டுச் செய்திகள் வரும். குருத்துறையினர்கள், அரசியல்வாதிகள் நன்மைகள் அடைவார்கள்.

அதிர்ஷ்நாள்: வியாழன்.

### சிங்கம்

குடும்பத்தில் கொண்டாட்டம். உறவினர்கள் வருகை, பிடிவாதத்தனம், திருமணப் பேச்சு வந்துபோகும். தெய்வ வழிபாடு, வசீகரப் பேச்சு, தூர தேசத் தொடர்பு இருக்கும். வீட்டுச் செலவு அதிகரிக்கும். பிரயாண மிகுதி, ஆனால், பணவரவு குறைவு. நாரி உளைவு. குருத்துறையினர்கள், வியாபாரிகள் நன்மைகள் அடைவார்கள்.

அதிர்ஷ்டநாள்: வியாழன்

### கன்னி

போராட்டம் குடும்பத்தில் கொடுக்கும். இடமாற்றங்கள் சகஜம். கருத்து வேற்றுமை ஏற்படும். பொருள் செலவுகள் அதிகரிக்கும். இனஜனக் கொண்டாட்டங்கள் அதிக செலவுகள் கொடுக்கும். சளித்தொல்லை, கை, கால் விறைப்பு வரும். சிறுநீர்ப் பாதிப்பு சிலருக்குக் கொடுக்கும். எதிர்ப்பாலாருடன் நிதானமாக இருக்கவும். வியாபாரிகள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வியாழன்.*

### துலாம்

உழைப்புச் சிந்தனை, பண வரவு, தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்கள் வெற்றி தரும். புத்திரரின் கல்விக்காக அதிக செலவு செய்தல், சிலர் பண விசயமாகப் பிரச்சினைப்பட இடமுண்டு. தோல் வருத்தம், சளித்தொல்லை, கை, கால் பிடிப்பு உண்டு. வியாபாரிகள், சட்டத்துறையினர் நன்மைகள் அடைவார்கள்.

அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வியாழன்.

### விருச்சிகம்

உறுதியான நிலைப்பாட்டில் இருப்பீர்கள். வரவு - செலவு சமமாகும். பொருள்களில் கவனம். களவு போகலாம். இடமாற்றங்களால் சலனம் ஏற்படும். அயலவர்களால் வேதனை, பயம் கொடுக்க இடமுண்டு. குளிர், விறைப்பு, சளித்தொல்லை, வயிற்று நோ கொடுக்கும். தொழில் நிலையில் புதிய திட்டமிட்டு வெற்றி அடைவீர்கள். வியாபாரிகள், இரும்பு வாகனம் தொடர்பானவர்கள் நன்மை அடைவார்கள்.

அதிர்ஷ்டநாள்: திங்கள்.

### தனுசு

உடல் நிலையில் நீங்களும் வட்டுக்காரரும் கவனமாக இருக்கவும். சனீஸ்வர தாக்கம் இருப்பதால் போக்குவரத்தில் கவனமாக இருக்கவும். இடமாற்றங்களால் நன்மைகள் ஏற்படும். குடல் வருத்தம், கால் உளைவு, சளித்தொல்லை கொடுக்கும். பண வரவு கொடுக்கும். தொழில் ஸ்தானத்தில் புதியன புகுத்தப்படும். குருத்துறையினர், வியாபாரிகள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, திங்கள்.*

### மகரம்

தொழில் ஸ்தானத்தில் நன்மைகள் கொடுக்கும். பெரியவர்கள் உதவுவார்கள். சட்டப்படி செயற்படாவிடில், தண்டனை கிடைக்க இடமுண்டு. மனக் குழப்பம் வரும். குடும்பத்தில் அபிப்பிராய பேதமுண்டு. கால் உளைவு கொடுக்கும். தோல் வருத்தம், சளித்தொல்லை உண்டு. கொடுக்கல், வாங்கலில் நிதானம் அல்லது குடும்பத்தில் பிரச்சினை வரும். நண்பர்கள் உதவுவார்கள். தொழில்நுட்பவியலாளர், ஊடகவியலாளர், ஆசிரியர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, திங்கள், வியாழன்.*

### கும்பம்

உற்சாகமான காலமாகும். தொழில் ஸ்தானத்தில் மாற்றங்கள் ஏற்பட இடமுண்டு. பண வரவில் சிக்கலுண்டு. இடமாற்றம் நன்மை தரும். உறவினருக்கு உதவுதல், சில பொருள் இழப்புகள் சிலருக்குத் திடீரெனக் கொடுக்கும். இடமாற்றங்களால் புதிய நண்பர்கள் சேருவர். கால் வருத்தம், சளித்தொல்லை கொடுக்கும். ஆசிரியர்கள், வியாபாரிகள் ஆகியோர்களுக்கு நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, திங்கள், வியாழன்.*

### மீனம்

தொழில் ஸ்தானத்தில் பதட்டநிலை ஏற்படும். பொருள் வரவு கொடுக்கும். மேலதிகாரிகள், சக ஊழியர்கள் உதவி தருவர். பொருள் களவுபோகலாம். பணத்தால் கவலை வரும். சல வருத்தம், கால் உளைவு கொடுக்கும். வியாபாரிகள், மருந்து தொடர்பானவர்கள் நன்மைகள் அடைவார்கள். தூர இடங்களுக்குப் பிரயாணங்களைத் தவிர்க்கவும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: ஞாயிறு, திங்கள், வியாழன்.*

**மகாதேவா ஜோதிடம்**

SPECTRUM

Professional Certification in Network Engineering

- A+
- MCSA
- MCSE
- LINUX
- CCNA

Make your registration before October 7th

Diploma Programmes

Ms Office

Web Programming

Diploma in Hardware & Networking

Head Office
No 39, Level 4 Alfred Place
Colombo 3
Tel: - 2370820-1
E-Mail :- spectrum@vinet.lk

Branch Office
711, K.K.S Road
Jaffna.
Tel:-0212226188
E-Mail :- vgkjaffna@spectrum.lk

Hot Line :- 0714-806030

Vishva Grama Kendram · eSri Lanka · ICTA

SPECTRUM INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY

# மாலதி நினைவுதின மகளிர் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.3

மாவீரர் 2ஆம் லெப்.மாலதியின் 17ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத்துறை நடத்தும் மகளிருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 7ஆம் திகதி கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த 8 மாவட்டங்களின் மகளிர் அணிகள் பங்குபற்றவுள்ளன.

இப்போட்டியில் பங்குபற்றுவதற்கெனத் தெரிவுசெய்யப்பட்ட யாழ். மாவட்டத் தெரிவு அணி வீராங்கனைகளை இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். பல் கலைக்கழக விளையாட்டு மைதானத்திற்குச் சமுகமளிக்குமாறு அணிப் பயிற்றுவிப்பாளர் கேட்டுள்ளார். (4-5)

# லயன்ஸ் கழகம் நடத்தும் விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஒக்.3

மானிப்பாய் பரிஸ் லியோக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக சைக்கிள் ஓட்டப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் ரி.ஞானானந்தன், திட்டப்பணிப்பாளர் மானிப்பாய் பரிஸ் லியோக் கழகம் இணுவில் என்ற முகவரியில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே கரம், செஸ் ஆகிய சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் 9ஆம், 10ஆம் திகதிகளில் மானிப்பாய் இந்துமகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் அதிபர்களூடாகக் கலந்துகொள்ளுமாறு திட்டப்பணிப்பாளர் ரி.ஞானானந்தன் அறிவித்துள்ளார். (4-5,185)

# புனித அந்தோனியார் கல்லூரி அணிகள் சம்பியன்களாகத் தெரிவு

வலி.வடக்கு,ஒக்.3

ஊர்காவற்றுறைக் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுக்போட்டிகளில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி இவ்வாண்டுக்கான 14, 16, 18 வயதுப் பிரிவுகளிடையே சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

14 வயதுப் பிரிவினர்களுக்கிடையேயான இறுதி ஆட்டத்தில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியும் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயமும் மோதின. இதில் புனித அந்தோனியார் கல்லூரி வெற்றிபெற்று கோட்டச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

3ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாலயமும் காரைநகர் யாழ்ரன் கல்லூரியும் மோதிக் கொண்டதில் காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாலயம் வெற்றிபெற்றது.

16 வயதுப் பிரிவினருக்கான இறுதி ஆட்டத்தில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியும் காரைநகர் யாழ்ரன் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இதில் புனித அந்தோனியார் கல்லூரி வெற்றிபெற்றது.

3ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயமும் அனலைதீவு சதாசிவம் வித்தியாலயமும் மோதின. கலாநிதி ஆ.தியாராசா மத்திய மகா வித்தியாலயம் 3ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

18 வயதுப் பிரிவினருக்கு இடையேயான இறுதி ஆட்டத்தில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியும் காரைநகர் யாழ்ரன் கல்லூரியும் மோதிக்கொண்டன.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இப்போட்டியில் புனித அந்தோனியார் கல்லூரி கோட்டமட்ட சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. 3ஆம் இடத்தைக் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம் பெற்றுக்கொண்டது.

முதல் மூன்று இடங்களையும் பெற்ற கல்லூரிகள் தீவக வலய மட்டத்தில் இடம்பெறவுள்ள போட்டிகளில் கலந்துகொள்வதற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இப்போட்டிகள் யாவும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன. (4-86)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் நேசலிங்கம் சசிகலதா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியான செல்வி சுவஸ்திகா 2004 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 140 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவருக்குக் கல்வி கற்பித்த ஆசிரிய சமூகத்தினருக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதுடன், இவர் மேலும் கல்வியில் சிறப்புற இறைவன் திருவருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

முனி கோயிலடி,
இருபாலை கிழக்கு,
இருபாலை.

அப்பா, அம்மா, அம்மப்பா,
அம்மம்மா, அப்பம்மா,
தங்கை துருஸ்திகா, மாமா,
மாமா குடும்பம், பெரியம்மாமார்
குடும்பம், சித்தப்பாமார் குடும்பம்.

(37124)(29-16-19)

## பரிசளிப்பு விழாவும் நூல்வெளியீடும்

நீர்வேலி ஸ்ரீமுருகன் அறநெறிப் பாடசாலையின் பரிசளிப்பு விழாவும் 'திருமாமலர்கள்' நூல் வெளியீடும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி கோயில் மண்டபத்தில் சிவஸ்ரீ கு.தியாகராஜக் குருக்கள் தலைமையில் இடம்பெறும் (4-72)

## விற்பனையாளர் கவனத்திற்கு!

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்ய விரும்பும் TEXTILES,
FANCY GOODS,
SPARE PARTS
எதுவாகஇருப்பினும்
குறைந்த செலவிலும்
குறுகிய காலத்திலும்
கூடிய பாதுகாப்புடனும் இறக்குமதிசெய்துதர தொடர்புகொள்ளவும்.

இந்தியாவில்: LIMRA IMPEX
Mr.JAUFER SADHIK
-009144 31018074
Mr.LIYAKATHALI -0091 9282164510
No;17ராமசாமி தெரு, மண்ணடி, சென்னை.
இலங்கையில்: MUHUSIN IMPEX
Mr.S.M.MUHUSIN-071 4924020
-011 2718607
No:75/1/3 டாம் வீதி, கொழும்பு -11

(சி-37961)(29-16-19)

## வைத்தியர் தேவை

எமது கமலா வைத்திய நிலையத்திற்குப் பகுதி நேரமாக கடமையாற்றுவதற்கு வைத்தியர்கள் தேவைப்படுகின்றனர்.

B.S.M.S. - பெண் வைத்தியர்
R.M.O வைத்தியர்

சுய விவரத்துடன் தொடர்புகொள்ளவும்.

T.P.:021 222 2537

நிர்வாகி,
கமலா வைத்தியசாலை,
651, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(37130)(29-16-19)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்மகிழ | | கண்நெகிழ |
|---|---|---|
| 11 - 09 - 1934 | | 29 - 09 - 1999 |



### அமரர் வேலாயுதர் கந்தையா

(ஓய்வுபெற்ற கணக்காய்வு அத்தியட்சகர்)

திதி: 03.10.2004

ஐந்து ஆண்டுகள் ஆறவில்லையே! – கவலை
சிந்தையில் நினைவலைகள் சிறிதும் சிதையவில்லை!
காலனவன் கணப்பொழுதில் கணக்கைமுடித்து விட்டான்
பாரினில் தமியேன் தனிமையாய் இருக்க விதி
தேற்றுவார் யாருமின்றி தினம் அழுகின்றேன்.

ஆத்மாசாந்தியடைய இறைவனை இறைஞ்சுகிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிள்ளையார் வீதி முகப்பு,
அளவெட்டி.

பாசமிகு மனைவி
கந்தையா விக்னேஸ்வரி.

(37122)(29-16-19)

# LONDON ENGLISH COLLEGE

G.C.E. O/L

2004 DECEMBER

ENGLISH LITERATURE

Revision classes.

October and November

Commence on Sunday

10 th Oct. 2004 at 4 p.m.

Registrations on...

-Principal.

(சி-37966)(29-16-19)

SPECTRUM INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY

SPECTRUM
HUMAN CAPITAL DEVELOPMENT
Professional Certification in Network Engineering

A+
MCSA
MCSE
LINUX
CCNA

MCSE Classes Starting on 10 th of October 2004

Branch Office
No :- 711, K.K.S Road, Jaffna.
Tel :- 021-2226188
E-Mail :- vgkjaffna@spectrum.lk

உலக அறிவியல் நிலையம்
Vishva Gnana Kendram

SPECTRUM
Spectrum Institute Of Science & Technology

e Sri Lanka
Smart People Smart island

ICTA Information and communication Technology Agency of Sri Lanka

Ceycom

## மரண அறிவித்தல்

### திருமதி சரவணபவன் சறோஜினி

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரவணபவன் சறோஜினி 29.09.2004 புதன்கிழமை காலமானார்.

அன்னார் சரவணபவனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராசதுரை - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற குமாரசாமி (சொக்கலிங்கம் ஆசிரியர்) மற்றும் இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் சசிதரன் (கனடா), சகிலா (ஜேர்மனி), சகிரதா (ஜேர்மனி), உஷாயினி (லண்டன்), சஜிதா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் அடுல்டா (கனடா), துஷ்யந்தன் (ஜேர்மனி), நல்லைநாதன் (ஜேர்மனி), யுவனேந்திரன் (லண்டன்), தில்லைராஜன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் பொதைன் யசிகா, சுஜன் யசிர்தன், நிரோஜன், ஜினோதன், நதினி, தவின், கஜோதா, யோந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் சுந்தரலிங்கம் (நோர்வே), பாலச்சந்திரன் (லண்டன்), தேவகுமார் (கனடா), சித்திரா (ஆஸ்திரேலியா), யசோதா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாக்கியநாதன, பத்மாதேவி, முத்துக்குமாரசாமி, யசோதா, உருத்திராதேவி, பாசுபதன, வாசவன், கெங்காதரன், ஜங்கரன் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.30, குகன் வீதி,
அரியாலை.

தகவல்:
சரவணபவன் (கணவர்).

(37123)(29-16-19)

## விற்பனை முகவர்களிற்கான

# கேள்வி கோரல்

### யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிற்கான உப்பு விநியோகம்

மேற்குறிப்பிட்ட சேவைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் பதிவுசெய்யப்பட்ட விற்பனை முகவரிடம் இருந்து கோரப்படுகின்றன. கேள்விகள் ஆனையிறவு உப்பு உற்பத்திப் பேட்டைச் செயலகத்தில் மீளளிக்க முடியாத கட்டணம் ரூபா 1000/- செலுத்தி, கேள்விப் படிவத்தினை 10.10.2004 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் படிவங்கள் 15.10.2004 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகளைப் ***பணிப்பாளர், உப்பு உற்பத்திப் பேட்டை, பொருண்மிய மதியுரையகம், ஏ-9 சாலை, ஆனையிறவு*** என முகவரியிட்டுப் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கலாம்.

கேள்வி சமர்ப்பிக்கப்படும் கடிதஉறையில் இடதுபக்க மேல் மூலையில் தாங்கள் விரும்பும் மாவட்டங்களிற்கான பெயரைக் குறிப்பிட்டு உப்பு விநியோகம் என்று குறிப்பிட வேண்டும்.

மேலதிக விவரங்களை ஆனையிறவு உப்பு உற்பத்திப் பேட்டைச் செயலகத்தில் பி.ப. 2.00 மணிக்கு முன்னதாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**பணிப்பாளர்,
உப்பு உற்பத்திப் பேட்டை,
ஏ-9 சாலை,
ஆனையிறவு, பரந்தன்.**

(சி-37951) (42-29-16-19)

## கலந்துரையாடல்

முறைசாராப் போதனாசிரியர் உள்ளகப் பயிற்சியாளர்களுக்கான கருத்தரங்கு நாளையும் நாளைமறுதினமும் காலை 9.30 மணிக்கு கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாலயத்தில் நடைபெறும் என வலயக் கல்விப்பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் அறிவித்துள்ளார். (4-204)

# நெஞ்சை விட்டு நீங்கா நினைவலைகள்

| 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி | முதலாம் ஆண்டு நினைவஞ்சலி |
|---|---|
|  |  |
| அமரர் பொன்னம்பலம் பொன்னுத்துரை | திருமதி நாகபிள்ளை பொன்னுத்துரை |
| மலர்வு 27-12-1920 உதிர்வு 30-10-1995 | மலர்வு 06-03-1929 உதிர்வு 14-10-2003 |

புத்தம் புது பூவாய் புத்துயிர் தந்து
தாலாட்டுப்பாடி
அன்புடன் அரவணைத்து
ஆதரவுடன் கைகொடுத்து
தரணியில் எம்மை ஆளாக்கி
இன்று எம்மை தவிக்க விட்டு சென்றுவிட்டீர்களே...
என்றும் உங்கள் நீங்காத நினைவுகளுடன்
உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

நிரந்தர முகவரி:
வேலணை மேற்கு,
வேலணை- 07.

தற்போதைய முகவரி:
40/2, கோவில் வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவில் வாழ்கின்ற
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(37117)(39-29-16-19)

உதயன்

# அதிகாரப் பேராசையே தீர்வுக்கு முட்டுக்கட்டை

*"இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காணும் சமாதான முயற்சிகளை இழுத்தடிப்பு நடாகமாக்கியிருக்கிறார் ஜனாதிபதி." அதில் அவர் இரட்டை வேடமிட்டு நடிக்கின்றார்.*

*"ஜனாதிபதியின் இத்தகைய போக்கால் இந்த சமாதான முயற்சிகள் மீது புலிகளுக்கும், நாட்டு மக்களுக்கும் மட்டுமல்லாமல், முழு சர்வதேச சமூகத்துக்குமே சந்தேகம் முற்றி விட்டது."*

- இப்படி விசனத்துடன் விமர்சித்திருக்கிறார் முன்னாள் அமைச்சரும், ஐ.தே.கட்சியின் பேச்சாளருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

இந்த இரட்டைவேட நடிப்புக்கான உள்நோக்கம் என்னவென்பதை கடந்த வியாழனன்று கொழும்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரைச் சந்தித்த சமயம், தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் அவருக்கு விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கின்றனர்.

*"சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் ஜனாதிபதிக்கோ அவரது அரசுக்கோ அக்கறையேயில்லை. தமது அரசியல் எதிர்காலத்தை பாதுகாப்பதில்தான் அரசுத் தரப்பினரும் ஜனாதிபதியும் அக்கறை காட்டுகின்றனர்."* - என்று கூட்டமைப்பு எம்.பிக்கள் தெளிவுபடுத்தியிருக்கின்றனர்.

சர்வதேச சமூகத்துக்கு சமாதான தேவதையாக வேடம் போடும் ஜனாதிபதி குமாரதுங்க, மறுபுறத்தில் தென்னிலங்கையில் பேரினவாதிகளைத் திருப்திப்படுத்த பேரினவாதச் சார்பு வேடம் தரிக்கின்றார்.

1994 இல் முழு இலங்கைக்குமே தன்னைச் சமாதான தேவதையாக வேடமிட்டுக்காட்டி ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றிய ஜனாதிபதி குமாரதுங்க, பின்னர் குறுகிய காலத்துக்குள்ளேயே போர்வெறியர் என்ற தனது உண்மை முகத்தை - கோரவடிவப் போக்கை - வெளிப்படுத்தத் தவறவில்லை. அடுத்து வந்த ஏழு ஆண்டுகாலம் அவரது ஆட்சிக்காலத்தில் 'போர்வெறியர்' என்ற தனது உண்மைச் சொருபத்தை அவரால் மறைக்கவே முடியவில்லை.

இனப்பிரச்சினைக்கு அமைதிவழியல் தீர்வு காண்பதற்குத் தயாராக இருந்த புலிகளின் நிலைப்பாட்டை 2001 டிசெம்பரில் ஆட்சிக்கு வந்த ஐக்கியதேசிய முன்னணி அரசு வசமாகப் பயன்படுத்த முயன்றதால், அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தமும், அதன் கீழ் யுத்த நிறுத்தமும், போர் ஓய்வு அமைதியும், சமாதானப் பேச்சுக்கான வாய்ப்பும் சாத்தியமாயிற்று.

ஆனால், தமது போர் வெறிப்போக்கினாலும், ஆட்சி அதிகாரத்தின் மீதிருந்த பேரவாவினாலும் அமைதி முயற்சிகளையே குட்டிச்சுவராக்கி எல்லாவற்றையும் போட்டுடைத்துவிட்டு, நாட்டை நிர்க்கதி நிலையில் நிறுத்திவைத்திருக்கின்றார் நாட்டின் இன்றைய ஜனாதிபதி.

இனப்பிரச்சினைக்கு அமைதிவழியில் தீர்வு காண்பதற்காக, தமிழர் தரப்பின் ஏக அதிகாரபூர்வ - பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் எந்தவித நிபந்தனையுமின்றி அரசு பேச்சுக்களை ஆரம்பிக்குமானால் அதற்கு முழு ஒத்துழைப்பும் தரத் தயார் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய முன்னணி பகிரங்கமாக அறிவித்திருக்கின்றது. அது மட்டுமல்ல, தாமதமின்றி அமைதிப்பேச்சை ஆரம்பிக்கும்படி அரசுத் தரப்புக்கு அது தொடர்ந்து அழுத்தம் கொடுக்கின்றது. அமைதி முயற்சிக்கு நிபந்தனையற்ற தனது ஆதரவைத் திருப்பித் திருப்பி பகிரங்கமாக அறிவிக்கின்றது.

இதைவிட, அமைதித் தீர்வைக் காண்பதற்கு - வேறெந்த அரசுக்கும் - இத்தகைய உகந்த வாய்ப்பான சூழ்நிலை கிட்டியதே கிடையாது.

ஒரு புறம் அமைதி முயற்சிகளில் ஈடுபடவேண்டிய தமிழர் தரப்பு அந்த முயற்சிகளுக்கு வெற்றிலை வைத்து - வழிமேல் விழி வைத்து - காத்துத் தவம் கிடக்கின்றது.

மறுபுறம் எதிர்க்கட்சியோ நிபந்தனை ஏதுமின்றி அமைதி முயற்சிகளுக்கு முற்றும் முழுதாக ஆதரவு தருவதாகப் பிரகடனப்படுத்துகின்றது.

போதாக்குறைக்கு அந்த அமைதி எத்தனங்களுக்கு முழு ஒத்துழைப்பும், ஆதரவும் பக்கபலமும் தருவதாகக்கூறி சர்வதேச சமூகம் பார்த்துக்கொண்டு தயாராகக் காத்திருக்கின்றது.

அத்தோடு, நிறைவேற்று அதிகாரம், நாடாளுமன்றம் ஆகியவை அனைத்தும் ஜனாதிபதி குமாரதுங்கவின் கைகளில்.

இதைவிட்டால் இது போன்ற வாய்ப்பானதொரு சந்தர்ப்பம் - திடமான முடிவுகளை எடுத்து வளமான தீர்வைக் காணக்கூடிய வாய்ப்பு - வேறு எந்தத் தலைவருக்கும் வராது; வந்ததுமில்லை; வரப்போவதுமில்லை.

இத்தகைய பொன்னான வரலாற்றுச் சந்தர்ப்பம் கிட்டியும் அதைப் பயன்படுத்தாமல் ஏன்போட்டுக் குழப்பியடிக்கின்றார் ஜனாதிபதி?

அதற்கு ஒரேயொரு காரணம்தான் உண்டு.

தற்போதைய அரசமைப்பின் கீழ் அடுத்த 13 மாத காலத்துக்குள் அஸ்தமிக்கப் போகும் தமது அரசியல் அதிகாரப் பலத்தை, எப்படியும் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்ற அவரது சூழ்ச்சித்திட்டத்தை இந்தச் சமாதான முயற்சிகள் குழப்பியடித்துவிடும் என்ற அவரது பயம் தான் இத்தனைக்கும் பின்னணி.

நாட்டின் எதிர்காலமா? தனி ஒரு மனிதரின் சுயலாப அரசியல் அதிகார வெறிப்போக்கா? - எது முன்னுரிமை பெறப்போகின்றது?

தனி ஒரு மனிதருக்கு இலங்கைத் தீவின் அரசமைப்பு வழங்கிய - வானளவான - அதிகாரமே இந்தச் சிக்கல் நிலைக்கு, நாட்டின் இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காண்பதற்கு வாய்ப்பான சூழல் ஏற்பட்டும் அதை எட்ட முடியாத இக்கட்டு நீடிப்பதற்கு, அடிப்படைக் காரணமாக இருக்கின்றது.

நாட்டினதும் மக்களினதும் நலன்களையும், எதிர்கால நல்வாழ்வையும் புறந்தள்ளிவிட்டு தனிமனிதரின் அரசியல் ஆசைக்கும் அதிகார வெறிக்கும் முன்னுரிமை வழங்கும் இந்த நிலைமை எப்போது நீங்கும். இந்தத் தீவின் மாற்ற முடியாத துன்பியல் நிலையாக இது நீடிக்க வேண்டுமா?

---

யுத்த நிறுத்த உடன்பாட்டை ரத்துச்செய்யக் கோரும் வழக்கு

# பிரபாவுக்கான அழைப்பாணையை ரணிலுக்கு அனுப்ப மேன்முறையீட்டு நீதிமன்று உத்தரவு

கொழும்பு,ஒக்.3

புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நவம்பர் 22 ஆம் திகதி ஆஜராகுமாறு இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்று நேற்றுமுன்தினம் உத்தரவு பிறப்பித்தது.

புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் இலங்கை அரசின் முன்னைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் 2002 இல செய்துகொள்ளப்பட்டு, தற்போது நடைமுறையில் உள்ள யுத்தநிறுத்த உடன்படிக்கையை ரத்துச் செய்யுமாறு தொடுக்கப்பட்டிருந்த வழக்குத் தொடர்பிலேயே தலைவர் பிரபாகரனிற்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த வழக்குத் தொடர்பான நீதிமன்றின் முன்னைய உத்தரவுப்படி நேற்று பிரபாகரன் சார்பில் குறைந்தது அவரது சட்டத்தரணியாவது நீதிமன்றில் ஆஜராகியிருக்க வேண்டும்.

இதற்கான அழைப்பாணை நீதிமன்ற உத்தரவுப்படி எதிர்மனுத்தாரர்களுள் ஒருவரான ரணில் விக்கிரமசிங்கவின் கொழும்பு விலாசத்திற்கு அனுப்பட்டிருந்ததது.

ஆனால், அப்படி ஏதும் நடக்கவில்லை. அதனால், மீண்டும் தலைவர் பிரபாகரனை நவம்பர் 22 ஆம் திகதி ஆஜராகும்படி உத்தரவு பிறப்பிக்க நேற்று நீதிமன்றம் பணித்தது.

இந்தத் தடவையும்அது தொடர்பான அழைப்பாணையை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் முகவரிக்கு அனுப்பி வைக்கப் பணித்தது மேன்முறையீட்டு மன்று.

ஜேவிபி, ஹெல உறுமய போன்ற தென்னிலங்கைத் தீவிரவாத சிங்களக் கட்சிகள் இந்த வழக்கைத் தாக்கல்செய்துள்ளன.

இலங்கை அரசமைப்புக்கு முரணாகவே யுத்தநிறுத்த உடன்படிக்கை செய்து கொளளப்பட்டுள்ளது. இதனை ரத்து செய்ய மேன்முறையீட்டு நீதிமன்று உத்தரவிடவேண்டும் என வழக்கில் கோரப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் பிரதிவாதிகளாக யுத்த நிறுத்த உடன்படிக்கையில் இலங்கையின சார்பில் கைச்சாத்திட்ட முன்னாள் பிரதமர் மற்றும் ஆளும் ஐ.ம.சு.கூட்டமைப்பின் தற்போதய பிரதமர் தற்போதைய ஜே.வி.பி. அமைச்சர்களும் அங்கம் வகிக்கும் அமைச்சரவையின் அனைத்து உறுப்பினர்கள் ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (க-3)

---

சகபாடி இறந்ததால் ஆவேசம்

# தடிமுறித்து மக்களை துரத்தி அடித்த குரங்கு!

தென்மராட்சி,ஒக்.3

தனது சகபாடியின் இறப்பினால் ஆவேசம் கொண்ட குரங்கு ஒன்று வீதியால் போவோர் வருவோரைத் தடியினால் துரத்தித் துரத்தி அடித்த சம்பவம் சாவகச்சேரி கல்லடிமுட்டுச் சந்திப்பகுதியில் இடம்பெற்றது.

இரவுவேளை இடிமின்னல் தாக்கியதில் அப்பகுதியில் குரங்கு ஒன்று இறந்துவிட்டது. மறுநாள் காலை அக்குரங்கு இறந்துவிட்டதைக் கண்ட மற்றொரு குரங்கு தடி ஒன்றை முறித்து அவ்வீதியால் போவோர் வருவோரைத் துரத்தித் துரத்தித் தாக்கியது.

குரங்கின் ஆவேசத் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மக்கள் தலைதெறிக்க ஓடினர் என்றும் கூறப்பட்டது.

இரு மாதங்களுக்கு முன்னர் இதேஇடத்தில் மின்சாரம் தாக்கி குரங்கு இறந்தபோது கோபம்கொண்ட மற்றொரு குரங்கு மோட்டார் சைக்கிளில் வந்தசிலர் மீது பாய்ந்து தாக்கிக் காயப்படுத்தியமையும் குறிப்பிடத்தக்கது. (4-31-117)

---

# ஏழாலை வீதியை புனரமைக்க நிதி

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட ஏழாலை மத்தி ஏழு கோவில் வீதி, புனரமைப்புக்கென நிக்கொட் நிறுவனம் 1.5 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் இவ்வீதியின் ஒரு பகுதி 2 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டிருந்தது.

இந்த வருடம் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் பிரமாண அடிப்படை நிதி ஒதுக்கீட்டின் கீழ் 3 மில்லியன் ரூபா செலவில் மிகுதி புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

'நிக்கொட்' நிறுவனத்தின் புனரமைப்பு வேலைகளுடன் இவ்வீதிப் புனரமைப்பு வேலைகள் பூர்த்தி செய்யப்படவுள்ளன. (4-152)

---

# பெற்றோருக்குக் கல்வி; 'நீடோ' நிறுவனம் திட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.3

நோர்வே நாட்டின் நிதியுதவியுடன் கிராமிய பொருளாதாரக் கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் குடாநாட்டில் தனது பணிகளை விஸ்தரிக்கும் வகையில் 'பெற்றோர் வீட்டுக் கல்வி' என்னும் செயற்றிட்டத்தினை முதற்கட்டமாக வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் சுழிபுரம் அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் ஆரம்பித்திருக்கிறது.

மேற்படி திட்டத்தின் ஆரம்பவிழா அணமையில் நடைபெற்றது. அதில் மங்கள விளக்கினை வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணியசர்மா, கிராம அலுவலர் சிறிஸ்கந்தராசா மற்றும் பயனாளிகள சார்பாகப் பெற்றோர் ஒருவரும் ஏற்றிவைத்தனர்.

நிகழ்வில் வரவேற்புரையினை மேற்படி நிறுவனத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் தி.ஜெயக்குமாரும் சிறப்புரையினை வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணியசர்மாவும் நிகழ்த்தினர்.

தலைமையுரையாற்றிய 'நீடோ' நிறுவன இணைப்பாளர் க.ஜெயசீலன், கிராமிய மட்டத்தில் அடிப்படைக் கல்வியற்ற பெற்றோருக்கு அடிப்படைக் கல்வியை வழங்குவதுடன், பெற்றோருக்கு கல்வியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதன் ஊடாகப் பாடசாலையில் இருந்து இடைவிலகும் மாணவர்களின் வீதத்தைக் குறைத்து ஒரு வளமான சமூகக் கட்டமைப்பை இத்திட்டத்தின் மூலம் உருவாக்கமுடியும் - என்றும் இதன் முதற்கட்டமாக வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவு உள்வாங்கப்பட்டுள்ளது. மேலும் பல திட்டங்கள் இப்பிரதேசத்தில் முன்னெடுக்கப்படவுள்ளன என்றும் - கூறினார்.

வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் 10 கிராமிய சனசமூக நிலையங்களில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக யாழ் மாவட்டத் திட்ட இணைப்பாளர் தி.ஜெயக்குமார் தெரிவித்தார். (4)

---

# கூட்டமைப்பு எம்.பிக்கள் 15 இல் திருமலை செல்கின்றனர்

## கிராமம் கிராமமாக மக்களைச் சந்திப்பர்

யாழ்ப்பாணம்,ஒக்.3

தமிழ்த் தேசியத்தின் நியாயப்பாட்டை வெளிப்படுத்த அமைக்கப்பட்டுள்ள தமிழ்த தேசிய விழிப்பூட்டல் குழு எதிர்வரும் 15 ஆம் திகதி திருகோணமலைக்குச் செல்லவிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையில் கடந்த ஓகஸ்ட் 30 ஆம் திகதி நடந்த சந்திப்பில் இக்குழு தெரிவுசெய்யப்பட்டிருந்தது. தமிழ்த் தேசியத்தின் நிலைப்பாட்டை விளக்குவதற்காகவும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் தேவையை மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்காகவும் இக்குழு அமைக்கப்பட்டிருந்தது.

மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் இக்குழு எதிர்வரும 15 ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் திருகோணமலையில் சகல பகுதிகளுக்கும் செல்லும். மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் பிரச்சினைகளை இக்குழு கேட்டறியும்.

இக்குழுவின் தலைவர் மாவை சேனதிராசா தலைமையில் கூட்டமைப்பின் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் இச்சந்திப்பில் பங்குபற்றுவர். அவர்கள் தனித்தனிக குழுவாக மக்களைச் சந்திப்பர். பொதுக் கூட்டங்களையும் நடத்துவர்.

இச்சந்திப்புக்களில் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களும் பங்குபற்றுவர்.(3)

---

# காயத்துடன் சிகிச்சைக்கு வந்தவர் யாழ். ஆஸ்பத்திரிக்குள் கலாட்டா!

யாழ்ப்பாணம்,ஒக.3

யாழ். ஆஸ்பத்தியில் சிகிச்சைபெற வந்த ஒருவர் அங்கு பெரும் கலாட்டாவில் ஈடுபட்டார். வைத்தியரையும் வைத்தியசாலை ஊழியர்களையும் மிரட்டவும் செய்தார் அவர்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 4.45 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

நவாலியைச் சேர்ந்த ஒருவர் தாக்குதலுக்கு இலக்காகித் தலையில் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக ஆஸபத்திரிக்குக் கூட்டிவரப்பட்டார்.

ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்க அழைத்துவந்தபோது அதற்கு அவர் மறுப்புத் தெரிவித்தார் என்று கூறப்படுகிறது. அவரை அழைத்து வந்தவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

பின்னர் ஒருவாறு அவரது விவரங்களைப் பதிவேட்டில் பதிவுசெய்வதற்கு முயன்றபோது அங்கு கடமையில் இருந்த டாகடரின் மேசையில் இருந்த 'டோர்ச் லைற்'றை எடுத்து அங்கு நின்ற வேறு ஒருவரைத் தாக்க முற்பட்டார். அத்துடன், ஆஸ்பத்திரிப் பணியாளர்களையும் மிரட்டினார்.

பின்னர் ஒருவாறு அவர் சிகிச்சைக்காக வார்ட்டில் சேர்க்கப்பட்டார்.

மதுபோதையிலேயே இவர் ரகளை புரிந்தார் என்று கூறப்படுகிறது. இது பற்றி ஆஸ்பத்திரி பொலீஸில் முறையிடப்பட்டுள்ளது.

(ஐ-7)

---

# மாணவர்களின் ஆற்றலை மேம்படுத்த நடவடிக்கை

வலி.தெற்கு,ஒக்.3

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் உள்ள நூலகங்களில் நூல்களை வாசிக்கும் மாணவர்களின் கருத்தாற்றலை அதிகரிக்கக் கூடியதான செயற்பாடுகளை மேற்படி வலயத்தைச் சேர்ந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரராஜா மேற்கொண்டுள்ளார்.

இதன்பொருட்டு இவ்வலயத்துக்குட்பட்ட நூல் நிலையம் உள்ள பாடசாலைகளுக்கு மாணவரின் கருத்தாற்றலை அதிகரிக்க உதவக்கூடிய தள்வு இசை நாடாக்கள் மிகக் குறைந்த உரப்பில் ஒலிபரப்புச் செய்யப்படுவதற்கென விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணம் சாந்திகம் ஊடாக இந்த இசை நாடாக்கள் பெறப்பட்டு பாடசாலைகளுக்கு வழங்கப்படுகின்றன.

பாடசாலை நூலகங்களில் இவற்றை ஒலிபரப்புச் செய்வதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதுடன், இதற்கான அறிவுறுத்தல்கள், நூலகர்களுக்குக் கருத தரங்குகள் மூலம் வழங்கப்பட்டுள்ளன. (4-152)

---

**நாளை**

புரட்டாதி 18
திங்கட்கிழமை
(04.10.2004)
திதி : ஷஷ்டி
நள்ளிரவு 12.08 வரை.
நட்சத்திரம் : ரோகினி
முற்பகல் 11.50
சுபநேரம்: 12.02 - 1.32
ராகுகாலம்: 7.32 - 9.02
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

அனுபவம் - சிறந்த பரீசோதகர்; பரீட்சையை முதலில் நடத்திவிட்டு பலனைப் பின்பே கொடுக்கும்.

# திருமுறை முற்றோதல் பூர்த்திவிழா

யாழ்ப்பாணம்,ஒக்.3

பன்னிரு திருமுறை முற்றோதல் பூர்த்தி விழா இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 3 மணிக்கு இணுவில் காயத்திரி பீடத்தில் பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெறவுள்ளது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகளின் அருளுரையைத் தொடர்ந்து சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை, சித்தாந்தவித்தகர் சிவ.மகாலிங்கம் ஆகியோரின் சிறப்புரைகள் இடம்பெறும். (4-204)


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்

ரோயல் குளுக்கோஸ்

100% சுத்தமானது!

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

ரோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!

PACKED BY: ROYAL Industries Colombo 12 ☎ : 0112334603

அனைத்துப் பார்மஸிகளிலும், (C/36310) கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம் →




ஏக விநியோகஸ்தர்கள்: சிவா நறுமணப் பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ☎ 021 222 2567


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில் 1950 - 04 - 15



ஆண்டவன் அரவணைப்பில் 2004 - 09 - 03

### திருமதி பாக்கியம் நாகமணி

திதி: 03.10.2004

*"ஆருயிர் அம்மாவே எங்கள் அன்புத் தெய்வமே!*
*ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி விட்டுச் சென்றனையோ?*
*ஆனமட்டும் உம்மைக் காக்க ஆண்டவனைப் பிரார்த்தித்தோம்*
*ஆயிரம் கனவு கண்டோம் அம்மா உன்னைக் காப்போம் என்று*
*ஆருயிர் அம்மாவே! உங்கள் அன்பு முகம் காண்பது எப்போ?*
*ஆயிரமாயிரம் வேண்டுதல் செய்வோம் அம்மா உங்கள் ஆத்மா சாந்தி பெற!"*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

இன்று (03.10.2004) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் எமது அன்னையின் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மற்றும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

பிரதான வீதி,
இளவாலை. (37115)(39-14-44-26) - குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சிவசம்பு பரமசாமி



காலையடி தெற்கு, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு பரமசாமி 29-09-2004 புதன்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் கதிர்காமநாதன் (ஜேர்மனி), கண்ணன் (ஜேர்மனி), கலைவாணி, கலைச்செல்வி (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்தினிதேவி (ஜேர்மனி), சசிகரன் (இத்தாலி), கஜேந்திரன் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனாரும் பவினாத் (ஜேர்மனி), பவித்திரா (ஜேர்மனி), பிரவீணா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03-10-2004) ஞாயிற்றுக் கிழமை பி.ப.2.00 மணிக்கு நாணு ஆசாரி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சம்பில்துறை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காலையடி தெற்கு,
பண்டத்தரிப்பு.
(37057) (26-14-44)

தகவல்:
திருமதி சசிகரன் கலைவாணி
*(மகள்)*

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### டால்ரன் அக்கடமி

| | |
|---|---|
| 01. க.லக்சனா | 164 |
| 02. வி.லதீஷா | 163 |
| 03. க.பகிதரன் | 148 |
| 04. அ.மோகனரூபன் | 146 |
| 05. மு.ரமணன் | 139 |
| 06. அ.சுபேதன் | 135 |
| 07. மு.மாதங்கி | 134 |
| 08. ச.சுபர்ணியா | 132 |
| 09. ச.அனுசன் | 130 |
| 10. ஜொ.ஜொனிஜெயகோபன் | 129 |
| 11. சி.ஜெயரமணன் | 128 |
| 12. ச.சிந்துயா | 127 |
| 13. பி.கிருஸ்ரீஈழவன் | 124 |

மேற்படி புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் மாணவர்களுக்கு ஊக்கமளித்து, வழி நடத்திய ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

துன்னாலை,
கரவெட்டி. (37119) (26-14-44)

நிர்வாகி, சக ஆசிரியர்கள்.

## பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்

### 28-02-2004 இல் மீதிகளை உறுதிப்படுத்தல்

எமது கிராமிய வங்கிகளில் கொடுக்கல், வாங்கல் செய்யும் வாடிக்கையாளர்கள் தங்கள் வருமதி, செல்மதி மீதிகளை 28-02-2004 ஆம் திகதியில் உள்ளவாறு எதிர்வரும் 7, 8, 11ஆம் திகதிகளில் கையேடுகளைச் சமர்ப்பித்து உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பொது முகாமையாளர்,
பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்,
பண்டத்தரிப்பு.

(சி-37953) (26-14-44)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### கார்த்திகா அரியகுணராஜா

பிறப்பு: 02-08-1981 இறப்பு: 03-10-2003

பட்டப் படிப்புக்கென்று
பல்கலைக்கழகம் பாதம் பதித்தவளே!
பாதியிலே எம்மை விட்டுப் பிரிந்தாலும்
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

3ஆம் வருட வணிகத்துறை
மாணவர்கள்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(37097) (26-14-44)

## மூன்று ஆண்டு பிரிவின் நினைவலைகள்

திரு முகிழ்ப்பு 01 - 03 - 1939



திரு அவிழ்ப்பு 03 - 10 - 2001

வடஇலங்கை சர்வோதய் ஸ்தாபகரும்
ஜீவதானியும் சமூக சேவையாளருமாகிய

### தொண்டர் கந்தையா திருநாவுக்கரசு

என்கடன் பணி செய்து கிடப்பதே.
"எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் - மக்கள்
இனமீன்ற தமிழ்நாடு தனக்கும் - என்னால்
தினையளவு பயனேதும் கிடைக்குமென்றால்
செத்தொழியும் நாளெனுக்கு திருநாளாகும்."

சர்வோதய சேவை வளாகம்,
புங்குடுதீவு.

வடஇலங்கை சர்வோதய
குடும்பத்தினர்.

(37116) (26-14-44)

## தென்மராட்சி வலய ஆசிரியர் தினவிழா

தென்மராட்சி,ஒக்.3

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான வலய மட்ட ஆசிரியர் தினவிழா நாளைமறுதினம் பிற்பகல் ஒரு மணிக்குச் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

உலக ஆசிரியர் தினத்தையொட்டி நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியில் வெற்றி பெற்ற ஆசிரியர்களுக்கான பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கலும், ஆசிரியர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறுமெனவும் இந்நிகழ்வில் சகல ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (4-117)


### விஞ்ஞானமும் தொழிநுட்பமும்

தரம் 8 - O/L வரை பரீட்சை
வழிகாட்டிகள் வெளிவந்துள்ளன.
ஆசிரியர்: இ.நிர்மலன் 0777 413990.
(37000)


### புனித அந்தோனியாருக்கு நன்றி

புனித அந்தோனியாரே, எனது
வேண்டுதல் நிறைவேறியதற்கு
எனது நன்றிகள்.
- அந்தோனியாரின் விசுவாசி.

(37112)(16-14-44)


### குறைந்த செலவில் நிறைந்த சேவை

*வீட்டுமின் இணைப்பு, நீர்க்குழாய் இணைப்பு - வாகன்களுடன் குறைந்த செலவில் செய்துகொடுக்கப்படும்.*

*சகல மிக்சி கிறைண்டர்களும் திருத்திக்கொடுக்கப்படும். உதிரிப்பாகங்களும் பெற்றுக்கொள்ளலாம்.*

சிறீ தனுசிகன் எலக்ரிக்கல்,
385, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
*(சிவன்கோயிலுக்கும் கதிரேசன் கோயிலுக்கும் நடுவில்)*
(37029)(26-14-44)


### தேவை

தையல்வேலைக்கு ஆண்கள் தேவை.
குமார் தையல் அகம்
K.K.S. றோட், 3ஆம் கட்டை,
கொக்குவில், தாவடி.
T.P.:021 222 3092, 0777 111486.
★ *யுக்கி தையல் மெசின் விற்பனைக்குண்டு.*
(37087)

### தேவை

மருந்து விற்பனையில் அனுபவம் உள்ள பெண் விற்பனையாளர் தேவை. சம்பள விவரம் நேரில் தீர்க்கப்படும்.

தொடர்புகளுக்கு:
சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்
அமுல் கிறீம் கவுஸ் அருகே
*08, இராமையா செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.*
(37084) T.P.: 222 7259 (42-14-44-26)


### சிங்கப்பூரில் திருமண சேவை



சிங்கப்பூரில் திருமணஞ்செய்ய வருவோருக்கும், வீடுமுறையைக் கழிக்க வருவோருக்கும் சகல வசதிகளும்கொண்ட வீடும் மற்றும் திருமணத்துக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் குறைந்த செலவில் திருப்திகரமாகச் செய்துதருவோம். மேலும் எங்கள் இடம் "குட்டி இந்தியா" என்று அழைக்கப்படும் இடத்தில் இருப்பதால் வேண்டிய பொருள்களை நடந்து சென்றும் வாங்கலாம். மேலும் விவரமறிய எந்தநேரத்திலும் தொடர்புகொள்ள வசதியாக கைத்தொலைபேசி எண்: 0065 9751 4941, தொலைநகல்: 0065 6481 6144

சிங்கப்பூரில் சுற்றுலா அனுமதி கிடைப்பது சிலசமயங்களில் கஷ்டம். அதனால் 3 கிழமைக்கு முதலில் எங்களுடன் தொடர்புகொள்ளவும்.

LINGAM WEDDING SERVICES
10, Anson Road, # 15-14, International Plaza,
Singapore 079903.
(26-14-44) (26954)


### உரிமைத் தத்துவத்தை இரத்துச் செய்தல்

584 (312), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் வசித்தவரும் தற்பொழுது 125 1/1, சன்னங்காரா வீதி, களுபோவலை, தெகிவளை எனும் முகவரியில் வசிப்பவரும் ஆகிய நமசிவாயம் செட்டியார் கந்தையா செட்டியார் (N.I.C. 501752924V) ஆகிய நான், மூளாய் கிழக்கு, சுழிபுரத்தில் வசிப்பவர் ஆகிய கனகரத்தினம் பாலசிங்கம் என்பவருக்கு (N.I.C. 513623623V) பார்வையிடும் தத்துவத்தை 186/14-12-98 இல் கொடுத்து இருந்தேன். இத்தத்துவத்தை இந்நாளிலிருந்து (30-09-2004) இரத்துச் செய்து கொள்கின்றேன் என்பதை இலங்கை சோசலிஷக் குடியரசு மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன். இத்திகதியிலிருந்தோ அல்லது அதன் பின்னரோ அவருடன் மற்றவர்கள் கொடுக்கல், வாங்கல் வைத்திருந்தால் அதற்கு நானோ, நான் கற்பித்தவர்களோ பாத்திரவாழிகள் அல்லர் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

(சி-37913) ந.கந்தையா செட்டியார்.


SAAMSTECH இன் ஆங்கில, சிங்கள நேரடி வகுப்புகளில்

50% சலுகைக் கட்டணத்துடன் பதிவுசெய்ய (நாளை கடைசி நாள் (04.10.2004))

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள் பிரிவு மானிப்பாய், சாவகச்சேரி, ஆவரங்கால், கோப்பாய், பருத்தித்துறை உட்பட 10 இற்கு மேற்பட்ட இடங்களில் வகுப்புகள்.

மேலதிக விவரங்கள்:
யாழ்., கொழும்பு தலைமையகங்களில் அல்லது வகுப்பு நடைபெறும் இடங்களில்.

SAAMSTECH 841, Hospital Rd., Jaffna,
T.P. No.: 077 3068968 (சி-37866) (24-14-44-26)

# இஸ்லாம் மதத்தைத் தழுவிய தமிழர்கள் ஈழத் தமிழர்களுக்கு இடையூறாக இருக்கலாமா?

மா.க.ஈழவேந்தன் (நாடாளுமன்ற உறுப்பினர்)

மதங்கள் கடந்த நிலையில் தமிழ் இனத்தை அடையாளம் காணச் செய்பவை எமது மொழி, எமது பண்பாடு, எமது நாகரிகம், எமது வாழ்வியல் முறை மற்றும் நாம் வாழும் வாழ்வகமாகும். மேற்கூறிய வரையறை உலகெங்கும் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கும் பொருந்தும். ஈழத்தமிழரைப் பொறுத்தவரையில் இவை முறறுமுழுதாகப் பொருந்தும் கூற்றாகும். மொழி, பண்பாடு ஆகியவற்றில் எமக்கு ஒற்றுமை இருப்பினும் நாம் மாறுபடும் மதங்களையே தழுவி நிற்கின்றோம் என்பதை மறுப்பதற்கில்லை.

எம்முள் பெரும்பான்மையினர் இந்துக்கள். இந்து மதத்தின் உட்பிரிவுகள் ஆறு. இப்பிரிவுகளில் சைவசித்தாந்திகள், வேதாந்திகள் என்ற பிரிவினர் உண்டு. சைவ மதத்தில் கூட வீரசைவர் என்ற பிரிவினரும் உண்டு. வேதாந்தத்தில் அத்வைதம், துவைதம், விசிட்டாத்வைதம் போன்ற பிரிவுகள் உள்ளன. சிவனை வழிபடுவோர் சிவநெறியைத் தழுவி நிற்கின்றனர். வைஷ்ணவத்தைத் தழுவி நிற்போர் திருமாலை வழிபடுகின்றனர். இவ்விரண்டையும் தாண்டி பேராற்றலுள்ள சக்தி வழிபாட்டில் மூழ்கி இருப்போரும் உள்.

சமணம், பௌத்தம் போன்ற அவைதீக மதங்களும் ஒருகாலத்தில் தமிழகத்தில் தலைதூக்கி இருந்ததற்கு மணிமேகலை என்ற பௌதத காவியமும், நாலடியார் போன்ற சமண அறநூல்களும் சான்று கூறும். இவை நீங்கலாக கிறிஸ்தவத்தின் வருகையினால் எம் இனத்தின் ஒரு பகுதியினர் கிறிஸ்தவத்தைத் தழுவி உள்ளனர். கிறிஸ்தவம் ஆனது கத்தோலிக்கம் புரட்டஸ்தாந்து என்ற




பல பிரிவுகளைக் கொண்டது. ஏழாவது திருச்சபை மற்றும் பெந்தகோஸ்தஸ் ஆகியோரும் உள். மற்றும் கடவுள் கொள்கையை மறுக்கும் நாஸதிகரும், கடவுள் உண்டோ இல்லையோ என ஐயுறுவோரும் உள். எம்மினத்தில் இடம் பெற்றுள்ள அடுத்த முக்கிய மதம் இஸ்லாம்.

மேற்குறித்த மதங்கள் நீங்கலாக எம் இனத்தில் முக்கிய இடம்பெற்று விளங்கும் சமயம் இஸ்லாம் ஆகும். இஸ்லாமுக்குள் சுபீட்சம் என்ற உட்பிரிவும் இருப்பதாக நாம் அறிகின்றோம். சுபீட்சம் பிரிவைத் தழுவி நிற்கும் அடியார்களுடைய பாடல்கள், கூற்றுகள் மாணிக்கவாசகரின் திருவாசகத்துடன் பெரிதும் ஒத்து விளங்குவது எமக்கு வியப்பினையும் மகிழ்ச்சியினையும் தருகின்றது. இவ்விதம் மாறுபடும், வேறுபடும் மதங்களை நாம் தழுவி நிற்கின்ற போது நாம் எம்மை தமிழராகவே அடையாளம் காண்கின்றோம். அவ்விதம் அடையாளம் காண்பது ஏற்புடையதாகும். உண்மையில் தமிழிலகிய வரலாற்றினை நாம் உன்னிப்பாகக் கவனிப்போம் ஆயின், மாறுபடும் வேறுபடும் மதங்களைத் தழுவிநின்ற எம்முன்னோர் முட்டி மோதியதன் விளைவு தமிழ் வளம்பெற்றுள்ளது. பல்வேறு மதங்களைத் தழுவிநிற்கும் தமிழர்களில் கத்தோலிக்கரிடமும் இஸ்லாமியரிடமும் கூடிய மதப்பற்று உண்டு என்பதை நாம் மறுப்பதற்கில்லை.

அன்நிய படையெடுப்பின் விளைவுதான் கிறிஸ்தவத்தின் வருகை. இங்கு வருகைதந்த கிறிஸ்தவம் ஒரு காலத்தில் தம்வழிபாட்டில் கீபுரு மொழிக்கு முதன்மை கொடுத்தது. பின்பு இலத்தீன் மொழி அவ்விடத்தை எடுத்ததை அடுத்து பின்பு ஆங்கிலமும் அரசோட்சியது. காலப்போக்கில் வடமொழியும் தமிழும் கலநத வழிபாடே கிறிஸ்துவரிடம் நிலவியது. பின்பு அவர்களிடம் ஏற்பட்ட தமிழ்ப்பற்றின் காரணமாகத் தம் மதம் தமிழ்த் தன்மையைப் பெறவேண்டும் என்ற நோக்கினால் உந்தப்பட்டு தற்போது கிறிஸ்தவ கோயில்களில் தமிழ் ஓங்கி ஒலிக்கிறது. 'பரமண்டலத்தில் உள்ள பிதாவே எம்மை இரட்சித்தருளும்' என்ற வடமொழி கலந்த தமிழ் வழிபாட்டில் ஈடுபட்ட தமிழ் கிறிஸ்தவர்கள், 'விண்ணுலகில் வீற்றிருக்கும் இறைவா, எமமை ஆட்கொண்டருளும் இறைவா' என்ற தூய தமிழில் வழிபடுகின்றார்கள்.

ஆனால் செந்தமிழ் உடல், சிவநெறி உயிர் என்று மேடைகளில் முழங்கும் நம் சைவத் தமிழர்கள் 'ஓம் சுக்கலாம் பிரதம்' என்று எவருக்கும் புரியாத வடமொழியில் வழிபடுகிறார்கள். இதனால் ஆத்திரம் கொண்ட நம் பாவேந்தர் பாரதிதாசனே 'கோயிற்படிக்கட்டின்கீழ் நின்று தமிழ் மானத்தை வடிகட்டி விற்று வடமொழியை மந்திரம்' என்று உவக்கும் தன்மானம் இழந்த தமிழனைக் கடுமையாகச் சாடுகின்றார். மேலும் ஒருபடி சென்று 'தெற்கு ஓதும் தேவாரம், திருவாய் நன்மொழி இருக்க எப்படி சஹஸ்த்திர நாமம் எம் கோயிலினுள் புகுந்தது' எனக் கேட்டு எம்மை வெட்கித் தலைகுனிய வைக்கின்றார்.

### இஸ்லாமும் இனிய தமிழும்

நம் இஸ்லாமிய இனிய உடன்பிறப்புக்கள். அராபிய மொழியில் எழுதப்பட்ட குர்ஆனுக்கு முதன்மை கொடுக்கின்ற போதும் அவர்களுடைய வழிபாட்டில் தமிழ் பெரும் இடத்தை வகிக்கின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே, எம் இஸ்லாமிய நண்பர்கள் தம்மை குறிப்பிடுகையில் இஸ்லாம் எங்கள் நெறி, இனபத் தமிழ் எங்கள் மொழி என்று ஏற்றமுறையில் எடுத்தியம்புவர்.

அரசியல் காரணங்களுக்காக இன்று பல இஸ்லாமிய அரசியல் தலைவர்கள் தம்மைத் தமிழர் என இனங்காண மறுத்து மொழி, இனம் கடந்த நிலையில் உலகளவில் தம்மை முஸ்லிம்கள் என்று அடையாளம் காண விரும்புவதாகக் கூறுகின்றனர். ஒவ்வொரு இனத்திற்கும் ஒரு நாடு, ஒரு மொழி, ஒரு பண்பாடு, ஒரு வாழ்வியல் முறை, ஒரு நாகரிகம் உண்டு என்பதை எவரும் மறுக்க முடியாது. இதை மூடி மறைகக முயல்பவர்கள் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்கின்றார்கள் என்பது பொருள்.

தமிழர்கள் பலர் இந்துமதம் தழுவி உள்ளனர். ஆனால், அதுகொண்டு தம்மைத் தமிழர் என்று கூறத் தயங்கவில்லை. அதேவேளையில் தாம் தழுவிய இந்து மதத்துக்கு இடர்ப்பாடு ஏற்படுகின்றபோது இனம் கடந்த நிலையில் இந்து மதத்திற்கு ஏற்படும் இன்னலை நீக்ககுரல் எழுப்பி உள்ளனர். கிறிஸ்தவம் தழுவி உள்ள தமிழர்கள் தம்மை முதலில் தமிழராகவே கணிக்கின்றனர். ஆனால், தாம் தழுவிநிற்கும் கிறிஸ்தவத்துக்கு ஏதேனும் ஆபத்து ஏற்படுகின்றபோது உலகின் கிறிஸ்தவர்களுடன் சேர்ந்து குரல் எழுப்புகின்றனர். அதேபோன்று இஸ்லாம் தழுவியுள்ள தமிழர்களின் செயற்பாடும் சிந்தனையும் அமையவேண்டும் உலகில் எங்காவது இஸ்லாமியருக்கு நெருக்கடி ஏற்படின் அவர்களுக்காக இவர்கள் குரலெழுப்புவதனை நாம் தவறு என்று சொல்லல் ஆகாது. பலஸ்தீன மக்களுக்காக இவர்கள் பரிந்து குரல் எழுபபுவதனை நாம் வரவேற்கின்றோம். உண்மையில் இஙகுள்ள இஸ்லாம் தழுவிநிற்கின்ற தமிழரை விட தமிழர்களாகிய நாம்தான் அன்று தொட்டு இன்று வரை பலஸ்தீன மக்களுக்காகப் பரிந்துபேசி வந்துள்ளோம். பலஸ்தீன மக்களோ தாம் இழந்த நாட்டை மீட்கப் போராடுகின்றார்கள். ஈழத்தமிழர்கள் இருக்கின்ற நாட்டை இழக்காது இருக்கப் போராடுகின்றோம். இவற்றை ஒட்டி நமது தரப்பினர் ஏற்றமிகு கட்டுரைகள், வடுத்த விழுமிய அறிக்கைகள், பேசிய எழுச்சி மிகு பேச்சுக்கள் இவற்றுக்குச் சான்று கூறும்.

## ஜின்னாவின் பாகிஸ்தான் கோரிக்கையை ஆதரித்தவர் தந்தை செல்வநாயகம்




### பாகிஸ்தான் தோற்றத்தை தந்தை செல்வா ஆதரித்தார்

தமிழரில் பெரும்பான்மையானோர் இந்துக்களாக இருந்தபோதும், சிலர் கிறிஸ்தவர்களாக இருந்தபோதும் வடஇந்தியாவில் தலைதூக்கி இருந்த இந்து வெறியர்களிடம் இருந்து விடுபட முகமது அலிஜின்னா பாகிஸ்தான் கோரிக்கையை விடுத்தபோது நாம் ஆதரித்தோம். 1947 இல் பாகிஸ்தான் கோரிக்கையை ஆதரித்து தந்தை செல்வா நிகழ்த்திய உரை நாடாளுமன்ற பதிவேட்டில் இடம்பெற்றுள்ளது. முஸ்லிம் மக்கள் தமக்குப் பாதுகாப்பைத் தேடி தமக்கு ஒரு நாடு தேவை என்று திரு.ஜின்னா அவர்கள் எழுப்புகின்ற குரலை நாமும் வரவேற்கின்றோம் என்றுதான் தந்தை செல்வா அன்றே குரல் கொடுத்தார்.

ஆனால் மத அடிப்படையில ஒன்றுபட்ட பாகிஸ்தான், கிழகககு வங்காள மக்களின் இன உணர்வை, மொழி உணர்வை மதிகக மறுத்து அடக்கு முறையை கையாண்டபோது, முஜிபுர் ரகுமான் தலைமையில் நடைபெற்ற வங்காள தேச போராட்டத்துக்கு நாம் ஒன்றுபட்டு ஓங்கி குரல் எழுப்பியது, வரலாற்றில் பதியப்பட்ட நிகழ்ச்சி ஆகும். ஒதுக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு வாழ்வு கொடுக்க பாகிஸ்தான் வேண்டும் என்று ஜின்னா குரல் எழுப்பியபோது ஜின்னாவோடு சேர்ந்து குரல் எழுப்பிய நாம், வஙகாளதேசம் மொழி அடிப்படையில், இன அடிப்படையில் பிரிய வேண்டும் என்று முஜிபுர் ரகுமான் குரல் எழுப்பியபோது அவரின் வீரதீரச் செயலை நாம் வரவேற்றோம். பாகிஸ்தான் பிரிந்த நிலையில், மேற்குப் பாகிஸ்தான், கிழக்குப் பாகிஸ்தான் கிழக்கு வங்காள மக்களின் மொழி உணர்வை மதிக்க மறுத்ததை நாம் கண்டித்தோம். கிழக்கு வங்காள மக்களின் பொருளாதார வாழ்வு தலைதூக்குவதை மறுத்துச் செயற்பட்ட பாகிஸ்தானை நாம் கண்டிக் கத்தயங்கவில்லை. கிழக்குப் பாகிஸ்தான் பல்கலைக்கழகம் ஒன்றில் ஜின்னா ஒருமுறை உரைநிகழ்த்தியபோது, அப் பல்கலைக்கழகத்தில் முஜிபுர் ரகுமான் மாணவனாக விளங்கிய வேளையிலே, உருது மொழிக்குக் கொடுத்த அதே முக்கியத்துவத்தை வங்காளமொழிக்குக் கொடுக்கவேண்டும் என்று கிளர்ச்சிசெய்தபோது மத அடிப்படையில் தாம் இணைந்துள்ளோம். உங்கள் மொழி உணர்வை நாம் ஏற்கமுடியாது என்று முஜிபுர் ரகுமானின் கோரிக்கையை ஜின்னா புறக்கணித்ததன் விளைவு, காலப் போககில் அதே முஜிபுர் ரகுமான் தலைமையில் வங்காள மொழிக்கு வாழ்வளிக்க வங்காள தேசம் மலர்ந்துள்ளதை வரலாற்று உணர்வு உள்ள எவரும் மறுக்க முடியாது. இது எதை எடுத்துக் காட்டுகின்றது? இஸ்லாமியருக்கு மதப்பற்று இருப்பினும் அதனை விஞ்சிய நிலையில் மொழி மற்றும் இனப்பற்றும் உண்டு என்பதை வங்காளதேசத்தின் தோற்றம் எமக்கு எடுத்து உணர்த்துகின்றது. இதனை ஈழத்து இஸ்லாமிய நண்பர்கள் உணர மறுப்பின் வரலாற்றில் இருந்து இவர்கள் பாடம் படிக்க தயங்குகிறார்கள் என்பதே பொருள்.

### சாஜகான் சாற்றும் கருத்து


அரசியல் வசதிக்காக இங்குள்ள இஸ்லாமய தலைவர்கள் நேரத்திற்கு ஒரு கருத்தினை தெரிவித்தாலும் இங்கு வாழுகின்ற இஸ்லாமியர்கள், அடிப்படையில் தமிழ் பேசும் மக்கள் என்பதனை அவர்கள் உணர்ந்தே ஆகவேண்டும் "புத்தளம் வரலாறு மரபுகளும்" என்ற தலைப்பில் ஓர் அரிய ஆராய்ச்சி நூல் எழுதியுள்ள ஓயவுபெற்ற கல்வி அதிகாரியும், நல்ல சிந்தனையாளரும், எழுத்தாளருமாகிய அல்ஹாஜ் ஏ.என்.எம். சாஜகான் தனது நூலில் பக்கம் 112 இல் சிந்தனையை தூண்டும் முறையில் எவரும் மறுக்கமுடியாத கருத்தினை வழங்கியுள்ளார்.

இதோ அவர் இயம்பியவை: "இலங்கையில் தனிச்சிங்களம் பேசும பகுதிகள் உட்பட எல்லாப் பகுதிகளிலும் வசிக்கும் முஸ்லிம்கள் தமிழையே பேசி வருகிறார்கள் என்றால், அதற்குக் காரணம் இருக்க வேண்டும். அராபியர்கள் இலங்கையை அடைந்தபோது அவர்களை வரவேற்று உரையாடியவர்கள் தமிழ் பேசிய சமூகத்தினரே. அதனால் அரபிகள் தமிழ் பேசக் கற்றதுடன் தமிழ் பேசியோர், அரபியையும் கற்றனர். பெரும்பாலானோரின் மொழியான தமிழ் மொழியே நாளடைவில் அரபிகளின் வழித் தோன்றல்களின் மொழி ஆகியது. கரையோரங்களில் செறிந்து வாழ்ந்த தமிழ்பேசும் மக்களுடன் முஸ்லிம்கள் நெருங்கி உறவாடி தொடர்புகொண்டு இருந்தது போல, வியாபாரத்தில் அக்கறையின்றி, வெளிநாட்டவரின் தொடர்புக்கு விருப்பமின்றி உள்நாட்டு விவசாயத்தில் ஈடுபட்டு அமைதியுடன் வாழ்ந்த சிங்கள மக்களுடன் அதிகம் தொடர்புகொண்டிருந்தமையே முஸ்லிம்கள் சிங்கள மொழியைவிட தமிழை தாய் மொழியாகக்கொண்டு ஒழுகுகின்றனர் என்பதற்குக் காரணமாய் அமைகின்றது - என்பதாகும்.

### புத்தளத்தில் பொலிவுள்ள தமிழ்ச்சொற்கள்

நாம் முன்பு குறிப்பிட்ட புத்தளம் வரலா'றும், மரபுகளும் என்ற நூலில் ஏ.என்.எம். சாஜகான் அவர்கள் முஸ்லிம்களுடைய மொழ தமிழ்மொழி என்பதோடு நில்லாது, புத்தளம் பகுதியில் உள்ள தமிழ்ப் பற்று (தெமழஹத்) என்ற பகுதியில் இநதுமதம் தழுவிய தமிழர்களும் இஸ்லாம் மதம் தழுவிய தமிழர்களும் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்தமையும், அப்பகுதியில் நிலவும் தமிழ்ப்பெயர்களையும் மிக நுணுக்கமாக வியத்தகு முறையில் தருகிறார். தெமழஹத் எனப்படும் தமிழ்ப்பற்று விவசாயப் பகுதி ஆகும். புத்தளம் பிரதேசத்தையும், குருநாகல் பிரதேசத்தையும் தொடர்புறுத்தும் பிரதேசம் இதுவாகும். ஏராளமான புராதனக் கிராமக் குளங்கள் இங்கு காணப்படுகின்றன. நூற்று இருபதுக்கும் மேற்பட்ட குளங்கள் இங்கு உண்டு. இன்று இங்கு வாழும் மக்களின் மூதாதையர்கள தமிழ் மொழியே பேசி வந்துள்ளனர். இன்று தமிழ் மொழியின் இடத்தை சிங்கள மொழி பிடித்துள்ளது. இங்குள்ள பழைய கிராமங்கள், குளங்கள ஆகியன தமிழ்ப் பெயர்களாலேயே அழைக்கப்படுகின்றன. "யானை மடு" என்கின்ற பெயர் தமிழ்ப் பெயர் ஆகும் இன்று அது சிங்கள மரபில் 'ஆனமடுவ' என அழைக்கப்படுகின்றது. குளங்களுக்கான பெயர்கள், அவைகள் இருக்கும் ஊருக்குமாயின. இப்படியான ஊர்கள் பல உளளன. ஆத்திக்குளம், கற்குளம், புளியங்குளம், கற்சிட்டு, காவயன்குளம், கொச்சிச்சான்குளம், கள்ளன்குளம், மாங்குளம், மதவாக்குளம், நாய்க்குளம், பெரியகுளம், பெரியமடு, இராமன்குளம், சந்தனன்குளம், சங்கட்டிக்குளம், செம்புக்குழி, சின்னக்கட்டைக்காடு, காரைக்குளம், முதலைக்குழி, கொல்லன்குளம் என்பன அவற்றுள் சிலவாகும். முன்பு நிலவிய தமிழ்ப் பெயர்கள் பல சிங்கள மொழிபெயர்ப்புக்கு ஆளாகியும் சிங்கள மரபுக்கேற்ப திரிபுபட்டும், சிங்கள மொழியுடன் தமிழ்மொழியை சேர்த்தும் வழங்கப்படுகின்றன. முன்பு கூறப்பட்ட பற்றுக்களின் பெயர்களும் தமிழ்ப் பெயர்களாக இருப்பதைக் காண்க.

தமிழ் மாகாணமான தெமழஹத் பற்று உட்படப் புத்தளப் பிரதேசம் ஒரு காலத்தில் சன நெருக்கம் நிறைந்த செல்வவளம் மிக்க உற்பத்திப் பிரதேசமாக விளங்கியுள்ளது. நீர்ப்பாசனத்துறையில் முன்னேற்றம் கண்டு இருந்தது. பண்டைக்காலத்தில் முக்கியத்துவம் பெற்று விளங்கிய கோயில்களினதும் நகரங்களினதும் கிராமங்களினதும், குளங்களினதும் சிதைவுகள் இப்பகுதியின் தொன்மைச் சிறப்பினை வலியுறுத்துகின்றன. பின்பு பல காரணங்களினால் இப்பகுதி மக்கள் கூட்டாக வெளியேறி உள்ளதாகப் புலப்படுகின்றது. இங்கிருந்த நகரங்களும் கிராமங்களும் கோயில்களும் குளங்களும் நீர்ப்பாசன அமைப்புக்களும் மீட்கமுடியாது சிதைவுக்குட்பட்டுள்ளதை அனுமானிக்க வேண்டிய நிலையில் உள்ளன.




1826 கட்டின் போர்பஸ் (Forbes) என்பவர் குருநாகலில் இருந்து அனுராதபுரம் செல்லும் வேளையில் பொன்பரப்பி ஆற்றின் மீது அமைக்கப்படடிருந்த கல்லணையின் சிதைவுகளைக் கண்டுபிடித்தார். அதனுடன் தொடர்புள்ள கால்வாய் அமைப்புக்களையும கண்டு வியந்துள்ளார். இந்த அணை இந்தியாவில் அமைக்கப்பட்டிருந்த புராதன அணைகளைப் போன்றதாகும் என்கின்றார். கற்கள் ஒழுங்கான முறையில் அடுக்கப்பட்டு பெரும் நீரோட்டத்தைத் தாங்கக் கூடியவாறு கற்கள் அமைக்கப்பட்டுள்ளன. அணை நீர் மட்டத்தில் இருந்து 18 அடி உயரமாகவும் தரைமட்டத்தல் இருந்து 6 அடி உயரமாகவும் உள்ளது. அணையின் அடிவாரத்தில உள்ள மலைக்குன்றின் பரபபில் துளைகள் இடப்பட்டு அதனுள் கற்றூண்கள் நடபபட்டு இருந்தன. கட்டுமானத்தை இணைப்பதற்கு நீண்ட கற்றூண்கள் அல்லது நீர் இறங்காத வைரமுள்ள மரங்கள் உபயோகிக்கப்பட்டன.

மேற்கூறிய வளமான வரலாற்றுக் குறிப்புக்கள் எதை உணர்த்தி நிற்கின்றன. அதாவது, தமிழர் வடக்கையும் கிழக்கையும் கட்டி ஆண்டதுடன் வடமேற்கையும் கட்டி ஆண்டதற்கு இவை சான்று கூறுகின்றன. இங்கு தமிழர் என்று குறிப்பிடும்போது இஸ்லாம் தழுவிய எம் இனிய உடன்பிறப்புக்களையும் இணைத்துத்தான் கூறுகின்றோம்.

### பிட்டும் தேங்காய்ப்பூவும் போன்ற உறவு

இதுவரையில் நாம் எடுத்துரைத்த உண்மைகள் இஸ்லாம் தழுவிய தமிழர்களுக்கும் ஏனைய மதம் தழுவி நிற்கும் தமிழர்களுக்கும் ஒரு பிரிக்க முடியாத பிணைப்பு உண்டு என்பதை இனிது எடுத்தியம்புகின்றது. தந்தை செல்வாவின் காலம் தொடங்கி இதுகாலவரையில குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் எமக்கு இஸ்லாமியத் தமிழ் மக்களுக்கும் இடையில் இருந்த உறவை நாம் எளிதில் மறக்க முடியாது. அது பிட்டும் தேங்காய்ப்பூவும் போன்று பிண்ணிப்பிணைந்த வரலாறே. இஸ்லாமிய தமிழ்மக்களுக்கும் எமக்கும் இடையே நிலவும் பிணைப்பாகும்.

மறைந்த எம்.எச்.எம். அஷ்ரப் 'நான் எனும் ந' என்ற கவிதைத் தொகுப்பில் எஸ்.ஜே.வியை என் இறக்கைகளில் காணுங்கள் என்ற கவிதையில் எம் கண்களை கலங்கச் செய்யும் முறையில்,

*"வானத்து அமரர்களே உங்கள் வாசல்கதவுகளைத் திறவுங்கள் - எங்கள் மானத்தைக் காப்பதற்காய் ஒரு பெரும் மனிதனை மீண்டும் ஒரு தடவை அழைத்துச் செல்லவந்துள்ளேன்; வழி விட்டு அவருக்கு சோபனங்கள் கூறுங்கள்!"* என்று பாடுகிறார்.

*இறந்த பின்னும் உயிர்வாழும் சிறந்த மனிதனை அழைத்துச் செல்ல வந்துள்ளேன் அவரேயென் சிறகுகளின் மீது ஏற்றுங்கள்! வீண் சாட்டுச்சொல்லி என் நேரத்தை விரையமாக்கி விளையாடாதீர்கள்! அழைத்து வாருங்கள் அந்த அகிம்சையின் உருவத்தை! ஏற்றுங்கள் என் வெள்ளி இறக்கைகளில் வானத்துப் பூந்தோட்டமே வர்ண மலரேணியை ஆயத்தமாக வைத்திடு;*

மேற்கூறிய அஸ்ரப்பின் உள்ளம் உருக்கும்

(11 ஆம் பக்கம் பார்க்க)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

பிறப்பு 14 – 01 – 1945



இறப்பு 21 – 08 – 2004

### அமரர் க.சிவஞானசுந்தரம்

நாளை (4.10.2004) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அன்னாரின் சபிண்டீகரணக் கிரியைகளிலும், தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகியவற்றிலும் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சந்தாதோட்டம்,
புலோலி கிழக்கு,
புலோலி.

(36954)(42-13-18)

பிரிவால் வருந்தி நிற்கும்:
**மனைவி கமலாதேவியும்,
பிள்ளைகளும்.**

## நெஞ்சைவிட்டகலாத நினைவலைகள்

| முதலாம் ஆண்டு | 16ஆம் ஆண்டு |
|---|---|
| மலர்வு 15 – 04 – 1921 | மலர்வு 18 – 09 – 1958 |
| உதிர்வு 15 – 10 – 2003 | உதிர்வு 14 – 12 – 1988 |





**கதிர்காமர் கணபதிப்பிள்ளை** **கணபதிப்பிள்ளை யோகேஸ்வரன்**

பிறந்தீர் பெருந்தகையாய் பேணுமொரு தலைவராய்
சீர் பொருந்த வாழ்ந்தோம் நின்பெருமையால் நிறைந்தோம்
நெடு விருட்சமாய் நின்றதொரு திருநாமம் ஆண்டுகள் பல மறைந்தாலும்
மறவாது ஏற்றுவோம் இதயத்தில் திருவிளக்கை.

துக்கக் கதவுகளை எமக்குத் திறந்து விட்டு
தூக்கக் கதவுகளை நீரோ அடைத்துக் கொண்டு
நிரந்தரமாய் நீ தூங்கி ஆண்டுகள் பதினாறாயினும்
உம் நினைவலைகள் எம்மைவிட்டு என்றும் அழியாது.

உங்கள் இருவரது ஆத்ம சாந்திக்காய்
இறைவனைப் பிரார்த்திக்கும்
**குடும்பத்தினர்.**

கண்டி வீதி,
மடத்தடி,
கொடிகாமம்.

(37086)(42-13-18)

## ஆசிரியர் செயலமர்வு பிற்போடப்பட்டது

கோப்பாய் ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் இன்று நடைபெறவிருந்த ஆங்கில ஆசிரியர்களுக்கான செயலமர்வு பிற்போடப்பட்டுள்ளதாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (4-117)

## யாழ்.பல்கலையில் ஆய்வுப் பயிற்சிநெறி

நோர்வே நாட்டின் ஒஸ்லோ பல்கலைக்கழக சமூகவியல், புவியியற்றுறையும் மற்றும் நோர்வே விவசாய பல்கலைக்கழகம், யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறையுடன் இணைந்து சமாதானமும் அபிவிருத்திக்குமான கற்கை மற்றும் கோளம் தழுவிய உள்ளூர் அபிவிருத்தி ஆகியன அடங்கிய ஆய்வுப் பயிற்சிநெறி ஒன்றை யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறையில் நடத்தவுள்ளது.

ஒரு வாரகாலம் நடைபெறவுள்ள இக்கற்கை நெறியில் கலந்துகொள்ள விரும்புவோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் 'தலைவர்' புவியியற்றுறை,யாழ் பல்கலைக்கழகம். என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டுமென கற்கை நெறியின் இணைப்பாளர் கேட்டுள்ளார். (எ-204)


## Foundation Degree Programme for Higher Education / Career

உடனடித் தொழில் வாய்ப்பொன்றை பெற வேண்டும் ஆனால் போதிய தகைமையில்லை.

UK, Canada, Australia, Newzealand போன்ற நாடுகளில் உயர் கல்வியை தொடர வேண்டும். ஆனால் இந்நாடுகளுக்கான Student Visa க்களை பெற்றுக்கொள்ள போதிய தகுதியில்லை.

நிச்சயமாக நீங்கள் இவற்றுள் ஏதாவது ஒரு பிரச்சினைக்கு முகம் கொடுப்பீர்கள். கவலை வேண்டாம். Foundation Degree Programme for HigherEducation / Career எனும் 3 மாத கால பாட நெறியை பயில்வதன் மூலம் உங்களை ஒரு தகைமை வாய்ந்தவராக மாற்றிக்கொள்ள முடியும்.

- கற்கை நெறிக்கான அடிப்படை தகைமை: G.C.E. O/L
- பாடப்பரப்பு: ஆங்கிலம், ஆளுமை விருத்தி, கணனி ஆகிய துறைகள்.

பாடநெறி முடிவில் சர்வதேச அங்கீகாரம் கொண்ட சான்றிதழ்களின் உதவியோடு UK, Canada, Australia, Newzealand, போன்ற நாடுகளில் உயர்கல்வியை தொடர விரும்பும் மாணவர்களுக்கு விஷேட ஆலோசனைகளும் பூரண VISA ஒழுங்கு முறைகளும் London Institute இனால் மேற்கொள்ளப்படும்.

LONDON·INSTITUTE OF FURTHER EDUCATION
27, Hospital Road, Dehiwela.
Tel: 011 5518666, 0777 715788
E-mail: edulife@sltnet.lk

# 50% விசேட கழிவு

2004, August

**ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கு,**

ஏதாவது சிறுவர்களுக்கான ஆங்கிலப் பாடநெறியில் → 50% கழிவுடன் சேரலாம்

ஏதாவது சிறுவர்களுக்கான கணனிப் பாடநெறியில் → 1000 ரூபா வுடன் சேரலாம்

இச்சலுகை
15 October 2004
வரை மட்டுமே

**புதிய ஆங்கில பாடநெறிகள்**

சிறுவர்களுக்கு
- Pre-foundation
- Foundation
- Lower Intermediate
- Intermediate
- Upper Intermediate

இவ்வாரம் ஆரம்பம்

## பெற்றோர்களே !




உங்கள் குழந்தை 2+ முதல் 6 வயதுக்குட்பட்டவரா?
இதோ! அவரின் ஆங்கல மொழி அறிவை வளர்க்க அரியதோர் சந்தர்ப்பம்.

முற்றிலும் ஆங்கில மொழியில் ஆனால் தமிழ் மொழி ஓர் கட்டாய பாடமாக உள்ளடக்கப்பட்ட சிறுவர்களுக்கான பாலர் பாடசாலை நெறிகள்:

கிழமை நாட்களில் திங்கள் முதல் வெள்ளி வரை
- **Play Group** (For Kids from 2+ to 3+ Years of age)
- **Montessori School** (For Kids from 3+ to 4+ Years of age)
- **Pre - School** (For Kids from 4+ to 5+ Years of age)

**English Elocution**
Speech & Drama
கற்பிக்கப்படும்

இந்துமத சிறார்கள் 2005 க்கான அனுமதிகளை விஜயதசமியன்று பெற்றுக் கொள்ளலாம். கிறிஸ்தவ மற்றும் ஏனைய மதச் சிறார்கள் தமது அனுமதிகளை மார்கழி மாதத்திற்குள் பெற்றக் கொள்ளலாம்.

British BUSINESS SCHOOL
Where Students Come First

**BRITISH BUSINESS SCHOOL**

| யாழ்ப்பாணம் | வடமராட்சி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 14D, கோயில் வீதி, யாழ்ப்பாணம். | பருத்தித்துறை வீதி, கிராமக்கோட்டடி, புலோலி. | 174, கண்டி வீதி, யாழ்ப்பாணம். |

TELEPHONE : 021-2225796

யாழ்ப்பாணம்



# அரவணைக்கும் அன்னை...!

*'கலை, கல்வி, தொழில் யாவும் பயில் கோயில்*
*எம்மைக் கண்காணித்து உருவாக்கும் திருக்கோயில்'*

வாழ்வின் வசந்தங்களை நாம் இழந்து விட்டோமோ என ஏங்கி நிற்கும் பிஞ்சுகளைத் தன் துணைக்கரத்தை நீட்டி 'அரவணைத்து வாழவைக்கின்றது சைவ வித்தியா விருத்திச் சங்கச் சிறுவர் இல்லம்.

இந்தவாரம் இந்த இல்லத்தின் தோற்றம் பற்றியும் அதன் வாழ்வுமுறை பற்றியும் தொகுத்துத் தருகின்றோம்.

### இல்லத்தின் மலர்வு

123 வருடங்களுக்கு முன் சபாபதி என்பவர் ஆடியபாதம் வீதியிலுள்ள தனது வீட்டில் 12 பிள்ளைகளைப் பராமரித்துவந்தார். இவரது இந்தச் சேவையுள்ளமே இன்று இல்லமாக மலர்ந்திருக்கின்றது. அன்று அருகிலிருந்த வேற்று மதப் பாடசாலையிலேயே பிள்ளைகள் கல்விகற்க வேண்டிய சூழ்நிலை இருந்தது. இதனை அவதானித்த அவர் பிள்ளைகள் இருந்த வீட்டிற்கு அருகிலேயே முத்துத்தம்பி ஆரம்பப் பாடசாலையைக் கட்டினார்.



தன் சேவைக்குப் பக்கத்துணையாக இராஜரட்ணம் என்பவரையும் இணைத்துக்கொண்டு பணியாற்றினார். இவர் தனது காலத்திலேயே அநாதை இல்லம் என்ற பெயரைக் கைவிட்டு சைவச்சிறார் இல்லம் என்ற பெயரை உருவாக்கினார். பிள்ளைகள் 'அநாதை' என்ற சொல்லினூடாகத் தாம் ஆதரவற்றவர்கள், ஏழைகள் என்ற தாழ்வுணர்ச்சியைத் தாமாக ஏற்படுத்திக் கொள்வார்கள். இதனால், அவர்களின் அன்றாட வாழ்வு பாதிக்கப்படுவதோடு, எதிர்காலமும் கேள்விக்குறியாகிவிடும். இதனை உணர்ந்த அவர், இல்லத்தின் பெயரில் கூட 'அநாதை' என்ற சொல் இருக்கக்கூடாது என்ற நோக்கத்துடன் சைவச் சிறார் இல்லம் என்று பெயரை மாற்றியமைத்தார்.

இவருக்குப் பின் கனகநாயகம் என்பவரே இந்த இல்லத்தை நடத்திவந்தார். இவரது காலத்தில் போர் மேகம் சூழ்ந்திருந்த காலம். ஆதலால் வருமானம் என்பது இந்த இல்லத்திற்குக் கிடைக்கவில்லை. எனவே எந்தவிதப் பங்களிப்புமின்றித் தனது சொந்தப் பணத்திலேயே நடத்திவந்தார்.

இவர்காலத்தில் இந்த இல்லத்திற்கெனச் செயற்குழு அமைக்கப்பட்டுக் கட்டுக்கோப்பான ஒரு ஸ்தாபனமாக மாற்றப்பட்டது.

### இல்லத்தில் இன்று.......

இன்று இந்த இல்லமானது பொதுச் சபை ஒன்றின் வழிநடத்தலிலேயே இயங்கி வருகின்றது. இந்தப் பொதுச்சபையில் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் உப தலைவர்கள் போன்ற முக்கிய உறுப்பினர்களோடு கல்வி, இல்லம், சமயம், பண்ணை, சுகாதாரம் போன்றவற்றுக்கெனத் திட்டப்பணிப் பாளர்களும் நியமிக்கப்பட்டு திறமையாகச் செயற்பட்டு வருகின்றார்கள். தற்போது இந்த இல்லத்தில் 245 பிள்ளைகள் வாழ்கின்றனர். இவர்களில் 104 பேர் ஆண்கள். 141 பேர் பெண்கள்.

### இல்லத்தின் இயக்கம்

ஒரு திறமையான கட்டமைப்புடன் சைவ மரபுப்படி இந்த இல்லம் இயங்கிவருவதை நாம் நேரிலேயே பார்த்தறிந்தோம். காலை முதல் மாலைவரை பிள்ளைகள் நல்லொழுக்கத்துடனும் நல்லமுறையிலும் வாழத்தேவையான வகையில் பிள்ளைகளின் செயற்பாடுகளை வரையறுத்துள்ளார்கள்.

காலை, மாலை பிரார்த்தனைகளுடன், தினமும் காலை உடற்பயிற்சி ஆசிரியர் மூலம அளிக்கப்படுகின்றது.

பாடசாலைக் கல்வி மட்டும் பிள்ளைகளுக்குத் திருப்தியாக அமையாததால் பிரத்தியேகமான வகுப்புகள் அனைத்துப் பாடங்களுக்கும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

இதனைவிடப் பிள்ளைகளின் எதிர்கால வளங்களைக் கருத்தில்கொண்டு பல்வேறு வகையான தொழிற்கல்வியும், வழங்கப்படுகின்றது. தையல், கணனி, கைப்பணி போன்ற பயிற்சிகள் வழங்கப்படுவதோடு, ஆண்களுக்கு இயந்திரவியல் பயிற்சிவழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவை தவிர சங்கீதம், நடனம், போன்ற கலைகளையும் பிள்ளைகளிடத்தில் வளர்ப்பதற்கென விசேட வகுப்புகளும் நடத்தப்படுகின்றன.

### தேவைகளின் நிறைவு

பிள்ளையின் உரிமையான அடிப்படைத் தேவைகள் இங்கு திருப்திகரமாக நிறைவுசெய்யப்படுகின்றது.

உணவுத்தேவையானது, இங்கு கொடையாளர்களால் நிறைவுசெய்யப்படுகின்றது. கொடையாளர்கள் நினைவுதினம், பிறந்த தினம் போன்ற நாள்களில் இந்த இல்லத்தில் தமது உபகாரமாக ஒருநேர உணவளிக்க வருகின்றார்கள். இவ்வாறு பல கொடையாளிகள் மனமுவந்து முன்வருவதால் ஏற்கனவே, பதிவுசெய்ய வேண்டியநிலை உள்ளது.

இதனால், பிள்ளைகள் நாளாந்தம் பல்சுவை விருந்து உண்பதோடு இந்தத் தேவை மட்டில் பிள்ளைகள் பூரண திருப்தி அடைகின்றனர்.

இதேபோன்று, பிள்ளைகளுக்கு வேண்டிய உடை, மருத்துவம் போன்ற பல்வேறு தேவைகளும் பல கொடையாளிகள் மூலம் நிறைவு செய்யப்படுகின்றது.

### நடைமுறைகள்

இந்த இல்லத்தில் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கெனப் பல்வேறு நடைமுறைகள் பொதுச் சபையினால் பின்பற்றப்பட்டு வருகின்றன.

குறிப்பாக இல்லத்தில் சேர்ப்பதற்கு அவர் சார்ந்த கிராம உத்தியோகத்தரின் சிபார்சுடன் பிரதேச செயலர் ஊடாக விண்ணப்பிக்கவேண்டும். இந்த விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு சிறுவர் நன்னடத்தை அதிகாரியின் சிபார்சின் பேரில் இல்லத்தில் பிள்ளைகள் இணைக்கப்படுகின்றார்கள்.

இங்கு பிள்ளைகள் வசிப்பதற்கான கால எல்லையாகப் பெண்பிள்ளைக்கு 18 வயதும், ஆண்பிள்ளைக்கு 16 வயதும் என வரையறுக்கப்பட்டுள்ளது. அதன்பின்னரான பிள்ளையின் வாழ்வுக்கெனத் தொழிற்கல்விகள் கற்பிக்கப்படுகின்றது.

இங்கு வெளியாரால் 'கொடுக்கப்படும் சமைத்த உணவுகள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. கொடையாளிகள் பணமாகக் கொடுத்து இல்லத்திலேயே சமைத்து உணவளிக்கலாம்.

ஆண்கள் தங்கும் இல்லத்தில் சிறாராலேயே சிறியதொரு கோயில் அமைக்கப்பட்டு வழிபட்டு வருகின்றனர்.

இந்த இல்லத்தில் பல விழாக்கள் கொண்டாடப்பட்டு சிறுவர்களின் மகிழ்ச்சியை பன்மடங்காக்குகின்றனர். குறிப்பாகப் பொங்கல் விழா, தீபாவளி, விளையாட்டுப்போட்டி, பெரியார் இராசரத்தினம் பிறந்தநாள் போன்ற விழாக்கள் கொண்டாடப்படுவதோடு, புதுவருடத்தினத்தில் பிள்ளைகளுக்கு கைவிசேடமும் வழங்கப்படுகின்றது.



### இல்லத்தின் தூண்கள்

இந்த இல்லத்தின் செயற்பாடுகள் மட்டிலும், வளர்ச்சியிலும் பலர் அக்கறை காட்டி வருகின்றனர்.

உணவு, உடை, மருத்துவம், கல்வி போன்ற அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கும் பல கொடையாளிகளே துணையாக நிற்கின்றனர்.

தையல்பயிற்சி வழங்குவதற்கு சிட்னியின் ஈழத்தமிழர் கழகம் நிதியளித்து ஆதரவு வழங்கியது. கனடாவில் உள்ள பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் 2 கணனிகள் வழங்குவதற்கென 2 ஆயிரத்து 625 கனேடிய டொலர்களை வழங்கியுள்ளது.

இப்படிக் குறிப்பிடும்படியாகப் பலரும் தாமாக முன்வந்து கொடையளித்து பல பிள்ளைகளின் வாழ்வு வளம்பெற உதவுகின்றனர்.

### இல்லத்தின் எதிர்காலம்

இந்த இல்லத்தில் ஆண்கள், பெண்களுக்கெனத தங்குமிடங்கள் உள்ளபோதும் போதிய வசதிகள் இல்லாமையால் ஆஸ்திரேலிய 'ஈழத்தமிழர் சங்கத்தின் நிதியுதவியுடன் இணுவில் பகுதியில் ஒரு காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இடமில்லாத காரணத்தால் மேல் மாடிக்கட்டடம் ஒன்றும் கட்டப்பட்டு வருகின்றது. இதுவும் ஆஸ்திரேலிய ஈழத்தமிழர் சங்கத்தின் நிதியுதவியுடனேயே கட்டப்படுகின்றது.

### இல்லத்தின் மழலைகள்

இல்லத்தின் மழலைகளுக்குப் பண்பும், பணிவும் கல்வியுடன் சேர்த்து ஊட்டப்படுகின்றது. பெற்றோரை இழந்தாலும், வறுமையால் வாடினாலும் சைவமரபுகளும், பண்புகளும் மாறாமல் தற்துணிவோடு வாழ்வெனும் வசந்தத்தை ஒவ்வொரு பிள்ளையும் அனுபவிககின்றனர்.

கல்வியுடன் முடிவதில்லை அதன்பின் தொழிலென்னும் ஒருநிலையிருக்கின்றது என்பதை உணர்ந்த பிள்ளைகளும் கல்வயைக் கற்பதோடு நின்றுவிடாது தொழிற்கல்வியையும் ஆர்வத்துடன் கற்கின்றார்கள்.

இங்குவாழும் ஒவ்வொருபிள்ளையும் ஒற்றுமையுடனும், மகிழ்வுடனும் முரண்பாடுகள் அற்று வாழ்கின்றார்கள்.

விசேடமாகத் தியானப் பயிற்சிகளிலும் ஈடுபடுகின்றார்கள். 'வேர்ல்ட் விஷன்' என்ற அமைபபினர் பிள்ளைகளுக்குப் பிரத்தியேகமான பயிற்சிகள் அளித்து சான்றிதழ்களும் அளித்துள்ளனர்.

கலை, விளையாட்டுப் போன்ற துறைகளில் மிகுந்த ஈடுபாடுகொண்டு பங்குபற்றித் தம் திறமைகளைச் சிறப்பாக வெளிப்படுத்தியும் வருகின்றனர்.

கல்வியிலும் சிறப்பாகச் செயற்படுகின்றனர். இந்த வருடம் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த சோ.சுகன்யா என்னும் மாணவி பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியுள்ளார். அதே போன்று 2003 இல் செ.யசிந்தா, 2001 இல் சி.சுபதீபா போன்றவர்களும் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

இந்தப் பிள்ளைகளின் செயற்பாட்டுத் திறனைக் கண்ணுற்ற பலரும் இவர்களுக்கு உதவ முன்வருகின்றார்கள்.

### நிறைவாக....

ஆயிரம்கோயில் கட்டுவதிலும் ஓர் ஏழைச் சிறுவருக்கு கல்வியளிப்பதே சிறந்த தர்மம் என்பதை நன்குணர்ந்த இந்த இல்ல ஸ்தாபகரின் சேவை இன்றும் என்றும் நிறைவுடன் செயற்படவாழ்த்துகின்றோம்.

- தீபா -

★

# ஆளுமையுள்ள சமுதாயத்தின் ஆணிவேராகும் நூலகங்கள்

திருமதி பொற்செல்வி ஸ்ரீரஞ்சன்
நூலகர்,
நல்லூர் கிளை நூலகம்,
யாழ். மாநகரசபை.

"மனிதரெல்லாம் அன்புநெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப் போல் விரிவடைந்து
தனிமனித தத்துவமாய் இருளைப் போக்கி
சகமக்கள் ஒன்றென்பதுணர்வதற்கும்
இனிஇனிதாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம்
இலகுவது புலவர் தரு சுவடிச்சாலை
புனிதமுற்று மக்கள் புதுவாழ்வு வேண்டில்
புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்"
*(புதுமைக் கவிஞர் பாரதிதாசன்)*

வடகிழக்கு மாகாணத்தில் 225 பொது நூலகங்கள் உள்ளூராட்சி மன்றங்களினால் நிர்வகிக்கப்பட்டு இன, மத, வயது, பால், சமூக நிலை என்பவற்றை நோக்காது மக்களுக்குப் பணிபுரிந்து வருகின்றன.

அறிவைப் பெறுவதற்கான நுழைவாயிலாகப் பொதுநூலகம் இருப்பதுடன், தனிநபருக்கும் சமுதாயத்திற்கும் வாழ்நாள் முழுவதற்குமான கல்வியை வழங்குவதுடன், சுதந்திரமாகத் தீர்மானம்செய்வதற்கும் கலாசார அபிவிருத்திக்குத் தேவையான சந்தர்ப்பங்களை உருவாக்குவதற்கும் உதவுகின்றது.

"புதிய உலகிற்கான புதுமனிதன் இன்று குழந்தையாய்ப பிறந்துள்ளான். அவனை நாளைய உலகிற்கு மனிதப் பண்புள்ளவனாக' மாற்றியமைக்கும் பொறுப்பு பொதுநூலகங்களுக்குரியது.

நூலகம் என்பது ஒரு சுயகற்றல் சாதனமாகும். இது இடையறாது மக்களிற்குக் கல்வியூட்டுகிறது. அதாவது, நியாயமான கல்விக் கூடங்களில் ஆசிரியர்கள், மாணவர்களிற்கு குறிப்பிட்ட பருவம் வரை கல்வியூட்டுகிறார்கள். ஆனால், ஒரு நூலகம் ஒருவர் தாமே சுயமாகக் கற்றுக்கொள்ளவும் குறிப்பிட்ட கால வரையறையின்றி எக்காலமும் கல்வியைப் பெற்றுக்கொள்ளவும் துணைபுரிகின்றது. உண்மையில் 'வாழ்நாள் முழுவதும் கல்வி' மேற்றொடர் கல்வி ஆகிய எண்ணக் கருக்களுக்கும் உயிரையும் உணர்வையும் கொடுப்பது பொது நூலகம் எனில், அதுமிகையாகாது.

"வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான்" என்பதற்கிணங்க சான்றோர் ஒருவரின் உண்மையான கல்வி பாடசாலையை விட்டு நீங்கிய பின்பும் பிற்காலத்தில் தொடர்ந்து செல்வதாகும். 'எனவே, நூலகம் சமுதாயத்திற்கு கல்விவழங்கும் ஒரு முக்கிய நிறுவனமாகத் திகழ்கிறது. "அன்னசத்திரம் ஆயிரம் அமைததலிலும் சிறந்தது ஆங்கு ஓர் ஏழைக்கு எழுத்தறிவிப்பது" என்ற நோக்கின் அடிப்படையில் உள்ளூராட்சி மன்றங்கள் பொதுநூலகங்கள் மூலம் சேவை வழங்கிவருகின்றன

### பஞ்சசீலக் கொள்கை

பொதுநூலகங்கள் நூலகவியலின் தந்தை எனப் போற்றப்படும் எஸ்.ஆர்.ரங்கநாதனின் பஞ்சசீலக் கொள்கைகள் வருமாறு:-

1. நூல்கள் பாவனைக்கே.
2. வாசகருக்கேற்ற நூல்கள்.
3. நூலுக்கேற்ற வாசகர்.
4. வாசகர் நேரம் பேணுக
5. நூலகம் வாழும் தன்மையுடையது.

என்ற கோட்பாடுகளின் அடிப்படையில் வாசகர்களுக்கு நூலகம் பணிபுரிந்து வருகின்றது. வாசகர்களுக்கு பின்வரும் சேவைகளை வழங்குகின்றது.

- ▲ இரவல் வழங்கும்சேவை.
- ▲ உசாத்துணை சேவை.
- ▲ சிறுவர்களுக்கான சேவை.
- ▲ பத்திரிகைகள், சஞ்சிகைகள் சேவை.
- ▲ கட்புல செவிப்புல சாதனச் சேவை.
- ▲ தகவல் தொழில்நுட்ப சேவை.
- ▲ நடமாடும் நூலக சேவை.

அத்துடன், விளம்பரங்கள், சுவரொட்டிகள், படங்கள், கருத்தரங்குகள், கண்காட்சிகள், விரிவுரைகள், கதைநேரம் போன்ற வழிகளிலும் மக்களுக்கு அறிவை வழங்குகின்றது. இதனால், வாசிப்புததிறன் ஊக்குவிக்கப்படுகின்றது.

பொதுநூலகங்கள், நூலக வளங்களிலிருந்து வாசகர் ஒருவருக்குத் தேவையான தகவல்களை ஒழுங்கமைத்து வழங்குகின்றது.

பாவனையாளர் கல்வி மூலம், அதாவது "நூலகத்தை நன்கு பயன்படுத்த வாசகருக்கு உதவுதல்" மூலம் நூலகம் தனது சேவையை வழங்கிவருகின்றது.

❋ நூலகசேவை எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

❋ தகவல்கள் எவ்வாறு பெறலாம், எவ்வாறு தேடிக்கொள்ளலாம்.

❋ நூலகத்திலுள்ள பகுப்பாக்கத்திட்டப் பட்டியலாக்கம் மூலம் நூல் ஒன்றினை எவ்வாறு தேடிக்கொள்வது

❋ நூல்கள் இறாக்கைகளில் எவ்வாறு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது போன்ற செயல் முறைகளினால் வாசகர் கல்வியை இலகுவாக்கின்றன.

இவ்வாறாக பொதுநூலகங்கள் "மக்கள் சமுதாயத்தை ஆளுமை உள்ளவர்களாகவும் கலாசார நிலையை மேம்படுத்தும் நிலையமாகவும் திகழ்கறது. அத்துடன், இடையிடையே வந்துபோகும் வாசகரை நிரந்தர வாசகராக மாற்றி சமூக வளர்ச்சிக்கு ஊன்றுகோலாகத் துணை நிற்கின்றது. ★

# சிக்கலினால் தலைமயிர் உதிர்கிறதா?




சிக்கல் படிந்த சிகையை உடனடியாக சீராக்கி தலைமயிர் உதிர்வைத் தடுக்கிறது. அத்துடன் விட்டமின் Eயும் அடங்கியிருப்பதால் தலைமயிர் வளர்ச்சிக்கும், உறுதிக்கும் உறுதுணையாகிறது.

LIVON™ HAIR FLUID WITH VITAMIN E

SILKY POTION

Imported & Marketed by: PHARMCO MARKETING SERVICES (PVT) LTD.

Distributed by: JEGAN PHARMACY. No. 462 B, Hospital Road, Jaffna. Tel: 021 2222194


## உயர்தர மாணவருக்கு வகுப்புகள்

கோப்பாய்,ஒக்.3 யாழ்ப்பாணம் கல்வி வலய கல்வி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் கோபபாய்க் கோட்டப் பாடசாலை உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு ஈழத்து இலக்கிய வரலாறு பாடப் பகுதி தொடர்பான விளக்க வகுப்புகள் பிரதி வியாழக்கிழமை தோறும் பிற்பகல் 3 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றன.

• இதற்கான ஆரம்ப வகுப்புகள் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றன.

(4-72)

## சந்தேகநபர் விளக்கமறியலில்

தென்மராட்சி,ஒக்.3 பல திருட்டுக்களுடன் தொடர்புடையவர் என்று சந்தேகிக்கப்படும் ஒருவரைச சாவகச்சேரிப் பொலீஸார் தச்சன்தோப்புப் பகுதியில் குடியிருப்பு இல்லாத வீடு ஒன்றில் வைத்துக் கைது செய்துள்ளனர்.

இந்த நபரை கடந்த 30ஆம் திகதி சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்த போது எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (4-117)


பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ. சங்கப் பொதுமுகாமையாளரும், சமூகத்தொண்டருமாகிய

**திரு.சுப்பிரமணியம் வயிரவநாதர்**

அவர்கள் 23.09.2004ஆம் திகதி வியாழக்கிழமை யாழ். மாவட்ட நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் அவர்கள் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதையிட்டு அவரை மகிழ்ச்சியுடன் பாராட்டுவதுடன், மேலும் அவர் பொதுச் சேவையில் ஈடுபட்டு நீடுழிகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.


பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

(37952) (24-14-44) பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ. சங்கம்.



# மசீபர்கியூஸன் டிராக்டர்

நூற்று முப்பத்து ஐந்து இருநூற்று நாற்பது



## தேவ் டிரக்டர்ஸ்

196, கண்டி ரோட், யக்கல.

(லங்லோ அருகில்)

தொலை பேசி : 033 - 2226010

பக்ஸ் : 033 - 2226716



# 2ம் லெப் மாலதி நினைவு நாள் 10.10.2004

# தமிழீழ பெண்கள் எழுச்சி நாள்

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில், மகளிர் படையணிகளின் போரியல் வரலாற்றை எடுத்துக் காட்டுகின்ற

- படைக்கலக் கண்காட்சி
- போர்க்கருவிகள் உற்பத்திச்சாலை
- விடியல் படைவீடு
- இராணுவ மருத்துவமனை
- சண்டைக் காட்சிகள்
- சிறப்புக் கலைநிகழ்வுகள்

வென்றிடுவீர் பரிசுகளை

பார்வையாளர்களுக்கான

- துப்பாக்கிச் சூட்டுப்போட்டிகள்
- தனி விளையாட்டுகள்

2ம் லெப். மாலதி நினைவுக் கேடயத்துக்கான மகளிர் உதைபந்தாட்டப் போட்டிகள்

தமிழீழத்தின் முன்னணி இசைக்கலைஞர்களும் போராளிக் கலைஞர்களும் இணைந்து வழங்குகின்ற இசைநிகழ்வுகள்



அனைவரும் வருக

மகளிர் படையணி
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்

கிளிநொச்சியில் 5 நாட்கள் சிறப்பு நிகழ்வுகள்

காலம்:- 06.10.2004 - 10.10.2004

நேரம்:- காலை 9.00 -இரவு 10.00 மணி

இடம்:- கிளிநொச்சி மத்திய மைதானம்.

# குருத்தோலைகள் விழுகின்றன; காவோலை சிரிக்கிறது...!

*ஒரு நூற்றாண்டு என்றால் நம்மில் பலர் 'ஆ' எத்தனை காலம் என வாயைப் பிளக்கிறோம். ஆனால். ஒருவர் ஒரு நூற்றாண்டு காலம் வாழ்வது என்பது இன்றைய உலகில் எத்தனை அதிசயம் ...*

*ஆம்.*

*யாழ்.மாவட்டத்தின் மூத்த வயோதிபர் என்ற பெருமையுடன் இன்னமும் 'கம்பு' போல 'கம்' என்று நிமிர்ந்து நிற்கிறார் -*

*திருமதி சுவாமிநாதன் வள்ளியம்மைப்பிள்ளை (வயது 103).*

*முப்பது வயது வரமுன்னரே இடுப்புவலி, இருதய வியாதி, சலரோகம்...., இரத்த அழுத்தம் என்று பட்டியல் போடும் இந்தக் காலத்தில், சாதாரண தடிமனையே காணாத அதிசயப் பிறவி இவர். 81 வயதை எட்டியிருக்கும் மூத்த மகன் கனடாவில் வசிக்கிறார். 70 வயதான கடைக்குட்டி தாயின் அருகே பொல்லூன்றி வாழ்கிறார்.*

*இந்த அதிசயத்தை கோப்பாய் மத்தியில் கண்டபோது வியப்பால் விழிகள் விரிந்தன.*

*யாரையும் வருத்தாத மனம், சைவ போசனம் இவை இரண்டும் தான் இந்த இரும்புச் சீமாட்டியின் ஆயுள் அதிசயமாம்...*

*நம்பமுடியவில்லையா...?*

*தொடர்ந்து படியுங்கள்....*

இந்த வயதிலையும் இருந்து கொண்டு எங்களுக்கு தாற கரைச்சலை தாங்கேலாமல் கிடக்கு. இத்தகைய புகைச்சலை அநேகமாக வயோதிபர்கள் இருக்கும் வீடுகளில் நாம் அடிக்கடி கேட்கக்கூடியதாக இருக்கும்.

இவ்வாறு புகைப்பவர்கள் தமது சிறுவயது துடியாட்டங்களை இந்தப் பெற்றோர்கள் பொறுமையுடன் தாங்கி தம்மை வளர்த்ததை ஏனோ மறந்து விடுகின்றனர்.

காரியம் முடிந்ததும் தூக்கி எறிந்து விடக்கூடிய பொருள்கள் அல்லஇந்த வயதான பெற்றோர்கள். அவர்களை பேணுவது இந்த தலைமுறையின் முக்கிய கடமை!

நாம் என்றுமே குருத்தோலைகளாக இருக்கப் போவதில்லை என்பதை காவோலைகளைக் காணும் போது எண்ணத் தவறிவிடுகின்றோம்.

சர்வதேச முதியோர் தின வாரம் இம்மாதம் முதல் இந்த வாரத்தில் அனுஷ்டிக்கப்படுகின்றது. சாதாரண மனித உறவைப் பேண ஒரு வாரம் முதியோர் தினம் அனுஷ்டிக்க வேண்டிய நிலையில் நாமிருப்பதை எண்ணும் போது நெஞ்சை நெருடவே செய்கின்றது.

முதியோர் வாரத்தில் அவர்கள் குறித்து ஏதாவது தகவல் திரட்டுவோம் என்று எண்ணிய போது எனக்குக் கிடைத்த ஒரு தகவல் என்னை அந்த ஆதாரத்தைத் தேடி ஓட வைத்தது.

## 103 வயது இரும்புச்சீமாட்டி சொல்லும் கதை

யாழ்.மாவட்டத்தில் மிகவும் வயது கூடிய மூதாட்டி ஒருவர் வலி.கிழக்குப் பிரதேசத்தில் இருப்பதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்து சுறுசுறுப்பானேன். யாழ். செயலகத்தினால் இம்மாவட்டத்தில் மிக வயதான பெண் என இவர் இனம் காட்டப்பட்டார். கோப்பாயில் வதியும் சுவாமிநாதன் வள்ளியம்மைப்பிள்ளை வயது 103.

அவரை ஒருமுறை சந்தித்து விடுவோம் என்ற ஆவல் தூண்ட அவர் தற்போது வசித்து வரும் முதலியார் வளவு கோப்பாய் என்ற முகவரியை ஒருவாறு தேடிப்பிடித்து அவ்வீட்டிற்குள் நுழைந்தேன்.

முதலில் தென்பட்டவர் ஒரு வயதான தாத்தா. சரி இவர் யார் என்று முதலில் அறிவோம் என்று ஆவல் தூண்ட, மெதுவாக நான் வந்த விடயத்தை அவரிடம் கூறியபோது அவர் மகிழ்வுடன் என்னை உள்ளே அழைத்தார்.

அங்கே ஒரு மூதாட்டி செந்தளிப்பான முகத்துடன் என்னை அழைத்தார். அவரிடம் ஏதாவது தகவல் பெறலாம் என்று சென்ற என்னிடம அம் மூதாட்டி சரமாரியான கேள்விகளை என் மீது தொடுத்தார்.

நீங்கள் யார்....? ஏன் இவ்வளவு காலமும் வரவில்லை? என்னை தன் உறவினர் என்று நினைத்தாரோ தெரியவில்லை. தனக்குத் தெரிந்தவர்களையெல்லாம் குறிப்பிட்டு என்னிடம் கேள்வி கேட்க ஆரம்பித்தார் என்பாடோ திண்டாட்டம்....



எனது நிலையை அவதானித்தாரோ என்னவோ நான் முதலில் சந்தித்த அந்த முதியவர் அருகில் வந்து நிலைமையினை சுமுகமாக்கி விடயத்தையும் தெளிவுபடுத்தினார்.

மூதாட்டியின் வயதான நிலைமை அவரை அப்படி நடந்துகொள்ள வைத்து விட்டது என அவர் விளக்கி எனது சங்கடத்தை நீக்கினார். தொடர்ந்து அவரே எனது தகவல் திரட்டும் பணிக்கு உதவ முன்வந்தார். அவர் முதலில் கூறிய விடயமே எனக்குத் தூக்கிவாரிப் போட்டது.

தனக்கு 76 வயது என்றும் தாம் அம் மூதாட்டியின் இரண்டாவது மகன் என்றும் கூறியபோது நான் ஒரு கணம் திகைத்து விட்டேன்.

தொடர்ந்து அவர் தனது தாய் 1902 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17 ஆம் திகதி உடுவிலில் பிறந்தார் என்றும் 13 வயதில் கோப்பாயைச் சேர்ந்த சுவாமிநாதன் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார் எனவும் கூறினார்.

வள்ளியம்மைப்பிள்ளை என்ற இந்த 103 வயதான மூதாட்டிக்கு நான்கு பிள்ளைகள். இவரின் கணவர் 88 வயதில் காலமாகிவிட்டார்.

இவரின் மூத்த மகன் 81 வயதான கனகசபை தற்போது கனடாவில் தனது 5 பிள்ளைகளுடன் வசித்து வருகிறார். எனக்குத் தகவல் தந்துதவிய இரண்டாவது மகன் மயில்வாகனம் (76). பெருந்தோட்டத்துறையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளார். இவருக்கு ஒரு மகன்.



பிள்ளைகளின் நடுவே 'இரும்புச் சீமாட்டி'

இவர்களைத் தவிர வள்ளியம்மைப் பிள்ளைக்கு தெய்வேந்திரகுமாரசாமி சிவகாமிப்பிள்ளை (வயது 74) (இவருக்கு ஏழு பிள்ளைகள்), பாலசுப்பிரமணியம் ஞானசவுந்திரி (வயது 70) (இவருக்கு 3 பிள்ளைகள்) ஆகிய இரண்டு மகள்மார்கள் உள்ளனர்.

15 பேரப்பிள்ளைகள். 38 பூட்டப்பிள்ளைகள் என்ற பெரும் 'படைப்பலத்துடன்' இருக்கும இந்த மூதாட்டியின் 2 பேரன்களும், 6 பூட்டன்களும் மட்டுமே இங்குள்ளனர்.

ஏனையோர் புலம் பெயர்ந்து கனடாவில் வசித்து வருகின்றனர். வள்ளியம்மைப்பிள்ளை மாடுவளர்ப்பு, தோட்டச் செய்கை போன்ற சுய தொழிலில் அக்காலத்தில் சுறுசுறுப்பாக ஈடுபட்டவர் என்றும் புளியமரங்களை வீட்டில் வளர்த்து புளி சேகரித்து விற்றும் தம்மை வளர்த்தார் என்றும் அவரின் 76 வயதான மகன் என்னிடம் நினைவு கூர்ந்தார்.

"அம்மா ஏனையோர் மனம் புண்பட யாரோடும் நடக்க மாட்டார். இதை எனது வாழ்வில் மறக்க முடியாது. உதவி என்று கேட்டு யாரேனும் அக்காலத்தில் அவரை அணுகினால் இல்லை என்று கூறாது வழங்கும் பெருமாட்டி.

தனது மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காகச் சொந்தக் காணியை கோப்பாய் நாவலர் வித்தியாலத்திற்கு கொடுத்தது மட்டுமன்றி தனது கணவரோடு முன்னின்று கட்டடங்களையும் தமது பணத்தில் கட்டிக் கொடுத்த பெருமையும் எனது தாய்க்குண்டு" என்று தனது தாயைப் பற்றிப் பெருமிதம் பொங்கக் கூறினார் அந்த வயதானவர்.

எமக்கு இப்போதே நோய்கள் வந்து கதவைத் தட்டுகின்றபோது இந்த மூதாட்டியின் ஆயுட்கால நீடிப்பின் இரகசியம் என்ன, நடக்க முடியாத நிலையில் இருந்தும் கண்பார்வை நன்றாக இருப்பதை நான் அவரிடம் அவதானித்தேன்.

இது குறித்து அவரிடம் கேட்கப் போய் முன்னைப் போன்று நான் ஏதோ கேட்க அவர் ஏதோ சொல்ல என்ற இக்கட்டு நிலையை தவிர்க்க எண்ணி அவரின் மகனிடமே இது பற்றிக் கேட்டேன்.

பொதுவாக எமக்கு ஆயுள்கெட்டி என்று அவர் கூறிச் சிரித்தபோது அம் மூதாட்டிக்கும் நாம் பேசியது கேட்டுவிட்டது போலும்...

**சந்திப்பு, படம்:**
**பொ.இராஜேஸ்வரன்**
**வலி.கிழக்குச் செய்தியாளர்**

தம்பி எனக்கு 35 வயது தான் என்று கூறி பொக்கைவாயால் சிரித்த போது இந்த வயதிலும் அவரது நகைச்சுவை உணர்வைப் பார்த்து அதிர்ந்து போனேன். எத்தனையோ இளசுகள் - குருத்தோலைகள் இன்று நடைப்பிணங்களாக - இன்றைக்கோ நாளைக்கோ என்ற மாதிரி உலாவிக்கொண்டிருக்க இத்தனை வயதிலும் இந்த முதுமை - இந்தக் காவோலை சிரித்த முகத்துடன் வாழ்ந்துகொண்டிருக்கிறது.

மாமிச உணவு தவிர்த்து சைவ உணவு, பழம், காய்கறிக்குத்தான் உணவில் முதலிடம். இதுவே அம்மாவின் சிறுபராயம் முதலான ஆகாரம் என்று எம்மிடம் அடிக்கடி கூறினார் மயில்வாகனம்.

சிறிது நேரம் அவர்களுடன் அளவலாவி விட்டு விடைபெற்று வெளியே வந்தபோது முதியவர்களின் வீட்டை விட்டு வருவது போன்ற உணர்வு ஏதும் எழவில்லை. ஏதோ உறவினர்களான இளைஞர்களோடு அளவளாவி விட்டு வந்த உணர்வே எனக்கு ஏற்பட்டது.

---

## சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள்

வலி.கிழக்கு,ஒக்.3

வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச முதியோர் வாரம், சிறுவர் தின விழா என்பன எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் கோப்பாய் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட முதியோர் தினக் கட்டுரை, கவிதை ஆகிய போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் முதியோரைக் கௌரவிக்கும் நிகழ்வுகளும் இடம்பெறும்.

கலை நிகழ்வுகள், கவிதை, பேச்சு என்பனவும் இந்த நிகழ்வில் இடம்பெறவுள்ளன.

(4-180-72)

☆ ☆ ☆

வலிகாமம்தெற்கு,ஒக்.3

சர்வதேச சிறியோர் - முதியோர் தினவிழா வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தினால் நாளை திங்கட்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் தலைமையில் பிற்பகல் இரண்டு மணிக்கு விழா ஆரம்பமாகும்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலக மேலதிக அரச அதிபர் அ.சிவசுவாமி இவ்விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் கலந்துகொள்வார்.

சிறியோர், முதியோர் தினத்தை முன்னிட்டு பிரதேச செயலகம், வலிகாமம் கல்வித் திணைக்களம் மூலம் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்திய கட்டுரை, கவிதை போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசுகள் இதன் போது வழங்கப்படவுள்ளன.

வலிகாமம் தெற்குப் பிரதேசத்தில் உள்ள ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவில் இருந்தும் ஒருவர் வீதம் தெரிவு செய்யப்பட்டு முப்பது முதியவர்கள் இவ்விழாவில் கௌரவிக்கப் படுவார்கள்.

பாரம்பரியக் கலைகளான கிராமிய நடனம், இசை நிகழ்வுகள், நாடகம் என்பனவும் இடம்பெறும்.

(4-152)

☆ ☆ ☆

கொடிகாமம்,ஒக்.3

தென்மராட்சிப் பிரதேச செயலகம் நடத்தும சர்வதேச சிறுவர் தின, முதியோர் வார விழா நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணிக்கு சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபை பாலர் பாடசாலை மண்டபத்தில் தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக சாவகச்சேரி சேமிப்பு வங்கி முகாமையாளர் க.இராசதுரையும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் க.முருகதாசனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நாட்டுக்கூத்து, "வாழவிடுங்கள்" நாடகம் போன்ற கலை நிகழ்வுகளும் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

(4-74)

☆ ☆ ☆

மாதகல்,ஒக்.3

சர்வதேச முதியோர் தினத்தைத் முன்னிட்டு இளவாலை மாரீசன் கூடல் றோ.க.த.க. பாடசாலையும் புனித கயித்தார் முன்பள்ளியும் இணைந்து முதியோரை கௌரவிக்கும் நிகழ்வொன்றை கடந்த 30 ஆம் திகதி நடத்தின.

(4-95)

---

## உயர்தர மாணவர் கணிப்பீடு குறித்த கலந்துரையாடல்

தென்மராட்சி,ஒக்.3

ஜி.சீ.ஈ. உயர்தரம் தொடர்பான பாடசாலை மட்டக் கணிப்பீடு பற்றிக் கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கான கலந்துரையாடல் ஒன்று இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ளது.

கொழும்பு பரீட்சைத் திணைக்கள கேட்போர் கூடத்தில் ஒக்ரோபர் 8 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு இக் கலந்துரையாடல் இடம்பெறும்.

வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கல்வி அபிவிருத்திக்கு பொறுப்பான கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை மட்டக் கணிப்பீடு வேலைத் திட்டத்திற்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோரை இக் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு பரீட்சை ஆணையாளர் டபிள்யூ.ஏ.எம்.விஜயஸ்ரீ அறிவித்துள்ளார்.

(4-117)

---

## இஸ்லாம் மதத்தைத் தழுவிய...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடல்கள் தந்தை செல்வாவின் பெருமையை உணர்த்துவதோடு, ஈழத்தமிழருக்கும் இஸ்லாமியத் தமிழருக்கும் இடையே நிலவும் இதயங் கனிந்த உறவை இனிதே எடுத்தியம்புகின்றது.

தந்தை செல்வா இஸ்லாமியத் தமிழர்களை என்றும் ஏற்கும் இனிய உடன்பிறப்புக்களாகவே கொண்டார். தந்தை செல்வாவின் காலம் தொடங்கி இற்றைவரை மட்டக்களப்பு மண்ணோடு ஒட்டிய வரலாறு எம் உறவாகும். இஸலாமியத் தமிழ்ப்பெண்கள் குரவை ஊதி எம்மை வரவேற்ற காட்சியை நாம் இன்றும் மறக்க முடியாது. அத்தோடு இஸ்லாமிய சகோதரத்துவத்தை வலியுறுத்துகின்ற முறையில் எம் இஸ்லாமிய உடன்பிறப்புக்கள் தம் சமய நிகழ்ச்சிகளில் எம்மை அழைத்து ஒரே தட்டில் உணவருந்த செய்த நிகழ்வை நாம் மறக்க நினைத்தாலும் மறக்க முடியாது. தந்தை செலவாவும் நாமும் இத்தகைய அரிய நிகழ்ச்சியில் கலந்துகொண்டமை எம் நெஞ்சில் ஆழப்பதிந்த நிகழ்ச்சிகளாக எம் நினைவலைகளில் நடமாடுகின்றது.

இவ்விதம் நாம் ஒட்டி உறவுகொண்ட போதும், தமிழரசுக் கட்சியில் நின்று வெற்றி பெற்ற பல இஸ்லாமிய தமிழ்த் தலைவர்கள் அடிக்கடி தடம்புரண்டு கட்சி மாறியது வருந்தத்தக்க நிகழ்ச்சியாகும். ஒருமுறை கொழும்பு நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் "எமது மாமனார் காரியப்பர் தொப்பி பிரட்டினாலும் கட்சி மாறினாலும் நான் கொள்கையோடு தான் வாழ்வேன்" என்று அவருடைய மருமகன் முஸ்தபா முழங்கிய முழக்கம் இன்றும் எம் செவிகளில் ஒலிக்கின்றது. பின் அவர் எத்தனை கட்சிகளில் மாறினார் என்பதைக் கணக்கிடமுடியாது. இவர் போன்றே மூதூர் முகமது அலி, மூதூர் மஜீத், பொத்துவில் மஜீத், அகமட் மஷுர் மௌலானா போன்ற தலைவர்கள் அரசியலில் தடம்புரண்ட வரலாற்றினை நாம் எண்ணிப்பார்க்கின்ற போது அவர்கள் மீது எமக்கு ஆத்திரம் ஏற்படவில்லை. மாறாக தம் இனத்தில் நிலைத்த தன்மை கருதி கொள்கை உறுதியோடு இவர்கள் ஏன் வாழப்பழகிக்கொள்ளவில்லை என்பது எமக்கு ஒரு சிக்கல் நிறைந்த, ஏக்கம் நிறைந்த கேள்வியாகவே விளங்குகின்றது.

(வளரும்)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

ஜேர்மன் செப்பேட் அல்சேசன் நாய்கள் (ஆண், பெண்) விற்பனைக்குண்டு. தொடர்பு: Mr.S.பத்மன், ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கு. T.P.: 077 6309723. (37125)

பாவித்த லிஸ்ரர் என்ஜின், லிஸ்ரர் டைனமோ (இங்கிலிஸ் ஏறிஜ்சிலை) பந்தல், கதிரை, மேசை, கொமர் என்ஜின் என்பன விற்பனைக் குண்டு. தொடர்பு: குலசிங்கம் செல்வராணி, ஆலடிச் சந்தி, மானிப்பாய். (37078)

உரும்பிராய் தெற்கில், சந்திக்கு மிக அருகில ஒன்பது (09) பரப்புக் காணியும் வீடும் விறபனைக்கு உண்டு. தொடர்பு: T.P.072 3223 731 (மாலை 7 மணிக்குப் பின்பு). (36992)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை, கொக்குவில் (குளப்பிட்டி) வீதிச் சந்திக்கு அருகில் 18½ பரப்புக்காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.P.:0112-726918 (கொழும்பு).(சி-37919)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

9 மாத பெண், 3 மாத ஆண் கறுப்பு நிற பொமனேரியன் நாய்கள் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 64A, புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம். (37092)

டோபமன் பிஞ்சர் இரண்டு மாத நாய்க்குட்டி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மல்லிகாபதி, ஆஸ்பத்திரி முன்பாக மானிப்பாய். (37078)

## வாடகைக்கு

யாழ்.வைத்தீஸ்வராச் சந்தியில் மாணவர்களுக்கு (ஆண்கள்) அறைகள் வாடகைக்குண்டு. அத்துடன் K.K.S. வீதியில் கடையொன்றும் வாடகைக்குண்டு. தொடர்புகளுக்கு: 77, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (37113)

## ஒத்துமாறல்

கொழும்பு மத்தி பாடசாலையில் கற்பிக்கும் விஞ்ஞான பயிற்றப்பட்ட ஆசிரியர் யாழ் மாவட்டத்திற்கு ஒத்துமாற விரும்புகின்றார். கொழும்பு மாவட்டத்திற்த ஒத்துமாற விரும்புவோர் தொடர்புகொள்ளவும். T.P: 0777 413990. (37001)

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர் கோழிகள் விற்பனைக்குண்டு. 1Kg 140/= சுத்தம்செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: பரஞ்சன், கலைவாணி லேன், பொற்பதி றோட், கொக்குவில் கிழக்கு. (36964)

**Prima Broiler** மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம் (**Electronic** நிறுவை). தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (36933)

நிறைகூடிய புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. சுத்தஞ்செய்து மொத்தக் கொள்வனவு 230. சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: ஒக்ஷன், K.K.S. றோட், தாவடிச் சந்தி. T.P.:077 6161706. (37100)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் தினமும் விற்பனைக்குண்டு. கல்பேட்ஸ், நாட்டுக் கோழிகள் 1Kg 140/= தொடர்பு: S.சிவகுமாரன், கல்வியங்காட்டுச் சந்தி, பெற்றோல்செட் அருகில் (புலவனார் வீதி). (37093)

புறொயிலர் 1kg 150/-, கல்பேட் 1kg 160/- (சுத்தம் செய்தல் இலவசம்) பிறீமா கோழித்தீன் என்பன மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 1) New R.S.K. Farm மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், 2) New R.S.K. Farm மானிப்பாய் வீதி, உடுவில். (36808)

சுத்தமான புறொயிலர், கல்பேட்ஸ் என்பன தேவையான நிறைகளில் சனி, ஞாயிறு, திங்கள், புதன் கிழமைகளில் பெற்றுக்கொள்ளலாம். சுத்தஞ்செய்யப்பட்டது ஒரு Kg 240/. தொடர்புகளுக்கு: குமரன் பாம், 227, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (37090)

புறொயிலர் இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குணடு. சுத்தம் செய்யப்பட்டது. 1kg-230/= மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு 200/= தொடர்பு: விஜயகுமார், குளப்பிட்டி றோட், ஆனைக்கோட்டை. (37120)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. 1kg-140/= சுத்தஞ்செய்யப்பட்டது. 1kg-230/= தினமும் சுத்தஞ்செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி. (37118)

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1973இல் பிறந்த, விசாக நட்சத்திரம், கனடாவில் நிரந்தர வதிவுரிமையுடைய **Electronic Designer** ஆகக் கடமையாற்றும் மணமகனுக்குப் படித்த, அழகிய மணமகள் தேவை. தொலைபேசி இலக்கம், குறிப்பு ஆகியவற்றை அனுப்பவும். மே/பா. விள.இல.: 2394. (36960)

## மணமகன் தேவை

யாழ். வடமராட்சி இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1962ஆம் ஆண்டு பிறந்த, சதய நட்சத்திரம், 3ஆம் பாதம், கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் மணப்பெண்ணுக்கு உத்தியோகம், சுயதொழில் மணமகன தேவை. ஜாதகம் பொருந்துமிடத்து சீதனம் பற்றித் தீர்மானித்துக்கொள்ளலாம். விளம்பர இலக்கம்: 2395, C/o. உதயன், யாழ்ப்பாணம். (36969)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1979ஆம் ஆண்டு, பரணி நட்சத்திரம், 4இல் செவ்வாய், 27 கிரகபாவமுடைய தற்சமயம் பிரான்ஸில் இருக்கும் அழகிய மணமகளுக்கு மேற்கு நாடுகளில் P.R. உடைய மணமகன் தேவை. தொடர்பு: 222 - 6698, 4590650. (37104)

## தேவை

அளவெட்டி, மல்லாகம் ஆகிய பகுதிகளில் பிரதான வீதிக்கு அருகில் வாகனத் தரிப்பு வசதிகளுடன் தனி வீடு வாடகைக்கு அல்லது குத்தகைக்குத் தேவை. முழுவிவரத்துடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: விள.இல. 2398, மே/பா உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி-37962)

## திருமண சேவை

தவிர்க்கமுடியாத காரணங்களால் சிறிது காலம் தடைப்பட்டிருந்த இச்சேவை மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. உள்நாடு, வெளிநாடுகளில் சகல தரத்திலுமான குறிப்புகள் உண்டு. தொடர்பு: கு.திருவிளங்கம், வாசிகசாலை ஒழுங்கை, 3ஆம் கட்டையடி, கல்வியங்காடு. T.P.: 077-6675031. (36815)

## தவறிவிட்டது

22.09.2004 புதன்கிழமை பருத்தித்துறை, நெல்லியடி பிரதேசத்தில் WPHS 8128 எனும் மோட்டார் வாகன இலக்கமுடைய தகடு தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0777 593774, 077 6080277 இல் தொடர்புகொள்ளவும்.(37089)

## கோழிக்குஞ்சு விநியோகம்

மிகவும் தரமான, இரண்டு முறை தடுப்பு மருந்து வழங்கப்பட்ட **Prima Original Broiler** குஞ்சுகள் 35/-, பேட்டுக்குஞ்சு 50/-. 11.10.2004 திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். பருத்தித்துறை, நெல்லியடிக் கிளையிலும், சூட்டி பாம் - வட்டுக்கோட்டை, R.S.K. பாம் - உடுவில், சுன்னாகம் ஐங்கரன்- திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (37062)

## சிறுகுறிஞ்சாப் பவுடர்

சிறுகுறிஞ்சா இலையிலிருந்து தயாரிக்கப்பட்ட பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரிழிவு கர்ப்பப்பை நோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த மூலிகையாகும். இதில் விற்றமின் A.C உடன் கல்சியம். இரும்பு போன்ற தாதுப்பொருள்களும் அடங்கும். தொடர்பு:

**BIO TEC INTERNATIONAL**

இல.131/2, பலாலி வீதி, திருநெல்வேலி.T.P.: 021-4590907.

(37114)

## இணையத்தளம்

பாடசாலைகள், சங்கங்கள், நிறுவனங்கள், விற்பனை மையங்களுக்கான இணையத்தளம்

Domain Registration, Hosting, Designing, Maintenance and e-mails

ஒரு வருடத்திற்கான மொத்தக் கட்டணம் ரூபா 8000/= மட்டும்.

**SAAMSTECH**

841, Hospital Road, Jaffna.

Phone: 0773 068968.

(சி-37842)

## SAAMSTECH இன் ஆங்கில, சிங்கள நேரடி வகுப்பு

காலம்: 2 மாதங்கள்


கட்டணம்: ஆங்கிலம் ரூபா 6000, சிங்களம் ரூ.4000/= முழுமையாகக் கதைக்கலாம்.

**SAAMSTECH**

841, Hospital Rd., Jaffna

Phone: 0773068968

(சி-37511)




சுடர் ஒளி
வார மலர்

- ஒரு புறம் சமாதானம் என்று பம்மாத்து மறுபுறம் யுத்தத்துக்கு ஆயத்தம்
- மயோன் Vs ஐ.தே.க.
- சமாதான முன்னெடுப்புகளும் சவால்களும்
- வெள்ளைப் பூரானுக்கே தீர்வு இல்லை, சேது ச[illegible]த்திரத் திட்டத்தை தடுக்கவா முடியும்?
- ஜெனீவாவில் அரசியல் ஆலோசனை அடுத்த கட்ட நகர்வுக்கு புலிகள் தயார்
- பி.ஜே.பிக்குள் பதவிப் போட்டி
- மிஸ்டர் வேதாளம் புதிய அம்சம் இவ்வாரம் முதல் ஆரம்பம்

மற்றும் வழமையான ஆக்கங்களுடன்

03-09 ஒக்ரோபர் 2004

(C/37969) UTHAYAN Graphics

# சர்வதேச அரங்கில்— புலிகளின் சாணக்கியம்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான அரசு பதவியேற்று ஆறுமாதங்கள் கடக்கும் நிலையிலும் பேச்சுக்களை ஆரம்பிக்க உருப்படியான நடவடிக்கை எதையும் மேற்கொள்ளவில்லை.

விடுதலைப் புலிகள் பேச்சுக்கு முன்வரவில்லை என்று திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டு, பேச்சை ஆரம்பிக்க முடியாத உட்கட்சிப்பூசலுக்குள் சிக்கித் தவிக்கின்றது அரசு.

அனுசரணைப் பணியை மேற்கொள்ளும்படி நோர்வேயை அழைத்தது மட்டும்தான் சமாதான முயற்சிகளில் அரசு செய்த கைங்கரியம்.

இந்நிலையில், பேச்சுக்களை ஆரம்பிக்கத் தயார் என அறிவித்த விடுதலைப் புலிகள், தமது நிலைப்பாட்டையும் வெளியிட்டிருந்தனர்.

கடந்த ஐ.தே.க. அரசுடன் நடத்திய பேச்சுக்களை விட்ட இடத்தில் இருந்து ஆரம்பிக்கத் தயாராக இருக்கின்றோம் என்று விடுதலைப் புலிகள் அறிவித்திருந்தனர்.

நோர்வே அனுசரணையாளர்கள் கடந்த மாதம் 18ஆம் திகதி இலங்கை வந்து அரசுடனும் விடுதலைப் புலிகளுடனும் பேச்சுநடத்தினர்.

அன்றுகாலை கிளிநொச்சியில் நோர்வே அனுசரணையாளர் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்தார். பேச்சை ஆரம்பிக்கத் தயாராக இருக்கின்றோம் என்ற தகவலை அவர் மிகத் தெளிவாக நோர்வே அனுசரணையாளருக்குத் தெரிவித்தார்.

அந்தச் செய்தியை எடுத்துச்சென்று அன்று மாலையே ஜனாதிபதிக்கு ஒப்புவித்தார் நோர்வே அனுசரணையாளர். ஆனால், விடுதலைப் புலிகள் பேச்சுக்கு வரப் பின்னடிக்கிறார்கள். அதுதான் பேச்சை ஆரம்பிக்கத் தடையாக இருக்கின்றது என்ற தோரணையில் ஜனாதிபதி செயலகம் அடுத்தநாள் அறிக்கை ஒன்றை விடுத்தது.

இந்நிலையில், காலத்தை இழுத்தடிக்காமல் பேச்சை ஆரம்பிப்பது தொடர்பாகத் தமது நிலைப்பாட்டை இறுதிசெய்வது குறித்து விடுதலைப் புலிகளின் உயர்மட்ட அரசியல்குழு கடந்த இருதினங்களாக ஜெனீவாவில் கூடி ஆராய்ந்துள்ளது.

சர்வதேச விவகாரங்களுக்கெல்லாம் தீர்வு காணும் ஐ.நா.சபையின் அலுவலகங்கள், நடுநிலைமைக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு, சர்வதேச மன்னிப்புச்சபை ஆகியவற்றின் தலைமையகங்கள் அமைந்துள்ள சுவிஸ் நாட்டின் தலைநகர் ஜெனீவாவில் விடுதலைப் புலிகளின் உயர்மட்ட அரசியல்குழு கூடி தமது அடுத்தகட்ட நகர்வு குறித்து ஆராய்ந்துள்ளது.

தாயகத்தில் இருந்து விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் பரா, சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் போன்றோர் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

லண்டனில் தங்கியுள்ள விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் தமது பாரியார் அடேல் பாலசிங்கத்துடன் சென்று இந்த மாநாட்டில் பங்கேற்றார்.

வெளிநாட்டில் பயணம் மேற்கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் மூத்த பிரமுகர் வே.பாலகுமாரனும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டார்.

அத்துடன், விடுதலைப் புலிகளின் சர்வதேச சட்ட ஆலோசகர் உருத்திரகுமாரன், சட்ட நிபுணரான ஸ்ரீலங்காவின் முன்னாள் சட்டமா அதிபர் சிவாபசுபதி, சட்டநிபுணர் டொமினிக், மலேஷியா சட்டநிபுணர் பரமசாமி, பொருளியல் நிபுணர் ஜோய் மகேஸ்வரன் ஆகியோரும் இந்த மாநாட்டில் பங்கேற்றனர்.



ஜெனீவா நகரில் புலிகளின் உயர்மட்ட அரசியல்குழுக் கூட்டத்தில்...

விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் விளக்கவுரையுடன் மாநாடு ஆரம்பமானது.

பேச்சுக்கள் தடைப்பட்டுள்ள காரணங்கள், நோர்வேயின் அவநம்பிக்கை, ஸ்ரீலங்கா அரசின் போக்கு ஆகியன தொடர்பாக அவர் விளக்கமளித்தார்.

அதன்பின் அடுத்தகட்டத் திட்டங்கள், செயற்பாடுகள் தொடர்பாகப் பலரும் கருத்துக்களைப பரிமாறிக்கொண்டனர்.

பேச்சை ஆரம்பிக்கும் விடயத்தில் இனி அரசுடன் கடும்போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் சிலர் கருத்துக்களை வெளியிட்டனர்.

இலங்கை அரசு ஸ்திரமற்ற நிலையில், தமது பங்காளிக் கட்சிகளின் கோரிக்கைகளுக்குப் பணிந்து செயற்படுகின்றது. இந்த நிலையில், எப்படி அரசு பேச்சை ஆரம்பிக்கும் என நம்பமுடியும் என்று புலிகளின் அரசியல்குழு கருதுகின்றது.

பேச்சுக்களை ஆரம்பிப்பதில் ஸ்ரீலங்கா அரசின் இழுத்தடிப்புக் குறித்தும், தமது நிலைப்பாடு குறித்தும் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துரைப்பது என்று அவர்கள் முடிவு செய்திருக்கின்றனர்.

கடந்தகாலங்களில் போர் முனைகளில் புதிய புதிய இராணுவ வியூகங்களை அமைத்துச் சிங்களப் படைகளைத் துவளச் செய்து வந்த விடுதலைப் புலிகள், இப்போது அரசியலிலும் புதிய வியூகங்களை அமைத்து தமது நிலைப்பாட்டைச் சர்வதேச அரங்கில் தெளிவாக அம்பலப்படுத்த முயன்றுள்ளனர்; அரசுக்கும் உறைப்பாக உணர்த்தத் தீர்மானித்துள்ளனர்.

இந்த மாநாட்டின்மூலம் விடுதலைப் புலிகள் வகுக்கப்போகும் வியூகம் இலங்கை அரசுக்குப் பெரும் நெருக்கடிகளைக் கொடுக்கும் என்று கருதப்படுகின்றது.

சர்வதேச மட்டத்தில் இலங்கை அரசுக்குப் பெரும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படும் சூழல உருவாவதுடன், பொருளாதார உதவிகள் அறவே கிடைக்காத நிலைகூட ஏற்படலாம்.

விடுதலைப் புலிகளுக்கு யுத்தம் செய்யத்தான் தெரியும். பயங்கரவாதச் செயல்களில்தான் ஈடுபடுகிறார்கள் என தென்னிலங்கை அரசியல்வாதிகள் சர்வதேச சமூகத்துக்குக் கூறிவந்த செய்திகள் எல்லாம் பொய்யானவை, தமிழர்களுக்கும் அரசியல் சாணக்கியம் இருக்கின்றது என்பதை விடுதலைப் புலிகள் இந்த மாநாடு மூலம் உணர்த்தியுள்ளனர்.

இந்த மாநாடு மூலம் சர்வதேசத்துக்கு விடுதலைப் புலிகள் கொடுக்கப்போகும் செய்தி அரசின் பொய்ப்பிரசாரங்களை முறியடிக்கும், நாட்டில் சமாதானச் சூழல் நிலைப்பதற்கு வழிசமைக்கும் என்று விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர் ஒருவர் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைவு தொடர்பாக இந்த மாநாட்டில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. மாநாட்டில் கலந்துகொண்ட சட்ட நிபுணர்கள், இந்த வரைவில் மாற்றம் செய்ய வேண்டிய தேவையில்லை என்று கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்த வரைவின் அடிப்படையில் பேச்சை ஆரம்பித்தால், பேச்சில் வரைவின் பாதகங்கள், சாதகங்கள் குறித்து விவாதிக்கலாம் என்று உயர்மட்ட அரசியல் குழுத்தலைவர்கள் கூறியுள்ளனர்.

இந்த வரைவின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும். இதுதான் இன்றைய தேவை. இதைவிட்டுக் காலத்தை இழுத்தடித்துக்கொண்டு போனால், பேச்சுக்கள் நெருக்கடி நிலைக்குள் சிக்குவதைத் தவிர்க்க முடியாததாகிவிடும். இதுதான் இந்த மாநாட்டின் செய்தி.

### மனித உரிமைகள் மாநாடு

வடக்கு - கிழக்கில் மனித உரிமைகள் தொடர்பாக ஆராயும் மாநாடு இன்று ஜெனீவாவில் ஆரம்பமாகின்றது. இந்த மாநாடு நாளை வரை நடைபெறவிருக்கின்றது.

வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் நிலையத்தின் செயற்பாடுகள், யாப்பு முறைகள் தொடர்பாக இந்த மாநாட்டில் விரிவாக ஆராயப்படவிருக்கின்றது.

இந்த மாநாட்டில் ஜெனீவாவில் தங்கியுள்ள உயர்மட்ட அரசியல் குழுவினரும், வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் நிலையப் பணிப்பாளர் குழுவும் பங்குபற்றுகின்றது.

வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் நிலையத்தின் பணிப்பாளரான அருட்திரு. கருணரத்தினம், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், ஜி.ஜி.கஜேந்திரகுமார், வைத்திய கலாநிதி எஸ்.சிவபாலன், சட்டத்தரணி எஸ்.சிவபாலன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்துகொள்கின்றனர்.

மனித உரிமைகள் ஆர்வலர்கள் சிலரும் இதில் பற்றுபற்றுகிறார்கள்.

### ஐரோப்பிய நாடுகளுக்கு உயர்மட்டக்குழு

விடுதலைப் புலிகளின் உயர்மட்ட அரசியல் குழு ஜெனீவா மாநாடுகளை முடித்துக்கொண்டு நோர்வே, பெல்ஜியம், சுவீடன், ஜேர்மனி, டென்மார்க், அயர்லாந்து ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யும்.

அந்த நாடுகளின் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தும் இக்குழுவினர், அந்த நாட்டில் வாழும் புலம்பெயர்ந்த தமிழ்மக்களுடனும் கலந்துரையாடல்களை நடத்துவர். ★

குகா

---

# போதைப் பழக்கங்களைக் கைவிட்டு ஒழுக்கமாய் வாழ உறுதிகொள்வோம்

## இன்று நல்லொழுக்கதினம்

நோயற்ற வாழ்வே உலகின் சிறந்த சுகம் என்பது புத்தபகவானின் முது மொழியாகும். இந்த சுகத்தை அனுபவிக்க வேண்டுமாயின் மக்களாகிய நாங்கள் சில பழக்கவழக்கங்களைக் கைவிட்டு நாட்டில் நற்பிரசையாக வாழவேண்டும்.

அந்தவகையில், நாம் ஒவ்வொருவரும் போதை தரும் போதைவஸ்துக்களையும் புகைத்தலையும் கைவிட்டு நல்லொழுக்கமாக வாழப் பழகிக்கொள்ளவேண்டும். நல்லொழுக்கம் என்பது கடையில் வாங்கும் பொருள் அல்ல, சிறுவர் தொடக்கம் முதியோர்வரை கடைப்பிடிக்க வேண்டியது.

ஒரு மனிதன் நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்து வருவானாயின் கண்டிப்பாக தீய பழக்கங்களான போதைதரும் வஸ்துக்களையும், புகைத்தலையும் நாடமாட்டான். நமது நாடு ஒரு சிறிய நாடு. ஆனால், அது உலகிலே போதைப்பொருள் பாவனையில் இரண்டாம் இடத்தை வகிக்கின்றது. இதே மாதிரி சிறுவர் துஸ்பிரயோகத்தில் உலகில் மூன்றாம் இடத்தை வகிக்கின்றது. இலங்கையில் சிறுவர் பாலியல் துஸ்பிரயோகம் மிக மோசமான நிலையில் இடம்பெற்றுவருகின்றது. 20 சதவீதமான சிறுவர்கள் இவ்வாறான துஷ்பிரயோகங்களில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

மேலும் இலங்கையில் 30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் வரையான சிறுவர்கள் பாலியல் ரீதியான துஸ்பிரயோகங்களில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். எனவே, தாய், தந்தையர்கள் சிறுவர்களின் விடயத்தில் அக்கறை எடுத்து நல்லொழுக்கத்தை ஊட்டி வளர்க்கவேண்டும்.

நமது நாட்டில் தற்பொழுது நல்லொழுக்கம் என்பதே நரிக்கொம்பாகிவிட்டது. புதினப் பத்திரிகைகளைப் பார்த்தால் வயதுக்கட்டுப்பாடு இன்றி, முறை தலையின்றி கற்பழித்தல், சமூகச்சீரழிவுகள், சண்டைகள், தந்தைக்கு பிள்ளைகள் கட்டுப்படாமல் நடப்பது, குருவுக்கு அடிபணியாது நடப்பது, கணவன் மனைவியை அடிப்பது இதனால் மனைவி தூக்கில் தொங்குவது போன்ற நிகழ்வுகள் எம்மத்தியில் சர்வசாதாரணமாக நடைபெறுவதைக் கண்ணூடாகப் பார்க்கமுடிகின்றது. இதற்கெல்லாம் காரணம் நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிக்காததே ஆகும்.

இன்று நாம் போதைப்பொருள் பாவனை பற்றி எடுத்துக்கொண்டால், இலங்கையைப் பொறுத்தமட்டில் ஒரு லட்சம் பேர் போதைவஸ்துக்கள் பாவிக்கின்றார்கள். நாளொன்றுக்கு ஒருவர் 500 ரூபா போதைவஸ்துக்குச் செலவழிக்கின்றார். இதனால் தினசரி நாளொன்றுக்கு 5 கோடி ரூபா செலவு ஏற்படுகின்றது. மேலும் அயல் நாடுகளிடம் இருந்து 50 லட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருள் தினமும இலங்கைக்குக் கடத்தப்படுகின்றது.

போதைப்பொருளில் இரண்டுவகை உண்டு. ஒன்று சட்டத்துக்குட்பட்டது, இரண்டாவது சட்டத்துக்கு அப்பாற்பட்டது. சட்டத்திற்குட்பட்டது: கள்ளு, சாரயம், பிஸ்கி, பிரண்டி போன்றவை. இரண்டாவது சட்டத்திற்கு அப்பாற்பட்டவை: கசிப்பு, கஞ்சா, ஹெரோயின், அபின்.

குடிபோதைக்கு அடிமையாகின்றவர்கள் பெரும்பாலும் 25வயதிற்கும் 45வயதிற்கும் இடைப்பட்ட வயதினர்களே. இவ் எல்லை [illegible]தைத் தாண்டினால் குடிபோதைக்கு அடிமையாகமாட்டார்கள். இலங்கையில் குடிநோயால் ஆண்களில் 25வீதம் தொடக்கம் 45சதவீதம் வரை குடியென்னும் நோயால் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்றார்கள். பெண்களில் 5சதவீதம் தொடக்கம் 8 சதவீதம் வரை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்றார்கள்.

விலை மாதர்களில் 80 சதவீதத்தினர் குடிக்கின்றார்கள். ஆகவே, இறைவன் வாழும் ஆலயமாகிய இந்த மனித உடல் இன்று குடியால் சல்லடை போடப்படுகின்றது. மது என்பது புலனைப் பறிக்கும், நலனைப்பறிக்கும், நோயை வளக்கும், ஈற்றில் உயிரைப் பறிக்கும்.

மனிதன் அருந்தும் மதுவில் 10சதவீதம் தாம் சுவாசிப்பதன் மூலமும், சிறுநீர் மூலமும் வியர்வை மூலமும் வெளியேறுகின்றது. மிகுதி 90சதவீதம் இருமணி நேரத்திற்குள் இரத்தத்துடன் சங்கமமாகின்றது. மேலும் கருவுற்ற பெண்கள் மூன்றுமாத இடைவெளியில் மது அருந்தினால் உடல் ஊனமுற்ற பிள்ளைகள் பிறக்கும். எனவே, போதைவஸ்துக்களை நாடாமல் நல்லொழுக்கமாக வாழவேண்டும்.

அடுத்து புகைத்தல், பலரும் தெரிந்துசெய்யும் ஒருகெட்டபழக்கம். நாளுக்குநாள் அதன் விபரீதம் பற்றி அறிவுறுத்தப்பட்டும் விடுபடமுடியாத கெட்டபழக்கம் தான் புகைத்தல். புகைத்தலை விட்டால் செல்வம், சிறப்பு, சுகம், சுற்றத்தாரிடம் இருந்து மதிப்பு என்பன உண்டாகும் என்று பெரியோர் கூறுவார்கள்.

புகைப்பவர்கள் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நான் விரும்பும் புகை என்னையும் என் குடும்பத்தினரையும் அயலவரையும் நோயாளராக்குகின்றது.

ஒருவர் புகைக்கும்பொழுது 25 சதவீத புகையை உள்வாங்குகின்றார். மிகுதி 75 சதவீத புகையையும் வெளியே விடுகின்றார். இதனால், 'நிக்கொட்டின்' என்னும் நச்சுத்திரவம் வெளியேறி மற்றவர்களுக்கும் வியாதியைக் கொடுக்கின்றது.

இதனால், புகைப்பவர் வீட்டில் வசிக்கும் மற்றையோருக்கு 30சதவீதம் இருதயவியாதி ஏற்பட வாய்ப்புண்டு.

இலங்கையில் மட்டும் புகைத்தலால் வருடந்தோறும் 22ஆயிரம் மக்கள் இறக்கின்றார்கள்.

**செ.குமாரசிங்கம்**

புகைத்தல் காரணமாக நோய்வாய்ப்பட்டு 50 சதவீதத்தினர் இருதய நோயினாலும் 40 சதவீதத்தினர் புற்றுநோய்களினாலும் மரணிக்கின்றார்கள்.

ஒருவன் ஒரு நாளுக்கு 11சிகரெட்டுக்களைப் புகைப்பதனால் 10 நிமிட ஆயுளைத் தினமும் குறைக்கின்றான். இதனால் 5வருடங்கள் தொடக்கம் 10 வருடங்களுக்கு முன் எம்மைவிட்டுச் சென்றுவிடுவான்.

எனவே, நல்லொழுக்கதினத்தில் இருந்தே புகைத்தலை முற்றுமுழுதாக விட்டு, குடும்பத்துடன் வாழ திடசங்கற்பம் கொள்வோம்.

நல்லொழுக்கம் எனும் நீரைப் பாய்ச்சிக் கல்வியெனும் பயிரை வளர்க்கவேண்டும். இப்படி வளர்த்துவந்தால் ஒவ்வொருவரும் கெட்ட பழக்கங்களை விட்டு நற்பிரஜையாக வாழலாம். இதற்காக நல்லொழுக்கத் தினமான ஒக்ரோபர் 3அன்று மக்களை வேண்டிக்கொள்கிறது வடபிரதேச நல்லொழுக்கச் சம்மேளனம். ★

# சாயி மெடி கெயார் சென்ரர்

**82, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.**

(நீராவியடிப் பிள்ளையார் கோயில் முன்பாக)

❑ பொது வைத்தியம் ❑ குழந்தை வைத்தியம் ❑ பெண்நோயியல்
❑ கர்ப்பிணிச்சிகிச்சை ❑ தோல் வைத்தியம் ❑ சிறு சத்திரசிகிச்சை

ஆஸ்துமா நோயாளிகளுக்கான நெபுலைசர் (Nebuliser) பிடித்தல் என்பன MBBS வைத்தியர்களினால் நடத்தப்படும் விஷேட பரிசோதனைகள் -

★ இரத்தக் குளுக் கோஸ் பரிசோதனை (Blood Glucose Test) ★ சிறுநீர் முழுமை யான பரிசோதனை (UFR), ★ கர்ப்பிணி சிறுநீர்ப் பரிசோதனை
★ சாரதி அனுமதிப் பத்திரத்திற்கான மருத்துவச் சான்றிதழ் வழங்கப்படும். (MC).

நோயாளர்களைப் பார்வையிடும் நேரங்கள்: காலை 6.00 - 8.00 மணி, மாலை 4.00 - 8.00 மணி.

**SAI MEDICARE CENTRE,** 82, Brown Road, Neeraviyady, Jaffna.


## பிரிந்தவரின் பிறந்தநாள் நினைவு

பிறப்பு 03 - 10 - 1933



மறைவு 19 - 04 - 1996

### Dr. ஆறுப்பிள்ளை இராசநாயகம்

ஆண்டுகள் பல அலை அலையாய் மறைந்தாலும் என்றென்றும் எம் அன்பு உள்ளங்களிலிருந்து மறைவதில்லை.

பானாவெட்டி,
சுழிபுரம்.

உங்கள் பிறந்ததினத்தை நினைவுகூரும்:-
(37136)(38-16-17) பாசமிகு குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**முத்துக்குமாரு இலட்சுமி காந்தன் (இராசா)**

கோப்பாய் தெற்கைப் (இருபாலை) பிறப்பிடமாகவும், துன்னாலை கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு இலட்சுமி காந்தன் (இராசா) அவர்கள் 2004.10.01 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சி.முத்துக்குமாரு - காலஞ்சென்ற இரத்தினம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை நடராசா (இளைப்பாறிய வித்தியாதிபதி), மற்றும் மங்கையர்க்கரசியின் அன்பு மருமகனும் மகேஸ்வரி (ஆசிரியை, புலோலி மெ.மி.க.பாடசாலை)யின் பாசமிகு கணவரும், கிருஷ்ண தேவி, அனுஷியா (கொழும்பு), பராசக்தி (கனடா), இராகவன (கனடா), சக்கசாயுதன் (கனடா), முரளதரன் (கனடா), தேவதி (கனடா), கோமதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஆனந்தராஜா (கொழும்பு), தருமராஜா (கனடா), ஞானமலர் (கனடா), சிறீஸ்வரி (கனடா), ஜெயராணி (கனடா), ரஞ்சிதநாதன் (கனடா), சந்திரமோகன் (கனடா) மற்றும் தேவராஜன், தேவராணி, மகேந்திரன், சுந்தரமதி ஆகியோரின் அருமை மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (03.10.2004) ஞாயிற்றுக்கிழமை 'துவாரகை' துன்னாலை கிழக்கில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 3 மணியளவில் (புநே) பிட்டிதூ குடும்ப மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமபடி அறியத்தருகின்றேன்.

"துவாரகை",
துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.

தகவல்:
இ.மகேஸ்வரி
(37139)(38-16-17) (மனைவி).

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்லும்

பிறப்பு 16 - 10 - 1952



இறப்பு 04 - 09 - 2004

### அமரர் அருணாசலம் யோகானந்தா

(B.Sc. (cey) [illegible] Edu. (SriLanka)
(Asst. Director Of Edu[illegible]maradchi - Maths)

திதி: அபரபக்[illegible]

04.09.2004 அன்று சிவ[illegible]கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்[illegible] கலந்து எமது துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபச் செய்தி தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டோருக்கும் குறிப்பாக மாணவர்களுக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மாசாந்திக்காகப் பிரார்த்திக்கும்.

220, கண்டிவீதி,
யாழ்ப்பாணம்.

(37140)(38-16-17) [illegible] குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### இராசையா தியாகலிங்கம்

**(உருத்திரபுரம் கிராமசேவையாளர்)**

புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா தியாகலிங்கம் (உருத்திரபுரம் கிராமசேவையாளர்) 28.09.2004 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை பொன்னம்மாவின் அன்பு மருமகனும் பிறேமாவதியின் (ஆசிரியர், யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை) அன்புக் கணவரும் தசரீதன் (யாழ்.இந்துக் கல்லூரி), தனுஷன் (யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி), தசாத்மன், தர்சிகன் (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.10.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு இல.100, D.10 உருத்திரபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உருத்திரபுரம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல:100,D.10.
உருத்திரபுரம்.


(37129)(39-17-16)

தகவல்:
தி.பிறேமாவதி
(மனைவி).


# அமெரிக்காவில் கல்வியைத் தொடருங்கள்!

## நாம் யாழ்ப்பாணத்தில்

—உங்கள் காலடியில் — இருந்தும் சேவையாற்ற இருக்கின்றோம்.



* 6,00,000 இற்கும் மேற்பட்ட வெளிநாட்டு மாணவர்கள் தற்பொழுது வருடாந்தம் அமெரிக்காவில் தங்களது உயர் கல்வியினைக் கற்றுவருகின்றார்கள். இதில் 30,000 மாணவர்கள் ஐக்கிய இராச்சியம், மற்றும் அவுஸ்திரேலியா நாட்டினைச் சேர்ந்தவர்கள். இதன் மூலமாக அமெரிக்கா உலக பல்கலைக்கழக உயர்-கல்வியில் முதலாமிடத்தில் திகழ்கிறது.

* நீங்கள் பெற்ற ஜீ.சி.ஈ உயர்தரப் பரீட்சை பெறுபேற்றுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள். எனினும் இலங்கைப் பல்கலைக்கழக அனுமதிக்காக சுமார் ஒரு வருடத்திற்கும் கூடுதலாகக் காத்திருக்க வேண்டும்.
* இலங்கையில் பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கான எண்ணிக்கை வரையறுக்கப்பட்டது. இவ்வரையறையானது அதிகமானோரை வெளியில் வைக்கிறது. வெளியில் நிற்பதால் பட்டம் பெற தகுதியற்றவர்கள் என்று முத்திரை குத்துவது தகுதியானதல்ல. இல்லாவிடினும் அனுமதிக்காக நீண்ட காலம் காத்திருக்க வேண்டும். காத்திருப்பும் காலத்தைக் கடத்துகிறது.
* ஏன்/ இவ்வளவு காலம் காத்திருக்க வேண்டும்? அமெரிக்கப்பட்டம் பெற நாம் உதவத்தயார். இந்தப்பட்டம் சர்வதேச அங்கீகாரம் உடையது.
* உங்களின் வசதிக்கு ஏற்ப கற்கையைத் தொடரலாம். இலங்கையில் முதல் இரு வருடங்களும், மீதி இரண்டு வருடங்களை அமெரிக்காவிலும்; அல்லது மூன்று வருடங்கள் நாட்டிலும், மீதி ஒரு வருடத்தை வெளிநாடான அமெரிக்காவிலும்; அல்லது நான்கு வருடங்களையும் இங்கு இருந்தவாறு கற்றுப் பட்டம் பெறலாம்.
* விஷேடமான வியாபாரக் கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் நாம் வழிகாட்டுகிறோம். உங்கள் ஆற்றல்களை இனம் கண்டு நாம் வழிப்படுத்துகிறோம்.
* சர்வதேச அங்கீகாரம் பெற்ற இந்தப்பட்டப்படிப்பினை அமெரிக்கா, கனடா அல்லது வேறு எந்த நாட்டிலேனும் இருந்தவாறு கற்றுத்தேறவும் முடியும்.
* சர்வதேச அங்கீகாரமிக்க அமெரிக்கப் பல்கலைக்கழகப்பட்டம் பெறும் ஆர்வம் கொண்ட ஒருவர் வெற்றிப்பாதையை தேர்ந்தெடுத்துவிட்டார். இனி அவர் எல்லையற்ற வெற்றிப்பயணத்தின் தெளிவான பாதையில் உள்ளார்.
* நாம் அடுத்து வரும் வாரங்களில் யாழ்ப்பாணத்தில் உங்களுக்காக காத்திருப்போம்.

இதைப்பற்றி மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள இப்திக்கார் மரிக்கார் அவர்களை, பிள்ளையார் இன், இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் சந்தித்து அறிந்துகொள்ளலாம்.

**சந்திக்கும் நேரங்கள்**

7 ஆம் திகதி ஒக்டோபர் – வியாழக்கிழமை – 10.30 மு.ப. – 5.30 பி.ப.
8 ஆம் திகதி ஒக்டோபர் – வெள்ளிக்கிழமை – 9.00 மு.ப. – 12.00 ந.ப., 2.30 பி.ப. – 6.30 பி.ப.
9ஆம் திகதி ஒக்டோபர் – சனிக்கிழமை – 9.00 மு.ப. – 1.00 பி.ப.

அமெரிக்க தேசிய கல்லூரி அதற்கு உங்களுக்கு உதவும்! வழிகாட்டும்!!

**AMERICAN NATIONAL COLLEGE**
A Member of Ceylinco Consolidated

No. 308, 310, R.A.De Mel Mw, Colombo 03.
Tel: 4514415
Hotline, 0777 484 484, 0777 712 059.
E-mail: ifthikar@ancedu.com

# புலிகள்-படையினர் சந்திப்பு கிழக்கில் ஒத்திவைப்பு

மட்டக்களப்பு,ஒக்.3

மட்டக்களப்பில் எதிர்வரும் புதன்கிழமை விடுதலைப் புலிகளுக்கும், இராணுவ மற்றும் பொலீஸ் அதிகாரிகளுக்குமிடையில் இடம் பெறவிருந்த சந்திப்புத் திகதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 22ஆம் திகதி வவுணதீவு யுத்த சூன்யப் பிரதேசத்தில் இரு தரப்பினருக்குமிடையில் இடம்பெற்ற புரிந்துணர்வுச் சந்திப்பின்போது எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய மாதத்தில் இரு தடவை இத்தகைய சந்திப்பு மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் இ.கௌசல்யன் தற்போது ஐரோப்பிய நாடுகளுக்கான பயணத்தை மேற்கொண்டுள்ளார். இதன் காரணமாகவே குறிப்பிட்ட சந்திப்புத் திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இது தொடர்பாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்துடன் தொடர்புகொண்டு கேட்ட போது, விடுதலைப் புலிகள் கேட்டுக் கொண்டதன் பேரிலேயே உத்தேச சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கண்காணிப்புக் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

(ஐ)


## உடனடி தேவை

கண்டி வீதி, கச்சேரியில் புதிதாக திறக்கவுள்ள வியாபார நிலையத்திற்கு.

காசாளர் :- பெண்
விற்பனையாளர் :- ஆண்

ஆணின் வயதெல்லை 45இற்கு மேற்பட்டவராகவும் நிலையத்தை பொறுப்பாக நடத்தக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

சம்பள விவரம் நேரில்.

தொடர்பு - நேரடி இன்று காலை 10 - மாலை 5 வரை.

வி.மோகன்
இல.92, கண்டி வீதி, கச்சேரி.
T.P. 0712 575982, 0776 111419
(37156)(35)



THE ROYAL COLLEGE OF JAFFNA
கட்டணம் 1000/- வுடன் மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் கதைக்கலாம். 426 (302), K.K.S. Rd, Jaffna.


## நீர்விநியோகம் இருதினங்கள் தடைப்படும்

பிரதான நீர் விநியோகக் குழாயில் திருத்த வேலைகளை மேற்கொள்ள வேண்டி இருப்பதால் யாழ். நகரப் பகுதியில் தண்ணீர் விநியோகம் இன்றும் நாளையும் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். மாநகர சபை பொறியியலாளர் அறிவித் திருக்கின்றார்.

மாநகர சபை எல்லைக்குள் குருநகர் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் தண்ணீர் விநியோகம் தடைபபட்டிருக்கும். கோண்டாவிலில் இருந்து நகரில் உள்ள தாங்கிக்கு நீரை வழங்கும் பிரதான நிலத்தடி குழாயில் வெடிப்பு ஏற்பட்டிருப்பதாகவும் - அதனை அவசரமாகத் திருத்திச் சீர் செய்யவேண்டி இருப்பதால் இரு தினங்களும் நீர்விநியோகம் தடைப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.(ஐ-72)


YOGI BEAUTY PARLOUR
(Academy & Beauty Culture & Hair Dressing
HOME SCIENCE ACADEMY
குறுகிய கால புதிய பயிற்சி வகுப்புக்கள் இம்மாதம் 9ஆம், 10ஆம் திகதிகள் (சனி,ஞாயிறு) முதல் ஆரம்பமாகவுள்ளன.
- கேக்ஐசிங், மேலைத்தேய ஐசிங் அலங்காரம், மாச்சீனி மலர் அலங்காரம் (Fondant structures & sugar flowers)
- முக ஒப்பனை, தலை அலங்காரங்கள், மணப்பெண்அலங்காரம்
- அழகுக் கலையும் மூலிகை சிகிச்சை முறைகளும் (Facial classes) (Beauty culture and Herbal therapy)

இதில் பாடக் குறிப்புக்களுடன் கூடிய செய்முறை விளக்கங்கள் பயிற்சி அளிக்கப்படும். சேர விரும்பும் மாணவிகள் உடன் தொடர்பு கொள்ளவும்.
(37138)(30-11-18)
75. அம்மன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)
T.P.: 222 2796



படிவம்
தொழில்நுட்பக் கல்லூரி அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.
முடிவுதிகதி: 05.11.2004
BHARATHY PATHIPPAKAM
430, K.K.S. Road, Jaffna.
(சி-37978)



SHAMROCK
J/EACHCHA MODDAI Rd.
A/L - 2006
இணைந்த கணிதம்
★ இருபடிச் சமன்பாடு
★ எறியல்
Mr.T.GEETH B.Sc.
(57143)


## கண்ணீர் அஞ்சலி



வடமராட்சி வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும், இலங்கை மின்சாரசபையின் பருத்தித்துறை மின்பாவனையாளர் சேவை நிலைய ஊழியருமான

அமரர் **த.மகாதேவன்**
(மின் பாதையாளர்)

01.10.2004 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவிப்பதுடன், பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மின் அத்தியட்சகர், ஊழியர்கள்,
மி.பா.சே.நி. பருத்தித்துறை.
(சி-37979)(30)


பொருளியல்
PAPER CLASS
A/L - 2005 DAY CLASS
ஆரம்பம்: 04.10.2004-6.30 (a.m. ப.நே.)
திங்கள் முதல் வெள்ளிவரை
6.30 - 7.30 (ப.நே.)
By: S.ஜெயகுமார்
(B.A. (Hons) Eco. Spl.)
ஐடியல் சண்டிலிப்பாய்.
(37153)



லக்சுமி இணுவில்
விஜய், ஜோதிகா, விவேக், கிரண் நடித்த
திருமலை
தினசரி 11.00, 3.00, 7.00 (புதிய நேரம்)
(36987) (32)



ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
அர்ஜுன, லாராதத்தா, ரகுவரன், விவேக் நடித்த
அரசாட்சி
ரீக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30
(36361)



நாகம்ஸ் சுன்னாகம்
விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடிப்பில்
மதுர
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே)
4ஆம் திகதி முதல் ஜெரி
(C-37740)



நிறைஞ்சனாஸ் சங்கானை
தனுஸ், சாயாசிங் நடித்த
திருடா திருடி (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00, (புதியநேரம்)
வெள்ளி, சனி, ஞாயிறு
MEET THE PARENTS இரவு 8.45 (பு.நே.)



சிற்றி சினிமா பண்டத்தரிப்பு
இன்று முதல்
சூரியா, லைலா, ராஜ்கிரன் நடித்த
கந்தா (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 3.00, 7.00 சனி ஞாயிறு 11.00, 3.00, 7.00 (பு.நே)
(சி-37902)


## மரண அறிவித்தல்

### சரவணமுத்து முத்துக்குமார்

(ஓய்வுபெற்ற அதிபர்)



விடத்தல்தீவைப் பிறப்பிடமாகவும் கட்டாடு வயல்,இலுப்பைக் கடவையை வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து முத்துக்குமார் அவர்கள் நேற்று (02.10.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நுணாவில் மத்தி,*
*சாவகச்சேரி.* (37157)(30-11-18)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### நேர மாற்றம்

இன்றைய உதயன் 12ஆம் பக்கத்தில் வெளியான **திருமதி சரவணபவான் சரோஜினி** என்பவருடைய மரண அறிவித்தலில் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால், அது தவிர்க்கமுடியாத காரணத்தால் இன்று (03.10.2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்குப் பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

(37151)(30-11-18)

தகவல்:
கணவர்.

### திருமதி வீரசிங்கம் நல்லம்மா

காரைநகர், வாரிவளவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது கொக்குவில் கிழக்கு, கோயில் வீதியை வதிவிடமாகக் கொண்டவருமான திருமதி வீரசிங்கம் நல்லம்மா அவர்கள் நேற்று (02.10.2004) சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஓவசியர் வீரசிங்கத்தின் அன்பு மனைவியும், பரமசாமி, சிவஞானம், சதாசிவம் (ஹற்றன்), சிவபாலன் (ஹற்றன்), மகேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் சோதி அம்பாள், பராசக்தி, சிவமணி, ஜெகதீஸ்வரி, கணேசன், செல்வராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*37, கோயில் வீதி,*
*கொக்குவில் கிழக்கு.* (37148)(30-11-18)

தகவல்:
சிவஞானம் (மகன்)

### கந்தையா சிவராசா

விளானை, காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவராசா அவர்கள் நேற்று (02.10.2004) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - லட்சுமி தம்பதியின் அன்புப புதல்வரும் செல்வராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற S.V. ஆறுமுகம் மற்றும் S.V.முருகேசு (S.V.M.) ஆகியோரின் பெறாமகனும் ஆ.சிற்றம்பலத்தின் மைத்துனரும் பரமேஸ்வரி, சுப்பிரமணியத்தின் அன்புச் சகோதரனும் சு.திலகவதியின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2004) ஞாயிற்றுக்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று, அன்னாரது பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தில்லை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விளானை,*
*காரைநகர்.* (37144)(30-11-18)

தகவல்:
பரமேஸ்வரி, சுப்பிரமணியம் (சகோதரர்கள்).

### தாமோதரம்பிள்ளை மகாதேவன்

(இலங்கை மின்சாரசபை)



வல்வெட்டியைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை மகாதேவன் 01.10.2004 வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை தண்ணீர்ப்பிள்ளை அவர்களின் அன்பு மகனும் காலஞ்சென்ற நடராசா - பார்வதிப்பிள்ளையின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் ஸ்ரீபத்மநாதன் (லண்டன்), காந்தரூபி (லண்டன), சகாதேவன் (லண்டன்), சிவலோகநாதன் (லண்டன்), யோகநாதன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தேவராஜா (லண்டன்), சத்தியலட்சுமி (லண்டன்), தனேஸ்வரி (லண்டன்), நகுலேஸ்வரி (லண்டன்), சகிதா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சியாமா, சதீஸ்குமார் (லண்டன்), சுகிர்தா, சுரேசா (ஆஸ்திரேலியா), சிஷானி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் கண்ணதாசன், குலராஜன் (டோகா), ஸ்ரீக்குமார் (ஆஸ்திரேலியா), ராதிகா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கரிகரன், ரமணகரன் ரஜிகரன், சிஜாந்தன், யுவன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.10.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இறுதிக்கிரியைக்காக எள்ளங்குளம் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வேவில் பிள்ளையார் கோயிலடி,*
*வல்வெட்டி.* (37152)(30-11-18)

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### பெரியதம்பி கதிர்காமு

(முன்னாள் வர்த்தகர் - புதுக்குடியிருப்பு)

கரவெட்டி, கிழவி தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் யாக்கருவை வசிப்பிடமாவும் கொண்ட பெரியதம்பி கதிர்காமு நேற்றுக் காலமானார்.

அன்னார் பெரியதம்பி - கண்ணகை தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்ற பார்வதியின் கணவரும் காலஞ்சென்றவர்களான பாறுபதி, சேதுப்பிள்ளை, கதிராசி, வேலுப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும், காராளசிங்கம், சுப்பிரமணியம், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (ஆசிரியர்), கந்தசாமி, மார்க்கண்டு (தபாலதிபர் - கொழும்பு), இலட்சுமி, சின்னப்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர்), கனகம்மா ஆகியோரின் அன்புத் தந்தையும், கண்மனி (ஆசிரியை), கனகம்பாள், இளையபிள்ளை, சறோஜினிதேவி (ஆசிரியை), பொன்னையா (ஆசிரியர்), லீலாவதி, காலஞ்சென்ற ஐயாத்துரை ஆகியோரின் மாமனாரும் செல்வயோகம், வாமளாதேவி (லண்டன்), அற்புதராசா (லண்டன்), மாலினி (லணடன்), தபோதினி, நடராசா (அதிபர்), செல்வராசா (ஆசிரியர்), தங்கராசா (வருமானவரி உத்தியோகத்தர்), சிவராசா (கனடா), சிவநேசம் (கனடா), தவராசா (லண்டன்), சந்திரகலா (ஜேர்மனி), சந்திரகாந்தன் (கனடா), சந்திரலீலா, சந்திரரஜனி (லண்டன்), இலக்கியவரதன் (லண்டன்), அகிலா, சாந்தினி, சந்திரகுமார் (லண்டன்), சிறிஸ்குமார் (லண்டன்), சுரேஷ்குமார் (லண்டன்), சிவாஸ்குமார் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்), சுதாஸ்குமார் (ஆசிரியர்), சுபாஜினி, சுவேந்தினி (லண்டன்), பேரின்பநாதன் (லண்டன்), றங்கநாதன் (டென்மார்க்), மோகநாதன் (லண்டன்), கிருஷ்ணமேனன் (லண்டன்), கவிதா (லண்டன்), விஜிதா (லண்டன்), அகிலன் (லண்டன்), வாகீசன் (லண்டன்), விஷ்ணுகாந்தன (லண்டன்), கிரிதரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), சுதர்ஜினி (லண்டன்), வித்தியா (லண்டன்) ஆகியோரின் பேரனும், சுஜிதா, சுகன்யா, வேணுகோபன், கௌசிகன், ஞானகௌரி, பிருந்தாபன், கீதாஞ்சினி, தமிழினி, சிந்துயா, தர்மிகா, கோகிலராம், பிரவீன், தருன், ஜெயப்பிரதா, சசிகரன், அனிதாதாரகை, பிரவீனா, றெனோஜன், ரிஜோசன், கௌதம், நாரணி, பிரகலாதன், கம்பரசன், கம்சவிருதன், மாதுமை, மாஞ்சனன், மதுகாரி, சாரணி, அக்சயா, ஆரதி, அஜன், டெசியா, ஜனனி, ஜவாசினி, சுஜானி, ஜந்துனி, தாரிகா, சந்தனா, சுவீஸ்னா, ராகவீனா, அபிஷென், அனுஷ்கா, ஆதித்தன் ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் சோனப்பு மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*யாக்கரு வீதி,*
*கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.* (சி-37980)(30-11-18)

தகவல்:
பொன்னையா கிரிதரன் (பேரன்).



அரியாலை கிழக்குப் பகுதி விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராய நேற்றுக் கூட்டப்பட்ட கூட்டத்தில் கமநல சேவை உதவி ஆணையாளர் எஸ்.சுந்தரேசன் உரையாற்றுவதைக் காணலாம். அருகில் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ், திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை, நல்லூர் பிரதேச செயலர் திருமதி தெய்வேந்திரம், மிதிவெடி செயற்பாட்டுப் பொறுப்பாளர் எல்மோ.ஆனந்தராஜா மற்றும் படை அதிகாரிகள் காணப்படுகின்றனர்.

*(படம்: அலுவலகச் செய்தியாளர்)*

# வெளிநாட்டு அமைச்சர்களை கதிர்காமர் சந்தித்துப் பேச்சு

வெளிவிவகார அமைச்சு லக்ஷ்மன் கதிர்காமர் நியூயோர்க்கில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்ற வெளிநாட்டு அமைச்சர்களைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியிருக்கின்றார்.

அல்ஜீரியா, லாவோஸ், பாகிஸ்தான், நைஜீரியா, உருகுவே, கியூபா, மலேசியா, இந்தோநேசியா ஆகிய நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்கள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைச் சந்தித்துள்ளார்கள்.

சமய சின்னங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கெதிராக இலங்கை அரசு முன்வைத்துள்ள பிரேரணைக்கு லாவோஸ் பேராதரவு தெரிவித்துள்ளது. யுனெஸ்கோ நிறுவனத்தின் எதிர்வரும் நிறைவேற்றுச் சபைக் கூட்டத்தில் இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஆசியான் பிராந்தியக் குழுவில் அங்கத்துவம் பெறுவதற்கு இலங்கை சமர்ப்பித்துள்ள விண்ணப்பத்திற்கும் லாகோஸ் வெளிநாட்டு அமைச்சர் ஆதரவு தெரிவித்துள்ளார்.

உருகுவே வெளிநாட்டு அமைச்சருடன் பேச்சு நடத்திய அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வர்த்தக உடன்படிக்கை ஒன்றைச் செய்வதற்கான வாய்ப்புப் பற்றி ஆராய்ந்துள்ளார்.

மலேஷிய வெளிநாட்டு அமைச்சர் கபீர் அலபாருடனும் அமைச்சர் கதிர்காமர் பேச்சு நடத்தியுள்ளார். இதன் பயனாக மலேஷியாவின் வறுமை ஒழிப்புத் திட்டத்தை ஆராய்வதற்கென இலங்கை குழு ஒன்றை அனுப்பிவைக்க விருக்கின்றது.

## இலக்கிய விழாக் கூட்டம்

வடக்கு- கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ள தமிழ் இலக்கிய விழா தொடர்பான முக்கிய கூட்டம் எதிர்வரும் 6ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு யாழ். வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் வடக்கு - கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் உதவிப்பணிப்பாளர். திருமதி என்.ஸ்ரீதேவி கலந்து கொள்ளவுள்ளதால் சம்பந்தப்பட்ட அனைவரையும் குறிப்பிட்ட நேரத்திற்கு சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

# திருமலை ஊடகவியலாளர்களுக்கு கணனி, இன்ரநெற் பயிற்சிகள்

திருகோணமலை,ஒக்.3

பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (பி.பி.ஸீ) ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து திருகோணமலை மாவட்டத்தில் ஊடகவியலாளர்களுக்கான பயிற்சியை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

இதன் முதற்கட்டமாக ஊடகவியலாளர்களுக்கு கணனி, இன்ரநெற் போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டுவருகின்றன.

அடுத்தகட்டமாக எதிர்வரும் நவம்பர் மாத முற்பகுதியில் இவர்களுக்கான வதிவிடப் பயிற்சியினை வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என இப்பயிற்சிக்கு பொறுப்பான எஸ்.ஜெறோம் தெரிவித்துள்ளார்.

(3-13)

# யாழ்.நகரில் இன்று மகளிர் சங்கமம்

யாழ்ப்பாணம்,ஒக்.3

யாழ்மாவட்ட மகளிர் சங்கமம் நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் குடாநாட்டில் உள்ள மகளிர் அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர்.

(ஐ-13)

## கருணா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர் என்றும் தாக்குதலில் காயமடைந்த நிலையில் தப்பி ஓடிய இருவரையும் தேடி காடுகளில் தேடுதல் மேற்கொள்ளப்படுவதாகவும் விடுதலைப் புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன.

சடலத்தையும் ரி-56 துப்பாக்கி ஒன்றையும் புலிகள் மீட்டுள்ளனர். மீட்கப்பட்ட சடலம் பெண்டுகள் சேனையில் உள்ள அவரது பெற்றோரிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

(ஐ-3)

## ஆலோசனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்தில் பங்குபற்றுவது குறித்து இதுவரை முடிவு எதுவும் எடுக்கவில்லை. இந்தக் கவுன்ஸில் தொடர்பாக விளக்கம் பெறுவதற்கு கலந்துரையாடச் சந்தர்ப்பம் தருமாறு அந்தக் கட்சி ஜனாதிபதியிடம் நேற்றுக் கோரியுள்ளது.

இதேவேளை-

சர்வோதயம், மாற்றுக் கொள்கைக்கான நிலையம் உட்படப் பல அரசசார்பற்ற நிறுவனங்கள் இக்கூட்டத்தில் பங்குபற்றவிருக்கின்றன.

(ஐ-3)

# மன்னாரில் பதற்றம் தளர்வு

மன்னார் ஓலைத்தொடுவாயில் இனந்தெரியாத நபர்களால் முஸ்லிம் ஒருவர் நேற்றுமுன்தினம் சுட்டுக்கொல்லப்பட்டதன் எதிரொலியாக அங்கு ஏற்பட்ட பதற்ற நிலைமை நேற்றையதினம் தணிந்துள்ளது. மக்கள் தமது வழமையான செயற்பாடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

போக்குவரத்துச் சேவைகளும் எந்தவித இடையூறுகளுமின்றி நடைபெற்றன. மன்னார் நகரப் பகுதியிலுள்ள கடைகளும் வழமையான நிலைமைக்குத் திரும்பியுள்ளன.

இதேவேளை - மன்னார் நகரப் பகுதியிலும் ஏனைய பிர தேசங்களிலும் இராணுவத்தினரும், பொலீஸா ரும் கூட்டாக இணைந்து தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னப் பேச்சுக்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட தமது நிலைப்பாடு குறித்தும் புலிகளின் பிரதிநிதிகள், அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தலைமையில் சொல்ஹெய்முக்கு விளக்கமளிப்பர். சொல்ஹெய்முடனான சந்திப்பின் பின்னர் இன்று விடுதலைப் புலிகளின் அரசியல் குழுவின் கூட்டத் தீர்மானங்கள் ஊடகங்களுக்கு வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் வைத்து அல்லது அறிக்கை வடிவில் தீர்மானங்கள் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் (NESHOR) விடுதலைப் புலிகளின் தரப்புப் பிரதிநிதிகள் நேற்று மாலை ஜெனீவா வந்தடைந்தனர். வண.பிதா கருணாரட்ணம் தலைமையிலான இக்குழுவினர் மனித உரிமைகளுடன் தொடர்புடைய ஐரோப்பிய அமைப்புகள் பலவற்றுடன் சந்திப்புக்கள் நடத்தவுள்ளனர்.

(ஐ-3)

# ஜனாதிபதியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களும், எதிர்பார்ப்புக்களும் போதியளவு முன்வைக்கப்படவேண்டும் என்பதும் வடக்கு - கிழக்கு முஸ்லிம்கள் நீண்டகாலமாக வலியுறுத்திவரும் சட்டபூர்வமான கோரிக்கையாகும். கடந்த பொதுத் தேர்தலின்போது இந்தக் கோரிக்கையானது வடக்கு - கிழக்கு முஸ்லிம்களின் அதிகபட்ச அங்கீகாரத்தைப் பெற்றது.

இந்தக் கொள்கை சார்ந்த நிலைப்பாட்டை முன்னர் பதவியில் இருந்த அரசும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பும் அங்கீகரித்திருந்தன.

தங்களது தலைமையிலான தற்போதைய அரசின் பிரதான கட்சி உட்பட ஏனைய பல அரசியல் கட்சிகளும் இந்த நிலைப்பாட்டை உறுதிப்படுத்தியிருந்தன. அத்துடன் சமாதானப் பேச்சுக்களின் முன்னைய சுற்றுக்களின்போதும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் இந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இந்த இணக்கப்பாட்டுடனான சட்டபூர்வமான கோரிக்கையை வலியுறுத்தி அதற்கு மேதகு ஜனாதிபதியான தங்களது அங்கீகாரத்தை வேண்டி இவ்வாண்டு மேமாதம் 14ஆம் திகதி நான் தங்களுக்கு எழுதிய கடிதத்திற்கு இன்றுவரை எதுவித பதிலும் கிடைக்கவில்லை.

வடக்கு - கிழக்கு முஸ்லிம்களைப் பாதிக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அரசியல் பேச்சு மூலமான நிரந்தரமான தீர்வு பற்றிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தொடர்ச்சியான, அர்ப்பணிப்புடனான ஈடுபாட்டை கொண்டுள்ளதையும் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் வடிவமைப்பது உட்பட அர்த்தமுள்ள - ஆக்கபூர்வமான - வெளிப்படையான எந்த முயற்சிக்கும் உதவுவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எப்பொழுதும் தயாராக இருக்கிறது என்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

முஸ்லிம்களின் அதிக பட்ச ஆணையைப் பெற்ற அரசியல் கட்சி என்ற முறையில் தனித்துவமான கட்சியாக முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் சமூகத்தின் சார்பில் பேச்சுக்களில் பங்கு கொள்ளும் அந்தஸ்தை நிலைநாட்டுவதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முனைப்புடனும் உறுதியுடனும் செயலாற்றிவருகின்றது.

தங்களது முன்னெடுப்பை நாம் பாராட்டும் அதேவேளையில் சமாதானப் பேச்சுக்களில், தேசிய ஆலோசனைப் பேரவையின் பங்களிப்பு, அதன் அமைப்பு, அது செயற்படும் விதம், சமாதான முயற்சியில் அது ஏற்படுத்துக்கூடிய தாக்கம் எத்தகையது என்பன, போதிய விளக்கம் தேவைப்படும் அம்சங்களில் சிலவாகும்.

இத்தகைய சூழ்நிலையில் உத்தேச கூட்டத்தில் நாம் பங்குபற்றுவது பற்றித் தீர்மானிப்பதற்காக மேதகு ஜனாதிபதியாகிய தங்களுடன் கலந்துரையாடுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தரும்படி நாம் தங்களிடம் விநயமாக வேண்டுகிறோம்

- இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ-3-13)


பொருளியற் கல்லூரி
யாழ்ப்பாணம்
வணிகக் கல்வி
By: முரளி
A/L DAY CLASS
திங்.,புதன்,வெள்.
பகுதி - I
செவ்., வியா.
பகுதி - II
நேரம் - 7.00 (ப.நே.)
(37149)

A/L-2006
கணக்கீடு
திரு. பாலவாசன்
(B.B.A.(F.M. Spl.)
உற்பத்திக் கணக்கு
Tue., Thu.
5.00 -6.00 p.m.
ஆரம்பம்: 5.10.2004
NIRU
Tution Centre
(37111)

விக்னா
கல்வி நிறுவனம்
A/L - DAY CLASS
வணிகவியல்
திரு.முரளி
பகுதி - 2
ஆரம்பம்:- 4.10.2004 நாளை 4 மணி.
(37973)(35)

அறிவொளி
நல்லூர்
CHEMISTRY
திரு. மகிழ்
THERMO CHE.
ஆரம்பம்:
04.10.2004
4.30 p.m. (Slt.)
Mon., Tue., Fr.
4.30 p.m.
(37141)

மாணவர்களின்
வேண்டுகோளுக்கு
இணங்க மீண்டும்
A/L அரசியல் - 2005
வினா - விடை
வகுப்புகள் நேற்று
02.10.2004
ஆரம்பமாகிவிட்டன.
ஆசிரியர் A.கியூபேட்
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(36508)

D.C.M.
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
A/L DAY CLASS
பொருளியல்: S.வரதராஜன்
இலங்கைப் பொருளாதாரம் (பாட அலகுகள் 7,8)
முழுப்பாடத்திட்டமும் வினா - விடைகளும்
கற்பிக்கப்படும்.
(திங்கள், செவ்.,வியா.,வெள்ளி)
பிரிவு I 8.00 - 9.30 ப.நே.
பிரிவு II 11.30 - 1.00 ப.நே.
ஆரம்பம்: 04.10.2004 திங்கள்
(37046)

இராஜசோழன் கட்டடப் பொருள் வாணிபம்
Dulux Paint
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
19,கச்சாய் வீதி, சாவகச்சேரி. T.P:0776181153
ICI Dulux Colour Selection
CIC PAINTS (PVT) LTD இன் அங்கீகாரம் பெற்ற சாவகச்சேரி முகவர்
(37725)

EXPOAIR எக்ஸ்போ எயார்
your friend in the skies... வானில் உங்கள் நண்பன்...
யாழ் பயணத்தின் போது
ரோள்ஸ் றெய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை
அனுபவியுங்கள்!
யாழ்ப்பாணம்: 021 2223891, 021 2226297, 077 2349999
கொழும்பு: Tel: 011 2372952/3, Fax: 011 2372954
வெள்ளவத்தை: 011 2360290, 2360291
e-mail: jaffna@expoavi.com, reservations@expoavi.com
இலங்கையின் நம்பத்தகுந்ததும் முன்னணியுமான யாழ் — கொழும்பு விமான சேவை


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.10.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
03-10-2004

# புலிகளின் யோசனையை தூக்கி எறிந்து விட்டாரா ஜனாதிபதி??

டன்ஸ்ரன் லூயிஸ்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தனது அரசியல் எதிர்காலத்தை விடுதலைப்புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை (ISGA) யோசனைகளுக்குப் பலியிடத்தயார் இல்லை என்பது தெட்டத்தளிவாகத் தெரிகிறது.

விடுதலைப்புலிகளின் யோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்களைத் தொடங்கி பொருத்தமான இணக்கப்பாடுகளைக் கண்டு ஓர் இடைக்காலத் தீர்வை அடைவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆகியன ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவிக்கத் தயாராகவே உள்ளன. இக்கட்சிகளின் வாயிலாக இடைக்காலத் தீர்வை நாடாளுமன்றத்தில் சட்டவாக்கம் செய்வதற்குக் கூட 2/3 பெரும்பான்மை மிக இலாவகமாகக்கிடைத்துவிடும்

## அரசாங்கத்தின் ஆயுள் நீடிக்கப்பட்டாயிற்று!

எனினும் ஐக்கிய தேசியக்கட்சி. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் ஆதரவு மட்டும் நிபந்தனையற்ற முறையில் பெற்றுக்கொண்டு ஒருசில அமைச்சுக்களை அவர்களுக்கு ஜனாதிபதி வழங்கினார். இ.தொ.கா தனது சம்பிரதாயத்திற்கு மட்டும் விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனைகளின் அடிப்படையில் அரசாங்கம் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்று கூறிவந்திருகின்றது. அது நிபந்தனையோ அழுத்தமோ அல்ல. இ.தொ.காவின் ஆதரவளிப்பு மூலம் அரசாங்கம் தனது ஆயுளை நீடித்துக் கொண்டு விட்டது.

## சமாதானத்துக்கான ஆலோசனைச்சபை கானல் நீரா?

இந்நிலையில் சர்வதேச சமூகத்திற்கும். ஜே.வி.பி. மற்றும ஜாதிக ஹெல உறுமய ஆகியவற்றிற்கும். விடுதலைப் புலிகளுக்கும் - அதாவது மூன்று தரப்பினருக்கும் ஒரே வேளையில் எவ்வாறு ஒரு 'சராசரியான நட்பு முகத்தை' காட்டுவது என்பதே ஜனாதிபதியின் தற்போதைய உபாயமாக உள்ளது. அந்த உபாயம் சமாதான முயற்சிகளின் ஆயுளைக்குறைக்கலாம்.

எப்பாடுபட்டேனும் சமாதானப் பேச்சுக்களை மீட்டு எடுக்கவே தான் முற்படுவதாக காட்டுவதுடன் தனது அரசியல் எதிர்காலத்தை ஸ்திரப்படுத்துவதற்கான ஒரு நீளமான கால அவகாசத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவும் - இழுபட்டுச் சர்ச்சைப்பட்டுச் செல்லக்கூடிய ஒரு முயற்சியாக அனைத்து அரசியல் கட்சிகள். சிவில் அமைப்புக்கள் ஆகியவற்றின் கருத்துக்களைப் பெற்றுக்கொண்டு சமாதானமுயற்சிகளைத் தொடர்வது என்ற போர்வையில் - சமாதானத்துக்கும் நல்லிணக்கத்திற்குமான தேசிய ஆலோசனைச் சபை (National Advisory Council for Peace and Reconciliation) - என்னும் ஒரு சபையை அமைக்க ஜனாதிபதி முயற்சிக்கிறார். இதனை அமைப்பதற்கான ஆரம்ப வைபவம் ஒக்ரோபர் 4 ஆம் திகதி (நாளை) மாலை 3.00 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும். என்றும் அதில் அங்கத்துவத்தைப் பெற்று சகல அரசியல் கட்சிகளும். மதநிறுவனங்களும். சிவில் அமைப்புக்களும் தத்தமது ஆலோசனைகளையும் கருத்துக்களையும் அரசியல் பேச்சுவார்த்தைகளுக்கும். தீர்வுத்திட்டத்திற்கும் வழங்கவேண்டும் என்றும் ஜனாதிபதி அழைப்புக் கடிதம் மூலம் கட்சிகளையும். நிறுவனங்களையும் அமைப்புக்களையும் கோரியுள்ளார். இந்த ஆலோசனைச்சபை அரசியல் குழு. மத அமைப்புக்களின் குழு. சிவில் சமுகங்களின் குழு என்ற மூன்று உப குழுக்களைக் கொண்டிருக்கும் என்றும் இந்த உப குழுக்கள் மாதந்தோறும் கூடி ஆராயும் என்றும் தனது அழைப்புக்கடிதத்தில் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

சுதந்திர ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் பெறும் கட்சிகள். ஆலோசனைக்குழுவில் நிச்சயம் அங்கம் பெறும். இந்த ஆலோசனைச் சபையை இழுத்தடிக்கும் தந்திரோபாயமாகவே பெரும்பாலான தமிழ்க் கட்சிகளும். ஐக்கிய தேசியக் கட்சியும் பார்க்கின்றன. இதில் அங்கத்துவம் பெறுவதை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு (தமிழரசுக்கட்சி) விரும்பமாட்டாது என்று கூறிவிட்டது. ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனது கட்சியின் அரசியல் விவகாரக்குழுவின் பிரமுகர்களுடன் கூடி ஆராய்ந்த பின்பு ஜனாதிபதிக்கும் தங்கள் நிலைப்பாட்டை தெரிவித்துள்ளார். அரச அங்கமான ஈ.பி.டி.பியும். ஈ.பி.ஆர்.எல்.எப் (வரதர் அணி) போன்ற கட்சிகளும் பங்குபற்றும் வாய்ப்புக்கள் உள்ளன.



## முதலில் பேச்சு பிறகு ஆலோசனைச் சபை

முதலில் விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை. அவர்களின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் ஆரம்பிக்கும்படியும் அதனையடுத்து ஆலோசனைச்சபையை அமைத்து முக்கியமான அரசியல்த் தீர்வு வடிவங்களுக்கான ஆலோசனைகளைப் பெற முயற்சிப்பின் ஐக்கிய தேசியக்கட்சியும் அதில் அங்கத்துவம் பெற்று ஆலோசனை வழங்கும் என்றும் ரணில் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளார். தனது கட்சியின் நிலைப்பாடு தொடர்பாக சர்வதேச நாடுகளின் இராஜதந்திரிகளுக்கு நன்கு தெளிவுபடுத்துமாறு ரணில் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அவர்களிடம் பொறுப்பளித்தார். பீரிஸ் அவர்கள் அமெரிக்கத் தூதுவர் உட்பட பல இராஜதந்திரிகளைச்சந்தித்து நிலைப்பாட்டை விளக்கியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் ISGA யோசனைகளை ஐக்கிய தேசியக்கட்சி முழுமையாக ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் பேச்சுக்களை ஆரம்பித்தால் அதில் திருத்தங்களைக் கொண்டுவந்து ஓர் இணக்கப்பாட்டுக்கு வரமுடியும் என்றும் அதனைவிடுத்து முன்[illegible]டியே ஆலோசனைச் சபை[illegible] அமைத்துக் காலத்தை இழுத்தடிக்கும் உபாயத்துக்கு இணங்க முடியாது என்றும் முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தனியார் தொலைக்காட்சியொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

## ரணிலின் 'மினித்' தந்திரோபாயம் பலிக்குமா?

ஒருவகையில் ரணில் விக்கிரமசிங்கவின் 'மினித்' தந்திரோபாயமாகவே இதனைக் கருதவேண்டியுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சிப்போர்வைக்குள் ஜே.வி.பி. வளர்ந்து ஓங்குவது ஐ.தே.கட்சிக்குப் பெரும் சவாலாகும். விடுதலைப் புலிகளின் ISGA யோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்க நிர்ப்பந்திக்கும் அதேவேளை. ஜே.வி.பியையும் ஆட்சிப்போர்வைக்குள்ளிருந்து தூக்கியெறிந்துவிடலாம் என்பது ரணிலின் உபாயம் ஆகும். அதன் பின்னர் குட்டையைக் குழப்பித் தேசிய ஒற்றுமை என்ற பெயரில் சமாதானப் பேச்சுக்கள் தொடர்வதை. ஜனாதிபதி ஓர் அரசியல் தீர்வுக்கு முயல்வதைத் தடுத்து கொழும்பு அரசியலை ஆட்கொள்ளுவதே ரணிலின் நோக்கம்.

## நாடாளுமன்றை அரசியல் நிர்ணய சபையாக மாற்றுதல்?

ஆனால். தன்னுடைய அரசியல் எதிர்காலத்தை தனது கட்சிக்குள் காப்பாற்றிக் கொள்வதற்கான ஒரே வழிவகையாக ஜனாதிபதி பார்க்கிற விடயம் - நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஆட்சிமுறையை நீக்கி பிரதமமந்திரி தலைமையிலான நாடாளுமன்றத்துக்கு அதிகாரங்களை வழங்கும்படி புதிய அரசியல் யாப்பு ஒன்றை அமைத்தல் ஆகும். தற்போது அரசிடம் உள்ள சாதாரண பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற்றும் செயல்முறையை முன்னெடுத்து அரசியல் நிர்ணய சபை (Constituent Assembly) மூலம் எடுக்கப்படும் முடிவுக்கு ஒர சர்வசன அபிப்பிராய வாக்கெடுப்பு மூலம் மக்களிடம் ஆணைகேட்டு. அந்த ஆணையை மீளவும் நாடாளுமன்றத்துக்கும் உச்சநீதிமன்றத்துக்கும் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பித்து அங்கீகாரத்தைப் பெற்ற பின்பு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஆட்சிமுறையை ஒழித்து அதிகாரம்கொண்ட பிரதமர் பதவியை உருவாக்கி தான் பிரதமராகிக்கொள்வதே திருமதி சந்திரிகா குமாரதுங்காவின் அரசியல் கனவு ஆகும். கால ஒழுங்குப்படி அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நெருங்குவதனால் சட்ட நுணுக்கங்களும் சட்டச் சிக்கல்களும் நிறைந்த இந்த நடைமுறைகளை விரைவுபடுத்தவேண்டிய அவசியம் அவருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதிக் கதிரைக்காக ஆவல் கொண்டிருக்கும் ரணில் அவர்கள். ஆதரவு தருவதாகச் சொல்லும் எந்தக் கட்டத்தையும் சந்திரிக்காவால் நீண்ட காலத்துக்கு நம்பமுடியாது. ஆனால். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிக்கும் ஒரு புதிய யாப்புக்காக பாடுபடத்தயாராகவுள்ள ஜே.வி.பியையும் அதன் ஆதரவாளர்களையும் இழக்கவிரும்பாத ஜனாதிபதி விடுதலைப் புலிகளின் ISGA ஐ அடிப்படையாகக் கொண்டு பேச்சுக்களை ஆரம்பித்து. தனது அரசியல் நலன்களைப் பலியிடமாட்டார் என்றே தெரிகிறது. ஆகவே ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய ஆகிய இரு தரப்பினரதும் வாக்கு வங்கிகளைப் பயன்படுத்த விரும்புகிற ஜனாதிபதி. சமாதான முயற்சிகளை முழுமையாகச் சாகவிடவும் தான் தயாரில்லை என்பதைச் சர்வதேச சமூகத்துக்குக் காட்டிக்கொள்ள விரும்புகிறார். அதன் வழியான முயற்சியே சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான தேசிய ஆலோசனைச்சபை அமைக்கும் முயற்சியாகும். ஐ.நாவின் பொது அமர்வில் அவர் நிகழ்த்திய உரையில் பாய்ந்து பெருகிய இங்கிதமான ராஜதந்திர வார்த்தைகளிலும் சர்வதேச நாடுகளுக்குத் தனது சமாதான ரீதியிலான அரசியல்முயற்சி. முதிர்ச்சி எத்தகையது என்பதைக் காட்டவேண்டிய விருப்பம் தெரிந்திருக்கிறது.

ஆகவே. ஜனாதிபதி ஐக்கிய தேசியக் கட்சி. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆகியோரின் ஆதரிப்பை தனது அரசியல் எதிர்காலத்தைப் பேணிக்கொள்வதற்கான மார்க்கமாக எள்ளளவும் பார்க்கமாட்டார் என்பதுடன் ISGA அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கமாட்டார் என்பதும் இப்போதைக்குத் தெளிவாகத் தெரிகின்ற விடயங்களாகும்.

இப்போது விடுதலைப் புலிகள் என்ன சொல்கிறார்களோ - என்ன சொல்லப்போகிறார்களோ. எப்படியான தந்திரோபாயத்துடன் எந்தச் செல்நெறியைத் தெரிவுசெய்கிறார்களோ... இவைதான் இலங்கைத்தீவின் அரசியல் இரசாயன மாற்றங்களை (Changes of Political Chemistry) நிகழ்த்தப்போகின்றன என்பது மட்டும் நிச்சயமானது.

# குடாநாட்டின் இன்னொரு முகம்



கடந்த முதலாம் திகதி சர்வதேச சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள் குடாநாடெங்கும் சிறப்பாகவே கொண்டாடப்பட்டன. பாடசாலைகள், பிரதேச செயலகங்கள், சிறுவர் முதியோர் நலன் பேணும் அமைப்புகள் பலவும் தங்கள் தங்கள் பங்கிற்கு விழாக்கள் கொண்டாடி, விருந்து வழங்கி, புத்தாடை வழங்கி, புகைப்படமெடுத்து முடிந்தாயிற்று. ஆனால், குடாநாட்டின் மாயத் தோற்றம் கிழிக்கப்பட்டு அதனுள்ளே உற்றுப்பார்த்தால்தான் அங்கே உருக்குலைந்து போய் வாழும், வழியின்றித் தவிக்கும் அந்த சிறுசுகளினதும் பெரிசுகளினதும் வாழ்வுரிமைப் போராட்டம் உங்களுக்குப் புரியும்.

கனத்த உருவங்களாகக் கனடாவிலிருந்து வந்து கஸ்தூரியார் வீதியில் கண்ணைக்கவர உலாவரும் சிட்டுக்களைத் தானே நாம் குடாநாட்டின் குழுந்தைகளாக கனவு கண்டுகொண்டிருக்கின்றோம். ஆனால் உண்மை அதுவல்ல. அழுக்கான துணி, அச்சம் விலகாத கண்கள், நேற்றுக்கண்ட சோறு நாளை கிடைக்குமா? என்ற ஏக்கம் தேங்கிய முகம். வானமே கூரையாக அகன்ற வேரொன்றில் தலைசாய்த்து, அருகிருக்கும் தோழனுக்கு அந்தரத்தில் தொங்கும் ஆலம்பழத்தைக் காட்டி வாயூறும் நிலை. ஒட்டிய வயிறு ஓட்டைகள் நிறைந்த மேலாடை விடிவெள்ளி தெரிவதாக நாம் கூறும் தேசத்தில் விடிவே இராத நாள்களோடு போராட்டம் நடத்தும் பிஞ்சுகளின் வாழ்வை அவர்களது வாழ்பனுபவங்களை உங்கள் கண்முன்னே விரிக்கவே இந்தக்கட்டுரை.

“ஓடுங்கோடா வெளியே” என்று ஓங்கிய தடியுடன் விரையும் அந்த வீட்டுக்காரர். அவருக்கு முன்னால் அந்த வீட்டின் வளவுக்குள் இருந்து வீதியை நோக்கி ஓடுகின்றார்கள் அந்த சிறுவர்கள். அவர்கள் ஐவர் தோள்களில் உரைப்பைகள்,



கைகளில் கொய்யாப்பழங்கள் சில. “பாவமெண்டு குப்பையில்க் கிடக்கிற பழஞ்சாமான்களை பொறுக்க விட்டால் கொய்யா மரத்தில் ஏறி கொய்யாப்பழம் பிடுங்குறாங்கள் தம்பி” எனக் கூறிவிட்டு வீட்டுக்குள் போகின்றார் அந்த வீட்டுக்காரர். ஆனால், அந்தச்சிறுவர்கள் அது எதையுமே காதில் வாங்கியதாகக் கூடத் தெரியவில்லை. எதுவுமே நடக்கவில்லை என்பதாகக் கையில் இருக்கும் கொய்யாப்பழங்களோடு போராடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களில் ஒருவன் சுரேஷ்குமார்.

## “ஊருக்குள் வந்தால்தான் உண்மை புரியும்...”

சுரேஷ்குமாரின் அப்பா ஒரு நோயாளி. வேலைக்குப் போகமுடியாமல் வீட்டிலிருக்கிறார். அம்மாவின் உழைபபிலேதான் ஆறுபேர் கொண்ட அந்தக்குடும்பம் அடிக்கடி உணவைக்காண்கின்றது. காலைச்சாப்பட்டைக் காண்பது அரிது. “பசியோடு பள்ளிக்கூடம் நெடுகப் போக இயலாது. கொப்பி முடிஞ்சால் புதுக்கொப்பி வேண்ட அம்மா காசு தராட்டால் ரீச்சர் அடிப்பா ...... அது தான் நான் பள்ளிக்கூடம் போறதில்லை.” என்கிறான சுரேஷ்குமார். “ஏன் தம்பி கஷ்டமெண்டு சொன்னால் இப்ப பள்ளிக் கூடத்தில கொப்பிகள் தாறவையல்லோ நீ சொல்லேலையோ” என்றேன். “ஒருக்கா தந்தவை பிறகு தாரேல்ல” என்றவன் மற்ற நண்பர்கள் அழைக்க வீதியில் இறங்கிப் பறக்கின்றான் அவன். பத்துத் தொடக்கம் பதினான்கு வயதேயான அந்தச்சிறுவர் பட்டாளம் இப்போது குப்பை மேடுகளைச் சல்லடை போட்டுக்கொண்டிருக்கின்றது தங்கள் உணவுரிமைக்காக.

வீதிவழியே சென்று கொண்டிருக்கும் போது கண்ணில் பட்டது மருதனார் மடம் உரும்பிராய் வீதியில் உள்ள அந்த நலன்புரி நிலையம். வழிப்பயணத்திற்காக எம்மவர் நின்ற அந்த புகையிரத நிழற்குடையில் இன்று பல குடும்பங்கள் வாழ்க்கைப்பயணத்தை நடத்திக் கொண்டிருக்கின்றன. அந்தப்புகையிர மேடைதான் அங்குள்ள சிறுவர்களுக்கு மைதானமும், வாழ்விடமுமாகும். முன்பள்ளியில் கற்க வேண்டிய மழலைகள் பல பள்ளி வாசனையேயின்றி பசித்திருக்கிறார்கள். அங்கு வாழும் சுரேகா என்ற 13 வயது சிறுமி தன் பள்ளிப்படிப்பைக் கைவிட்டு இரண்டு வருடங்களாகின்றது. சுரேகாவின் தாயார் மஞ்சுளா சொல்கிறார் “நாங்களும் ஊரிலே நல்லாத்தான் இருந்தனாங்கள்.... இடம்பெயர்வோட எங்கட வாழ்க்கை சீரழிஞ்சு போச்சு.... என்ர கணவர் கொடுத்த கடனைக் கேட்கப் போன இடத்தில அவரை வெட்டிப் போட்டார்கள். 30 இற்கு மேல காயம். இப்ப எழும்பி நடமாட முடியாமல் இருக்கிறார். இப்ப நான் தோட்ட வேலைக்கு போய்த்தான் சீவியம் நடக்குது. ஒரு பிள்ளையை ஏழாலை சைவ இல்லத்தில விட்டுப் படிப்பிக்கிறன். இவாவையும் படிப்பிக்க ஆசைதான் ஆனால் முடியவில்லை. எல்லாம் எங்கட காலம்” என்று வேதனையோடு தெரிவித்தார் அந்தத் தாய்.

சுன்னாகம் நகரில் ஒரு மோட்டார் வாகனம், திருத்தும் நிலையத்தில் சுமார்



13 வயது மதிக்கத்தக்க அந்தச் சிறுவன் ஒரு மிகச் சிறந்த இயந்திரத் திருத்துனராக உருவாகி வருகின்றான்.. காலையில பாடசாலை முடிந்தவுடன் இயந்திரம் திருத்தும் தொழில். சுறுசுறுப்பாகவே இயங்கும் இந்தச் சின்ன மனிதன் தனது அடிப்படை உரிமைகளில் ஏதேனும் ஒன்றை இழந்து விட்டானா? அல்லது தன் வாழ்வுரிமைக்காக நம்பிக்கையுடன் போராடுகின்றானா? விடையை நீங்களே காணுங்கள்.

## அழுக்குத் துணி... அச்சம் விலகாத கண்கள்... ஏக்கம் தேங்கிய முகம்...

சமீபத்தில் சிறுவர் உரிமை அமைப்பைச்சேர்ந்த ஒரு வெளிநாட்டுஉயரதிகாரி கருத்தரங்கொன்றில், 3 வயதைக் கடந்த பெண்பிள்ளையுடன் தந்தை படுக்கக் கூடாது. அது பாலுணர்வு தூண்டலுக்கு வழிவகுக்கும் என்று சிறுவர் உரிமையின் ஓர் உயர்ந்தபட்ச நிலைமை பற்றி எடுத்துக்கூறினார். பசியினால் உணர்வு மரத்துப்போன குழந்தைகளை அவர் குடாநாட்டில் காணவில்லைப் போலும். அகதி முகாம் கூட தார் போட்ட வீதியில் இருந்தால்தான் அவர்களின் வாகனம் தரிக்கும். பற்றைகள் சூழ்ந்த பாதைக்குள் 'பஜ்ரோ' எப்படிப் போகும்? மண் வீட்டு வாசலை அறியாத மனிதருக்கு எங்கள் மண்ணின் வாசனை எப்படிப் புரியும்?

பஞ்சு மெத்தையில் புரளும் பாலகியை பற்றிச் சிந்திக்கும் அவருக்கு ஓட்டை வீட்டின் உள்ளே விழும் மழைத் துளியில் தன் மகளைக் காக்கத் தன்னை போர்வையாய்ப் போர்த்திருக்கும் தந்தையின் கண்ணீரைப் பற்றி எங்கே தெரியப் போகிறது.

அதை விடுங்கள் சிறுவர் உரிமை, சிறுவர் பேணல் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் உள்ள ஓர் உயர் அமைப்பின் நிர்வாகிகள் இந்த ஏழைச் சிறுவர்களுக்கான பணத்தில் லட்ச லட்சமாகச் சுருட்டியது இணையத் தளமொன்றில் சமீபத்தில் அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஏழாலைப் பகுதியில் உள்ள பாடசாலையொன்றில் கல்வி கற்கும் சரண்யாவுக்கு 12 வயது படிப்பில் படுசுட்டி. படித்து நீங்கள் சாதிக்க வேண்டும் என்பதே இவளது தாய் அடிக்கடி கூறும் பொன்மொழி. ஆனால் இவள் தன் 4 வயதில் இடம்பெயர்வின் போது தன் தந்தையை விபத்தில் பறிகொடுத்தாள். 5 வயதில் அண்ணன் கண்ணிவெடிக்குப் பலியானான். இப்போது இவளது 3 சகோதரிகள் தாய் உட்பட 5 பெண்களும் ஆதரவின்றி அலை மோதுகிறார்கள். நிவாரணமும் நின்று போனது. இனிச் சாப்பாட்டுக்கு என்ன செய்ய போறியள்? எப்படிபடிப்பியள்? என்று கேட்டால் மௌனம் மட்டுமே பதிலாக இருக்கிறது.

பிள்ளை வளர்க்கத் தெரியவில்லை என்று கூறும் வெளிநாட்டு பிரமுகர்களே....! இந்தப் பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக என்ன செய்யப் போகிறீர்கள்? உங்கள் ஏஜென்டுகள் இங்கே ஊழல் செய்த பின்பும் அவர்களுக்கு உயர் பதவி கொடுத்து உத்தியோகத்தில் வைத்திருக்கிறீர்களே ஏன்?

யாழ்ப்பாணப் பட்டணத்தில் நீங்கள் வாகனத்தில் பவனி வரும் போது பார்க்கின்ற காட்சிகள்தான் எங்கள் மண்ணின் இன்றைய நிலை என்று எண்ணிவிடாதீர்கள். பத்து வயதில் பிறிஸ்ரலுடனும் பதினான்கு வயதில் போத்தலுடனும், பதினெட்டு வயதில் 'ஹீரோ ஹொண்டா'வுடனும் வலம் வரும் இளைஞர்கள் மாத்திரம் இம் மண்ணின் மைந்தரல்ல. பசியுடனும் பள்ளிக்கூடம் போகிறாளே! பள்ளிக்கூடம் போகாமல் குடும்பப் பாரம் சுமக்கிறானே! அவனும் எங்கள் பிள்ளைதான் ஊருக்குள் வாருங்கள் உண்மை தெரியும். சேற்று மண்ணில் நீங்கள் காலை வைத்துத் தேடினால்தான் சோற்றுக்காய் போராடும் எங்கள் பிஞ்சுகளின் சோகம் புரியும்.

எனது ஆசிரிய நண்பரொருவர் அண்மையில் கூறினார். என் பள்ளியில் காலையில் வீதியில் சென்று இடியப்பம் விற்றுவிட்டு பாடசாலைக்கு வரும் பிள்ளை இருக்கிறாள். பாடசாலை விட்டு சென்று தோட்டவேலை செய்து சம்பளம் பெறும் பையன் படிக்கிறான்.

கல்லூரிகளைப் பார்த்துக் கணக்குப் போட முடியாது. பட்டணத்துப் பள்ளிகளில் மட்டும் கணனிகளைப் பொருத்தி அழகு பார்க்கும் கனவான்களே! நாளும் பொழுதும் போராடிக்கற்கும் எங்கள் ஓலைக் குடிசை வாழ் ஏழைப் பிள்ளைகளுக்காக இரங்குவீர், சிறுவர் உரிமைக்காக நீர் உரத்துப் பேசுவதைக் காட்டிலும் உரிமைக்காக ஏங்கும் பிள்ளைகளிடம் கற்று உறவாட



விளைந்து பாரும் வேதனை புரியும். வேதனை தீர்க்க, சோதனை தீர்க்க வருகின்ற எல்லோரும். சப்பாத்துக் கால்களில் தூசி படாது தேடினால் என்ன கிடைக்கும். அர்ப்பணிப்புணர்வு வார்த்தையில் அல்ல செயலில் வேண்டும். புழுதியில் கிடக்கும் எங்கள் வீணைகளுக்கு மீட்சியில்லையா? விளையும் பயிர்களுக்கு வாழும் விதியில்லையா? சிறுவர்களுக்காகச் சேமிப்போமெனக் கூறிக் கொண்டு உங்கள் கணக்குகளில் சேமித்துக் கொண்டிருக்கும் மனிதர்களே மனித நேயம் உங்கள் மனதிலிருந்தால் சிந்தியுங்கள் செயற்படுங்கள். மானுடம் வெல்லட்டும், வெல்லும் வரை இந்த அவலங்கள் அழியாது!

கட்டுரை - படங்கள்:
**ஆர். மார்க் அன்ரனி**

ஸ்கிறீன் பிறிண்ரிங் SCREEN PRINTING
* திருமண அழைப்பிதழ்
* விசிற்றிங் காட்
* ரீ-சேட்கள்
* CD க்கள்
* பொலித்தீன் பைகள்
* பிளாஸ்ரிக் பொருள்கள்
* துணி வகைகள்
* உலோகத் தகடுகள்
ஸ்கிறீன் பிறிண்ரிங் வேலைகள் நேர்த்தியாகவும் குறித்த நேரத்திலும் செய்து கொடுக்கப்படும்
அருண் பிறிண்டேர்ஸ்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(உதயன் பணிமனை வளாகத்துக்கு அருகில்)

# பூக்கள் அழுகின்றன

சாலையில் சவ ஊர்வலம் சென்றுகொண்டிருந்தது.

சவம் பூக்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

வழியெல்லாம் பூக்களைத் தூவிக் கொண்டே சென்றார்கள்.

விசாரித்ததில் தெரிந்தது.

அது ஒரு விதவையின் பிணம்.

எனக்கு அப்போதே ஒரு ஹைகூ தோன்றியது.

*அவளுக்குத்தான் இப்போது*
*எத்தனை பூக்கள்*
*விதவையின் பிணம்*

இந்த சமூகம்தான் எவ்வளவு முரண்பாடாக நடந்து கொள்கிறது.

உயிரோடிருந்தபோது அவளுக்கு பூக்களை மறுத்த சமூகம் அவள் செத்த பிறகு ஏன் பூக்களால் அலங்கரிக்கிறது?

ட்ரூமன் கப்போட் எழுதிய அந்த ஏக்க வாக்கியம் நினைவுக்கு வந்தது.

*"நான் உயிரோடிருக்கும் போது பூக்களைத் தரமாட்டீர்களா?"*

பூக்களைப் பற்றிய வாக்கியம். ஆனால் முள்ளைப் போலத் தைக்கும் வாக்கியம்.

விதவையின் பிணம் மட்டுமா இப்படிக் கேட்கும்?

சமூகத்தில், சட்டங்களால், சம்பிரதாயங்களால் சித்திரவதைபட்டுச் செத்த ஒவ்வொரு மனிதனும் இப்படிக் கேட்பான்.

பூ என்பது மகிழ்ச்சியின் குறியீடு. அன்பின் குறியீடு. வாழ்க்கையின் குறியீடு.

உயிரோடிருக்கும் போது ஒருவனை நிம்மதியாக வாழ விடாமல் அவன் பாதையெல்லாம் முட்களைப் பரப்பி வைத்துவிட்டு அவன் செத்த பிறகு அவனைப் பூக்களால் அலங்கரிப்பது போன்ற முட்டாள்த் தனம் வேறெதுவும் இருக்க முடியுமா?

வரதட்சணைக் கொடுமையால் மணமாலை சூட முடியாதவள் ஏங்கியே சாகிறாள்.

அவள் பிணத்திற்கு மாலை சூட்டப்படுகிறது. அவளை மரணத்திற்கு மணம் செய்து வைக்கிறார்களா?

வீட்டுக்கு வந்த மருமகள் விளக்கை எரித்தாள்.

வீட்டுக்காரர்களுக்கு வெளிச்சம் கிடைக்கவில்லை.

அடுப்பை எரித்தாள். வீட்டுக்காரர்களுக்குப் பசி தணியவில்லை.

அவளே எரிந்தாள். வீட்டுக்காரர்களுக்கு வெளிச்சமும் கிடைத்தது; பசியும் தணிந்தது.

அவளுக்கு நெருப்பு வைத்தவர்களே அவள் பிணத்தின் மேல் பூக்கள் தூவுகிறார்கள்.

வறுமையால் வாடிச்சாகிறான் ஒருவன்; உயிரோடிருந்தபோது அவன் வாழ உதவாத சமூகம் செத்த பிறகு அவனுக்கு மலர்களைத் தருகிறது.

உரிமை கேட்டுப் போராடியவர்களைக் குண்டுகளால் துளைத்தவர்கள், அவர்கள் சவங்களுக்கு மலர் மரியாதை செய்கிறார்கள்.

உயிரோடிருந்தபோது முள்மகுடம் சூடி, வாழ்க்கையையே சிலுவையாய் சுமந்தவர்கள், சிலுவையறைப்பட்ட பிறகு, பூக்களைப் பெற்று என்ன செய்யப்போகிறார்கள்?

பூமியின் கொப்புளங்களாய் புடைத்து நிற்கும் சமாதிகள் கேட்கின்றன.

மதக் கலவரங்களால் அப்பாவி மனித ரத்தத்தால் நனைந்த பூமி கேட்கிறது.

போர் வெறியர்களால் சாம்பல் மேடாகிப் போன ஊர்கள் கேட்கின்றன.

ஹிரோஷிமா கேட்கிறது, நாகசாகி கேட்கிறது, வியட்நாம் கேட்கிறது.

ஜாலியன் வாலா பாக் கேட்கிறது. போபால் கேட்கிறது. தெலுங்கானா கேட்கிறது. நவகாளி கேட்கிறது. ஈழம் கேட்கிறது. மும்பாய் கேட்கிறது. பூக்களே கேட்கின்றன.

*"இவர்கள் உயிரோடிருக்கும் போது பூக்களைத் தரமாட்டீர்களா?"*

போர் வெறி பிடித்த அரசியல் பீடங்களைப் பார்த்துக் கேட்கிறார்கள். மதங்களைக் கேட்கிறார்கள். சட்டங்களைக் கேட்கிறார்கள். சாதிகளைக் கேட்கிறார்கள். கட்சிகளைக் கேட்கிறார்கள். சமூகத்தைக் கேட்கிறார்கள்.

*"நாங்கள் உயிரோடிருக்கும்போது பூக்களைத் தரமாட்டீர்களா?"*

**- அப்துல் ரகுமான் .**
நன்றி: பூப்படைந்த சப்தம்

# நவீன தொழில்நுட்பத்தை நாடும் தற்கால 'முடிச்சு மாறிகள்'

**பொது** இடங்களில், சனங்கள் கூடும் இடங்களில், சினிமாத்தியேட்டர்களில், பஸ்களில் எல்லாம் 'பொக்கெட்' அடிப்பவர்கள் நடமாடுவது 'சகஜம்'.

ஒரு காலத்தில் சட்டைப்பைகளில் வைத்திருக்கும் 'பேர்ஸ்'களை 'அபேஸ்' செய்து வந்தவர்கள் பின்னர் பெறுமதியான பேனைகளையும் மிக எளிதாக 'பிக்' செய்து வந்தார்கள்.

அந்தக் காலத்தில் ஜப்பான் தயாரிப்பான பைலட், இங்கிலிஷ் தயாரிப்பான சுவான், பின்னர் பாக்கர் பேனைகள், விலை கூடியவையாகவும் எல்லோராலும் விரும்பிப் பாவிக்கப்பட்டவையாகவும் இருந்தன.

இவைகளை 'பிக்' செய்பவர்கள் வேறு இடங்களில் அவைகளைக் கூடிய விலைக்கு விற்றுப் பணம் பெற்றுக்கொள்வார்கள்.

ஓடிக்கொண்டிருக்கும் பஸ்ஸிலேயே மிக நாசுக்காக பேனை அல்லது பணப்பையை அடித்துக்கொண்டு மாறிவிடுபவர்கள் உண்டு. இவர்கள் பெரும்பாலும் ஒரு குழுவாகவே செயற்படுவார்கள். ஒருவர் திருடினால் அப்பொருள் மற்றவருக்கு உடனடியாகவே கைமாறிவிடும். யார் திருடினார் என்பதைக் கண்டுபிடிக்கவே முடியாது. அந்த அளவுக்கு கைதேர்ந்தவர்களாய் இருப்பார்கள்.

## சத்தமும் — சந்தடியும்

இம்மாதிரி முடிச்சு மாறிகள் கொழும்பில்தான் அதிகம் அந்தக்காலத்தில்.

மருதானையில் இருந்து பஸ்ஸில் புறக்கோட்டைக்கு போய்க்கொண்டிருந்தேன திடீரென "ஐயோ எனது பேர்ஸைத் திருடிவிட்டார்கள்" என்று ஒரு பிரயாணி அவலமாகக கத்தினார்.

நடத்துநர் உடனடியாக பஸ்ஸை பொலீஸ் நிலையத்திற்கு திருப்பும்படி ஓட்டுநரிடம் கூறினார். பிரயாணிகள் எவரும் இருநத இடத்தை விட்டு நகரவில்லை. ஆனால் முன்வாசல் கதவருகில நின்ற ஒருவன் ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸில் இருந்து மிக இலாவகமாக இறங்கிவிட்டான். 'அதோ ஓடுகின்றான்' என்று ஒருவர் குரல் கொடுத்த அதேசமயம் வாகனங்கள் நெரிசலாக ஓடிக்கொண்டிருந்த அநதத தெருவின் குறுக்கே நடந்து அடுத்த கரைக்கு நழுவி ஒரு சந்து வழியாக புகுந்து அவன் போய்ச் சேர்ந்துவிட்டான்.

பேர்ஸைப் பறிகொடுத்தவர் நின்ற இடத்திலிருந்து எவரும் நகராத நிலையில் முன்வாசலில் நின்றவனுக்கு எவ்வாறு பணப்பை போய்ச்சேர்ந்தது என்பது மர்மம்தான். என்றாலும் பொலீஸ் நிலையத்துக்கு பஸ்போய் நின்றதும நடந்ததை நடத்துநா, அவர்களிடம் எடுததுக் கூறினார். இதுபற்றி நனகு பரிச்சயமான பொலீஸ்காரர்கள் உடனடியாகவே பஸ்ஸிலிருந்த வேறு மூன்று பேரைக் கைதுசெய்தார்கள்.

"இவர்கள் எல்லாம் ஒரு கம்பனி" என்று பொலீஸ்காரர் ஒருவர் கூறினார். பிடிபட்டவர்கள் மூலமாகத் தப்பி ஓடிய திருடன் பிடிபட்டானோ தெரியாது.

இப்போதெல்லாம் பிரயாணிகள் மிகவும் கவனமாக இருக்கிறார்கள். அதனால பொக்கெட் அடிப்பது குறைந்துவிட்டது.

ஆனால், பிரயாணப்பைகளை அறுத்துத் திருடுவது அல்லது பறித்துக்கொண்டு ஓடுவது போன்ற சம்பவங்கள் நடைபெறததான் செய்கின்றன பேனைகளைத் திருடுவது குறைந்து போனாலும் வேறு புதிய பொருள்களைத் திருடுகின்ற புதிய 'பிக்பொக்கெட்' காரர்கள் தோன்றியிருக்கிறார்கள். நவீன தொழில்நுட்பம் வளர்ச்சியுற்றிருப்பது போல இவர்களும் தமது தொழில்களில் புதிய நுட்பங்களைக் கையாளுகின்றார்கள். அவர்கள் பிரயாணிகளின் கையடக்க ரெலிபோன்கள், கமராக்கள் போன்ற பொருள்களின் மீது கண் வைக்கிறார்கள்.

இம்மாதிரியான பொருள்களுடன் பிரயாணங்களில் ஈடுபடுபவர்கள் கவனமாக இருந்து கொள்வது நல்லது.

### திருவிழா. வர்ணனை

கொழும்பில் இருந்து ஒருவர் எழுதியுள்ள கடிதத்தின் சாரமிது -

வடபகுதியில் புகழ்மிக்க கோயில் ஒன்றில் சிலவாரங்களுக்கு முன்னர் வருடாந்த தேர்த் திருவிழா நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தேர்த்திருவிழாக் காண வந்திருந்தார்கள். தேர்த்திருவிழா வர்ணனையையும், அறிவிப்புகளையும் செய்ய அத்துறையில் தகுதிவாய்ந்த ஒருவர் நியமிக்கப்படாமல் பரிபாலன சபையைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். அவர் தனக்கு நன்கு பழக்கமான ஒரு பாடலைப் பிழையாகப் பாடியதும் அல்லாமல் அதையே பல முறை திரும்பத்திரும்ப ராகலயமின்றி பாடிக் கொண்டிருந்தார்; அறிவிப்புகளையும் அவரே செய்தார். தேர்த்திருவிழாவின்போது சிறந்த வர்ணனையை வழங்கக்கூடிய பலர் இருந்த போதிலும் இவர் ஒலிபெருக்கியைத் தன்வசம் வைத்துக் கொண்டதால் சிறப்பாகச் செய்யவேண்டிய வர்ணனை சோபை இழந்திருந்தது. மறுநாள் தீர்த்தத் திருவிழாவிலும் அவர் ஒலிபெருக்கியைக் கைவிடவில்லை.

மேலும் சுவாமி தேரில் வலம் வரும்போது குருக்கள், உதவியாளர் தவிர 15 இற்கும் மேற்பட்டவர்கள் தேரில் இருந்தார்கள். அடியார்கள் யாரைத் தேரில் இழுக்கின்றோம் என்று ஆதங்கப்பட்டார்கள். உள் அன்போடு இறைவனைக் காண வந்த பக்தர்களை இந்த மனிதர்களின் செயல் வெறுப்பை ஏற்படுத்துவதாய் இருந்தது எத்தனையோ கல்விமான்கள் இருந்தும் இவற்றைத் தடுகக நடவடிக்கை எடுக்காமல இருபபது அக்கோயிலின் பரிபாலன சபையாரின் கவனயீனம் அல்லவா என்று எழுதியுள்ளார் அவர்.

### ஓய்வூதியரின் பிரலாபம்

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த ஓயவூதியம் பெறும் வி.எஸ்.தங்கராஜா என்னும் அன்பர் பின்வரும் கடிதத்தை அனுப்பியுள்ளார்

இவ்வாண்டு ஜனவரி முதலாம திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சிவில் ஓயவூதியம் பெறுவோரின் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மாற்றியமைக்கப்பட்டு அவவப் பிரதேச செயலகளினால் இம்மாத ஓயவூதியக் கொடுப்பனவுகள் மாற்றியமைக்கப்பட்ட சில பிரதேச செயலாகளினால் இம்மாத ஓய்வூதியச் கொடுப்பனவுடன் சேர்த்து ஜனவரி - ஓகஸ்ட் 2004 காலப் பகுதிக்கான ஓய்வூதிய நிலவைகளும் வழங்கப்பட்டுள்ளன. ஆயினும் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களின் பிரகாரம் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் இருந்து ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஓய்வூதிய உறுதிச் சீட்டுடன் ஓய்வூதிய மாற்றியமைப்புக்கான விவரங்கள் கொண்ட கடிதமொன்றும் தனித்தனியாக விலாசமிடப்பட்டு இணைக்கப்பட்டிருந்தன. இதன் மூலம் சம்பந்தப்பட்ட ஓய்வூதியர்கள் தமக்கான ஓய்வூதியம் மாற்றியமைக்கபபட்ட விதம் சரியானதுதானா என்பதனை உறுதிப்படுத்திக்கொள்ள முடிந்தது.

ஆனால், எனது ஓய்வூதியத்தை வழங்கும் கோபபாய் பிரதேச செயலகம் வெறுமனே ஒரு தொகையை ஓய்வூதியத்துடன் சேர்த்து வழங்கியதுடன் ஜனவரி 2004 - ஓகஸ்ட் 2004 இடைப்பட்ட காலப்பகுதிக்கான ஓய்வூதிய நிலவையை மாத்திரம் வங்கிக் கணக்கிற்கு அனுப்பி வைத்துள்ளதே அன்றி இவவதிகரிப்பு கணக்கிடபபட்ட விதம குறித்து எதுவித ஆவணத்தையும் அனுப்பிவைக்கவில்லை. எனது ஓய்வூதியம் மாற்றியமைக்கபபட்ட விதத்தில் தவறு ஏற்பட்டிருப்பதாகக கருதிய நான் இது குறித்து கடந்த 13.09.2004 திகதியன்று கோப்பாய் பிரதேச செயலருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் பிரதியையும தங்களது பார்வைக்கு இத்துடன் இணைததுள்ளேன் இக்கடிதத்தை எழுதும் எனக்கு இற்றைவரை இதுதொடர்பாக கோப்பாய் பிரதேச செயலகத்திலிருந்து எவ்வித பதிலும் கிட்டவில்லை. இப்போது எனது நிலைமை 'சிதம்பர சக்கரததைப பேய் பார்த்தது போன்று' என்பர்களே, அத்தகைய நிலை. முதற்கட்ட ஓய்வூதிய மாற்றியமைத்தல் தொடர்பாக இத்தகைய சந்தேகங்களும், திருப்தியின்மையும் ஏற்படும் வகையில நடவடிககைகள் இடம பெற்றிருப்பதால் இனிமேல் தொடர்ந்து தமது ஓய்வூதிய மாற்றியமைததலுக்காகக காத்திருக்கும் ஏனைய ஓய்வூதியர்களுக்கும் இத்தகைய சிரமம் ஏறபடக்கூடாதென்பதறகாக இவ்விடயத்தை உரிய வகையில் தங்களது பத்திரிகை மூலம் வெளிக்கொணருமாறு தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறேன். என்றிருக்கிறது அக்கடிதம். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுப்பார்கள் என்று எதிர்பார்ப்போம்.

## சுற்றாடலை மாசுபடுத்தும் ஒலிபெருக்கி ஓசை

### ஒலிபெருக்கி ஓசை

திருவிழாக்கள். ஊர்வலங்கள், கலியாண வீடுகள், ஏன் [illegible] நீராடடு விழாக்களிலும் கூட 'ஸ்பீக்கா' வைப்பது ஒருகாலத்தில் ஒரு பாஷன் எனறு கருதபபட்டது. ஆனால், இன்று அதுவே சர்வசாதாரணமாகிவிட்டது. ஏன் காலப் போக்கில் ஒரு பாரம்பரியமாகவே மாறிவிடும் போல இருக்கின்றது.

பொது நிகழ்வுகளில் ஒலிபெருக்கி வைப்பதும் அதனைப் பொதுமக்கள் தெளிவாகக் கேட்கச் செய்வதும் சரிதான். அதற்கும் ஒரு எல்லை அல்லது வரையறை இருக்க வேண்டும் அல்லவா?

சுற்றாடல் முழுமையையுமே ஒலிபெருக்கி ஓசையினால் மாசுபடுத்துவது நியாயமில்லை. சுற்றாடலை மாசுபடுத்தும் விடயங்களில் ஒலியும் ஒன்றுதான் இதையாரும் உணர்கின்றார்கள் இல்லை.

ஒரு பகுதியில் பல கோயில்கள் இருந்து பல கோயில்களிலும் திருவிழாக்கள் என்றால் எப்படி இருக்கும் பாருஙகள். போட்டிபோட்டுக் கொண்டு ஒலிபெருக்கியில் பாட்டுபோடுவார்கள். அந்தப் பகுதி முழுமையுமே சில நாள்களுக்கு ஒரே இரைச்சல் மயம்தான்.

நோயாளிகள், சிறுகுழந்தைகள் ஏன் பொது

**நந்தன் எழுதுவது**

வாக எல்லோருமே இந்தச் சத்தங்களால் பாதிக்கப்படுவார்கள்.

குறிப்பிட்ட பரிமாணத்தில், குறிப்பிட்ட பகுதிக்கு மட்டும், குறிப்பிட்ட கால அளவில ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தும் படியான ஒரு ஏற்பாடு இருக்குமானால் இந்த ஒலியினால் சுற்றாடல் மாசடைவதைத் தடுக்கலாம் அல்லவா?

இவ்வாறு செய்வதற்கு எந்தத் தரப்பினராலும் முடியாதென்றால் சத்தத்தால் மாசடைதலும், அதனால் மக்களுக்கு உண்டாகும் உபாதைகளும் தடுக்கவே முடியாதா?

### விலைப்பட்டியல்

இம்மாதம் பத்தொன்பதாம் திகதி வெளியான சத்தமும் சந்தடியும் பத்தியில் குடாநாட்டில் [illegible] கடைகளில் நிலவும் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டும் வகையில் சில விடயங்களை வெளிப்படுத்தி இருந்தோம்.

அதன் பொருட்டு அரியாலை கனகரத்தினம் வீதியில் உள்ள ஒரு கடை குறித்துப் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது. சம்பந்தப்பட்ட வீதியில் இரண்டு கடைகள் மட்டுமே உண்டு என்று குறிப்பிட்டு அவற்றின் சொந்தக்காரர்கள் ஆட்சேபம் தெரிவித்திருக்கிறார்கள்.

எமது பிரதிநிதி அந்தக் கடைகளுக்குச் சென்று கடந்த வாரம் அவதானித்தபோது - விசாரித்தபோது - எந்தக் குறைபாடுகளையும் காணமுடியவில்லை. ஆனால், சில முன்னேற்றங்கள் இருப்பதாக அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டினர்.


வாசகர் சுட்டிக்காட்டிய குறைகள் [illegible] மற்றவை என அறியவந்துள்ளது.

யாழ்.நகரில் உள்ள கடைகளில் பல குறைபாடுகள் இருப்பதால் பொதுமக்கள் நலன்கருதி வெளிப்படுத்துவதே எமது நோக்கமாக இருநதது. எவரையும் புண்படுத்துவதோ பாதிப்படையச் செய்வதோ எமது நோக்கமல்ல.

# மசகு எண்ணெய்க்கு மவுசு குறைகிறதா?

எரிபொருள் விலையேற்றம் உலகினைக் கலங்கடித்து வருகிறது. ஆனாலும் எந்தக் கவலையுமில்லாமல் இரண்டு செக்கன்களுக்கு ஒரு கார் உலகினில் புதிதாய்ப் பிறக்கிறது. உலகின் எரிபொருள் கையிருப்பு இந்த வேகத்துக்கு ஈடுகொடுக்குமா? வாகன உற்பத்தியாளர்களுக்கோ அமோக லாபம் கிடைக்கிறது. பணம் பண்ணினால் சரி என்கின்ற நிலைமை. எனவே, வீதிகளில் இடநெருக்கடி, எரிபொருள் விலையேற்றம், சுற்றுச் சூழல் மாசுபடுதல், உலகின் எரிபொருள் கையிருப்பு என்றெல்லாம் நீண்ட காலப் பிரச்சினைகள் பற்றிய கவலைகள் அவர்களுக்கு பெரிதும் கிடையாது.

வாகனங்களுக்கு மட்டும்தானா எரிபொருள்? இருபத்திநான்கு மணிநேரமும் ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் இயங்குகின்ற மின்பிறப்பாக்கிகள், தொழிற்சாலைகள் எனப் பலவும் கணக்கில் அடங்காதவை. அப்படியானால் இந்த எரிபொருள எவ்வளவு காலம் வற்றாமல் கிடைக்கும்? அது தீர்ந்துபோனால் உலகமே முடங்கிவிடும் பேராபத்து இருக்கிறது. அது தாராளமாக இருந்தால் ஏன் இந்த விலையேற்றம்? ஒருவேளை எரிபொருள் தீரும் நிலை வந்தால் மாற்றுவழி என்ன என்ற சிந்தனை தீவிரமடைகிறதா?



இன்னும் நிறைய நாடுகள் முன்னேறவில்லை. முன்னேறத் துடிக்கின்ற நாடுகளோ ஏராளம். சீனாவும் இந்தியாவும் இன்னமும் சரிவர வாகனங்களில் ஏறவில்லை. அமெரிக்காவில் 1000 பேரிடம் 950 கார்கள் இருக்கின்றன என்றால் சீனாவில் 1000 பேரிடம் எட்டுக் கார்களே தற்சமயம் உள்ளன. சீனாவும் இந்தியாவும் மேற்கு நாடுகளைப்போல முன்னேறும் தருணம் வரும்போது எரிபொருள் தட்டுப்பாடு தலைவிரித்தாடவே செய்யும். இப்போதே எரிபொருள் இறக்குமதியில் சீனா இரண்டாம் இடம் வகிக்கிறது.

கார் உற்பத்தியாளர்கள் எரிபொருளை சிக்கனமாக பாவிக்கும் வகையில் இயந்திரங்களை வடிவமைத்து வந்திருக்கிறார்கள். எனினும், 'ஹென்றி போட்'டின் 1908 ஆம் ஆண்டின் கண்டுபிடிப்பான T மொடல் காரின் அடிப்படை இயந்திர வடிவமைப்பே இன்றும் பின்பற்றப்படுகிறது. ஒரு பீப்பா மசகு எண்ணெயின் விலை 50 டொலர்களை எட்டியதால் திணறுகிறவர்கள் – விரைவில் ஒரு கலன் எரிபொருள் 3 டொலராக உயரும்போது வாகனங்களை உருளவிட மாட்டார்களா?

விலையேற்றத்தை சமாளிக்க எரிபொருளை மிகமிகச் சிக்கனமாகப் பயன்படுத்தும் தொழில்நுட்ப வழிமுறைகளை உலகம் ஆராய்ந்து கொண்டிருக்கிறது. எரிபொருளுக்கு மாற்றுவழி – சக்தி – ஒன்றைக் கண்டுபிடித்தாக வேண்டும் என கின்ற துடிப்பும் விஞ்ஞான உலகினில் இருக்கிறது. மத்திய கிழக்கு நாடுகளின் கொட்டத்தை அடக்குவதற்காவது மாற்று வழிதேட மேற்குலகம் முனைகிறது.

நீர் மின்சாரம், காற்றாலை, சூரிய சக்தி எனப் பல இலவச வடிவங்களில் சக்தி கிடைத்தாலும் அவற்றை தேவையான வடிவத்திற்கு மாற்றியமைத்து தேவையான இடங்களுக்கு எடுத்துச் சென்று பயன்படுத்துவதில் சிக்கல்கள் அதிகம் உண்டு. எனினும் இயன்ற இடமெல்லாம் இவற்றை பயன்படுத்த பெரும் தொழில்நுட்ப முதலீடுகளைச் செய்தால் எரிபொருள்செலவை ஓரளவுக்கு மீதப்படுத்தலாம். அத்தோடு சூழல் மாசடைதலையும் இத்தகைய சக்திகள் கணிசமாகக் குறைக்கும். அதற்காக பாய்மரக் கப்பலை வாங்கச் சொல்லியோ, மாட்டு வண்டிலில் பயணம் போகச் சொல்லியோ யாருக்கும் அறிவுரை கூற முடியாது. சுற்றுப்புறச் சூழல் மாசடைதலைப் பற்றி எவருக்குமே கவலை இருப்பதாகத் தெரியவில்லை.

## நவீன சிந்தனையாளர்கள்

எமக்கு மத்தியிலும் பல நவீன சிந்தனையாளர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களின் சிந்தனைக்கு இடமளிக்க சமுதாயம் தயாராக வேண்டும்.


நான் ஓர் அரைக்கும் ஆலைக்கு மிளகாய் தூள் திரிக்கச் சென்றிருந்தேன். பொலித்தீன் பையில் மிளகாய் கொண்டுவர வேண்டாம் என்ற அறிவிப்புப் பலகை தொங்கியது எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. திடீரென பையை மாற்றவும் வழியில்லை. ஆலை உரிமையாளர் என்னிடம் மிளகாயை வாங்கும்போது ஒரு விரிவுரையே நிகழ்த்திவிட்டார். தம்பி பேப்பர் படிக்கிறதில்லையா? பொலித்தீன் பையால் எவ்வளவு சுகாதாரக்கேடு அது இது என்று அவர் சொன்னதெல்லாம் நிறையவே பாராட்டப்பட வேண்டிய விடயங்கள். இப்படிச் சிந்திக்கிற மனிதர்கள் இன்னமும் நிறையவே எம் மத்தியில் உருவாக வேண்டும். என்றாலும் தொழில் ஸ்தானத்தில் இந்தக் காலத்தில் இந்தச் சட்டம் பொருத்தமானதா என நான் சிந்தித்துக் கொண்டிருக்கும்போதே அவர் எனது சிந்தனையைக் கலைத்தார். தம்பி இந்தச் சூழல் பாதுகாப்பு பற்றியெல்லாம் எனக்கு பிரச்சினை கிடையாது. இந்தப் பொலித்தீன் பையிலை மிளகாய்த் தூளைப் போடப் படுகிறபாடு இருக்கே அது போதும். அதைப் பிரிச்சுப் பிடிக்க ஓர் ஆள் சம்பளத்துக்கு வைக்க வேணும். உங்களுக்கு தூளும் வாசம் கெட்டுப்போம்." என்றெல்லாம் உண்மையை ஒப்புக் கொண்ட மனுஷனை மேலும் ஒருபடி பாராட்டாமல் இருக்க இயலவில்லை.

யாழ்ப்பாணத்தில் மின்சாரமே இல்லாத யுத்த காலகட்டத்தில் வடமராட்சியில் ஒரு பிரமாண்டமான காற்றாடியைத் தனது வீட்டில் அமைத்துத் தண்ணீர் இறைத்தும் அயலுக்கெல்லாம் DC மின் வழங்கியும் பற்றரிகள் சார்ஜ் பண்ணியும் சாதனை புரிந்த – முன்மாதிரியாக திகழ்ந்த ஒரு நண்பரை நான் அறிவேன். சும்மா சுழலும் காற்றாடியிலிருந்து கிடைக்கும் முழு சக்தியையும் பயன்படுத்த வழியின்றி அவர் திணறியதும் உண்டு. காற்று வீசட்டும் என்று காத்திருந்ததும் உண்டு. அவருடைய காற்றாடி செயலிழந்தபோது எனக்கும் சோகமாகத்தான் இருந்தது.

மேற்குலகம் சக்திக்கு மாற்றுவழி தீவிரமாகத் தேடிக் கொண்டிருக்கிறது. சீன அரசு பெருமளவு நிதியை ஆராய்ச்சிக்கு ஒதுக்கி ஓரளவுக்கு வெற்றியும் கண்டு கொண்டிருக்கிறது. எம்மிடம் என்ன வழி இருக்கிறது? அடுத்தவர்கள் தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்து ஆயிரக்கணக்கான டொலர்களுக்கு விற்கும்வரை காத்திராது நாமும் ஏதாவது கண்டுபிடிக்க முடியாதா? ஒரு பழைய நாடகத்தில் வெள்ளைக்காறன் ரயிலைக் கண்டுபிடிச்சான் பிளேனைக் கண்டுபிடிச்சான், நீங்கள் என்ன கண்டுபிடிச்சியள்? என்று கேட்க புட்டுக் குழலை யார் கண்டுபிடிச்சது, இடியப்ப உரலை அவனா கண்டுபிடிச்சான் எனப் பதில் தெறித்தது.

வீடுகளுக்கெல்லாம் AC லைன் இருப்பதுபோல் ஒரு DC லைனையும் ஏற்படுத்தினால் என்ன? AC கிடைக்காத இடங்களுக்கும் DC ஒரு வரப்பிரசாதமாக அமையும். அவரவர் தமது வீடுகளில் காற்றாடி, சோலர், சூரிய சக்தி போன்றவற்றைப் பயன்படுத்தி DC மின்னை சுலபமாகத் தயாரிக்கலாம். மேலதிக மின்சாரத்தை லைன் மூலம் விற்கலாம். பற்றாக்குறையை லைனிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு ஒரு ஸ்திரமான DC மின் கலாசாரத்தை உருவாக்கலாம். வல்லைவெளி முழுவதும் ஆயிரக் கணக்கான காற்றாடிகளை அமைத்தால் தாராளமாக மின்சக்தி கிடைக்கும் அல்லவா? மாரிகாலக் காற்றும் கோடை கால சூரிய ஒளியும் சிறந்த மாற்றீடுகள் தான். ஆனால் ஆரம்ப காலகட்டத்தில் முதலீடுகளும் அதிகம்தான். இத்தகைய ஆக்கபூர்வமான முதலீடுகளுக்கு கோவில்களில் மேலதிகமாக குழைத்துக் கொட்டும் கொங்கிரீட்டுக்கு வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்புகிறவர்கள் எவராவது முன்வருவார்களா? அல்லது அரசு நினைத்தால்தான் காரியம் ஆகுமா?

இப்படியான முயற்சிகளை முதலில் தொடங்க துணிச்சல் அதிகம் வேண்டும். சமுதாயம் பைத்தியம் என நினைக்கும். முதலீடு எடுத்த எடுப்பில் லாபகரமானதாக இருக்காது. இக்னேஷியோ வெல்லா என்கின்ற கலிபோனியர் தனது தொழிற்சாலைக் கூரையில் 235 சோலர் தட்டுக்களைப் பொருத்தியுள்ளார். இவை அவரது Cheese உற்பத்தி சாதனங்களையும் குளிரூட்டிகளையும் இயக்குகின்றன. மேலதிக மின்சாரம் வலையமைப்பிற்கு விற்கப்படுகிறது. இரண்டு இலட்சம் ஜப்பானியர்கள் வீடுகளில் முற்று முழுதாக சூரிய சக்தியே போதுமானதாக இருப்பது மட்டுமல்ல மேலதிக மின் விற்பனையால் வருமானமும் கிடைக்கிறது. 1997இல் ஒருவர் தனது வீட்டுக் கூரையை சோலர் பனல்களால் வேய்ந்தபோது 33 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் தேவைப்பட்டது. அவரது முயற்சியை ஊக்குவிக்க ஜப்பானிய அரசு மானியமாக 10 ஆயிரம் டொலர்களை வழங்கி இருந்தது. இன்று மின்சார விற்பனையால் அவருக்கு





கிடைக்கிற வருட வருமானம் 500 டொலர்களை எட்டுகிற

இந்திய கரும்பு ஆலை உரிமையாளர்கள் சீரற்ற ... விநியோகத்தால் திணறிப்போய் மாற்றுவழி கண்...ருக்கிறார்... கரும்பு ஆலைக் கழிவுகளிலிருந்து மின்சாரம் த...க்க அவர்... தொடங்கியிருக்கிறார்கள். இவ்வாறு கர்நாடக மற்... மகராஷ்டிர பிரதேசங்களில் ஆண்டொன்றிற்கு 500 மெகா... மின்சாரம் உற்பத்தியாகிறது. சில ஆண்டுகளில் இது 5...

## எரிபொருள் ...
## எதில் போ...

மெகாவற்றை எட்டப் போகிறது என்பது கரும்பைவிட இ... பான செய்தி.


உலகினில் ஓடித் திரியும் கணக்கில்லா வாகனங்க... பற்றரிகளில் சேமிக்கப்படும் மொத்த சக்தி அத்தனையும் அ... ஸ்ராட்டிற்கு அவசியமில்லை. இவற்றில் தேங்கிக் கிடக்... மேலதிக மொத்த சக்தியை ஒருங்கிணைத்தா... உலகின் ... சாரத் தேவையை விட மேலதிகமாகவே ... கிடைக்... என்கின்ற கணக்கு தப்பு ஆகாது. கணக்குக் காட்டுவது சுல... ஆனால் காரியத்தை செயற்படுத்துவது சாத்தியமாகாது ... சாடுகிறார்கள் மறு சாரார்.

ஒரு லீற்றர் எரிபொருளில் இருந்து கிடைகின்ற சக்தி... மாற்று வழியொன்றில் அவ்வளவு சுலபமாக பெற்று... முடியாது என்கின்ற உண்மை ஆராய்ச்சியாளர்களுக்கு ... டும்தான் தெரியும் என்றில்லை – அடுப்புக்குள் மண்ணெ... ணெய் ஊற்றிப் பற்றவைக்கும் ஆச்சிக்கும் தெரியும். வளவுக்... விழுந்து கிடக்கும் விறகை கறையான் பதம்பார்க்க – வி... போல விலையேறிவரும் காஸ் சிலிண்டருக்கு தவம் கிடக்... மனோபாவம் வெகுவாக வளர்ந்து வருகிறது. இயன்றவ... கிடைக்கும் சக்திகள் அனைத்தையும் பயன்படுத்தி ... தேவைக்கு மட்டும் எரிபொருளில் கையேந்தும் தொழில் நு... கார்களுக்குள் கூட புகுந்துவிடும் காலகட்டம் பிறந்து விட்... ஆனால் குசினிக்குள் புக மறுக்கிறது.

## TOYOTA PRIUS

உலகின் ஒரு முன்னணி கார் உற்பத்தி நிறுவன... TOYOTA தனது நவீன தொழில் நுட்பத்துடன் அறி... படுத்தியிருக்கும் கார்தான் Prius. இது எரிபொருளிலும் ... டாரிலும் இணைந்து இயங்கவல்லது. எரிபொருள் இயக்க... மட்டும் நம்பி கார் பயணிக்க வேண்டிய அவசியமில்ல... மோட்டார் இயக்கம் தோள் கொடுக்கிறது. இரண்டி... இடையில் தொழில் நுட்பம் புகுந்து விளையாடி மோட்ட... சக்தியை அதிகரிக்க அதிகரிக்க எரிபொருள் சிக்கனம் ... மடைந்து வருகிறது. தற்போது Prius இன் –லீற்ற... கிலோமீற்றர் தூரம் ஏனைய கார்களைவிட இரட்டி... விட்டது.

1993 முதல் பரீட்சிக்கப்பட்டு 1997 இல் ஜப்பா... அறிமுகமாகிய Prius தான் 1908இல் அறிமுகமாகிய 'ஹெ... போட்' டின் தொழில் நுட்பத்திலிருந்து சற்று வேறுபட்ட இய... அமைப்பு என்று கூறலாம். அமெரிக்காவில் பலரும் P... 2004 Model இற்கு மாறிவருகிறார்கள். இன்னும் 22 ... ரம்பேர் பணம் செலுத்திவிட்டுக் காத்திருக்கிறார்கள். அமெ... வில் இத்தகைய கார்களுக்கான கிராக்கி 5 ஆண்டு... ஆண்டுக்கு 500 ஆயிரம் ஆக அதிகரிக்கும் என எதிர்பா... படுகிறது. இது ஓர் ஆடம்பரமான சமாச்சாரம் என்றில்... அறிவியல் பூர்வமாக சிந்திப்பவர்கள் கொடுக்கும் விலை ... தான் இதனைச் சொல்ல வேண்டும். ஏனெனில் அக் கார்... விலையோ அதிகம். அந்த முதலீட்டை எரிபொருளில் சே... அதிககாலம் எடுக்கும். ஒன்றரை லட்சம் கிலோமீற்றர்... தாண்டியாக வேண்டும். உற்பத்தியாளர்களும்கூட இக் ... வத் தயாரிப்புகள் காருக்கு 3000 டொலர்கள் வரை கை... கடித்தாலும் கைவிடமாட்டாமல் தவிக்கிறார்கள். நாளடை... அதனை இலாபமான விலைக்கு வழங்க இயலும் எ... அவர்களது நம்பிக்கை.



# ...ள் விலையேற்றம் ...ாய் முடியும்...?

### சீன முயற்சிகள்

உலகெங்கும் சீனத் தயாரிப்புகளுக்கு மதிப்பு அதிகரித்து வருகிறது. மலிவாகப் பெருமளவில் பொருள்களைத் தரும் சீனத் தொழில் நுட்பம் வர்த்தகச் சந்தைக்கு ஒரு வரப்பிரசாதம் என்றே கூறலாம். 2011 இல் சீனாவின் கார்கள் உலக சந்தையை ஆட்டிப் படைக்கும் எனக் கருதப்படுகிறது. அவற்றைச் செலுத்த பெற்றோல் அவசியமில்லை. பச்சைத் தண்ணீர் போதுமானது. கரிப்புகையை ஊதித் தள்ளாமல் சுகாதாரக் கேட்டை உருவாக்காமல் அவை ஓடித் திரியும் எனக் கனவு காணலாம்.

இக்கனவை நனவாக்க அரசு 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஆராய்ச்சிகளுக்கென ஒதுக்கி உள்ளது. YU ZHU-OPING என்ற 44 வயது நிபுணர் கடந்த இரண்டு வருடங்களாக லீவே எடுக்கவில்லை. விடுமுறை நாள்களிலும் TONGJI பல்கலைக்கழக ஆய்வுகூடமே கதியெனக் கிடக்கும் அவருக்கு 30 பேர் வரை யிலான Ph-D பட்ட விஞ்ஞானிகள் முண்டு கொடுக்கிறார்கள். பிரமாண் டமான ஆய்வுகூடத்தில் 200 பல்கலைக்கழக மாணவர்களும் அவரோடு சேர்ந்து உழைக்கிறார்கள். நூற்றுக்கணக்கான கணனிகள் கண்காணிக்கின்றன.

இவர்களது ஆய்வுகள் பழுக்கும் நிலையில் இருந்தாலும் இன்னும் பல தொழில்நுட்பப் பிரச்சினைகளை வென்றாக வேண்டி உள்ளது. இத் தடைகளைத் தாண்டி ஐதரசன் வாயு சக்தியில் ஓடும் இவர்களது கார் வீதிக்கு வந்துவிட்டால் உலகம் சீனாவின் பின்னால் தான் ஓட வேண்டியிருக்கும். இவர்களது ஆய்வுக்கு தீர்க்க தரிசனத்துடன் பிரபல Volkswagen கம்பெனி ஒரு காரின் புறத்தை (body) தானம் செய்து உதவியிருக்கிறது. தண்ணீரைப் பிரித்தால் தாராளமாக ஐதரசன் கிடைக்கும். ஐதரசன் வாயுவை இனி எரிபொருள் நிலையங்களில் நிரப்பிக் கொள்ளலாம். எஞ்சினில் ஐதரசன் எரியும்போது மீண்டும் தண்ணீர் கிடைக்கும். கேடு எதுவும் இருக்காது. காபன் புகைகள் கிடைக்காது.

அவ்வப்போது விமரிசனங்கள் எழாமல் இல்லை. இது நடக்காத காரியம் எனக் கதைத்தவர்கள் இப்போது ஆய்வு கூடத்தில் இயங்குகின்ற இது, சந்தையில் விலைபோகாது என்கிறார்கள். திட்டம் வெற்றியளிக்கும்போது முதலில் சீன எரிபொருள் நிலையங்களில் ஐதரசன் நிரப்பும் வசதிகள் தேவைப்படும். தண்ணீரிலிருந்து மலிவாக ஐதரசனை பிரித்தெடுக்கும் வசதிகள் வேண்டும். ஐதரசனைக் கொண்டு திரிவது ஆபத்தானது. உற்பத்திகளை கட்டுப்படியான விலைக்கு சந்தைப்படுத்தல் வேண்டும். தடைகளைத் தாண்டி முன்னேறி வரும்போது சீனாவுக்கான மசகு எண்ணெய் ஏற்றுமதி பாதிக்கப்படும்.

## மாற்றுவழி சாத்தியமாகுமா?

பற்றரிகளில் இயங்கும் கார்கள் பற்றரிகளை சார்ஜ் செய்யும் இடங்கள் என்றெல்லாம்கூட மின்சாரத் தொழில்நுட்பமும் சீனாவில் விருத்தி கண்டு வருகிறது. பொதுப் போக்குவரத்து பஸ்கள் சில பற்றரிகளில் இயங்கத் தொடங்கியுள்ளன.

### எண்ணெய் எண்ணெய் தான்

எண்ணெய்க்கு மாற்றுவழி எண்ணெய்தான் என்று அடித்துச் சொல்லும் பிரபலங்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இப்போதைக்கு அதைத்தான் நம்பியாக வேண்டும். ஒரு சிறிய எரிபொருள் நிலைய கையிருப்பு சக்தி இருநூறு சதுர கிலோமீட்டர் அளவான சோலார் தகடுகளை வெல்ல வல்லது என்கிறார்கள் அவர்கள். உலகின் எண்ணெய் கையிருப்பு எப்போது தீரும்? அதை தீர விடாமல் விலை மிதக்க வைக்கும் என்று சொல்லப்படுகிறது. மட்டுமன்றி சிக்கனமாக அதனைப் பாவிக்கும் தொழில்நுட்பம் மேலும் விருத்தியாகும்.

எண்ணெய் விலை அதிகரிப்பு பல புதிய சாத்தியமற்றிருந்த ஆழ்கடல் அகழ்வு முயற்சிகளை கட்டுப்படியாக்கி இருக்கிறது. ஒரு பீப்பா மசகு எண்ணெயின் விலை உலக சந்தையில் 50 டொலர்களைத் தாண்டுகிறது. ஆனால், மத்திய கிழக்கு நாடுகளில் அதை பரலில் அடைக்கும் வரையான செலவு 2 டெலர்கள் மட்டுமே. இந்தக் கணக்கு அமெரிக்காவினை தலை சுற்ற வைப்பதில் வியப்பேதும் இல்லை. ஏனெனில் உலக சனத்தொகையில் 2 சதவிகித்தை மட்டுமே கொண்டுள்ள அமெரிக்கா உலக சக்தி பாவனையில் 30 சதவிகித்தை விழுங்குகின்றது. எனினும், மத்திய கிழக்கின் விலைக் கட்டுப்பாடு அமெரிக்காவில் பல புதிய எண்ணெய் வளங்களை திறந்துவிட்டிருக்கிறது. எனவே, உலகில் எண்ணெய் வளம் இப்போதைக்கு குறைவதற்கு இல்லை. கடற்படுக்கையில் இருந்து 7000 மீற்றர் ஆழத்தில் எண்ணெய் அகழும் அமெரிக்க ஷெல் (Shell) நிறுவனத்திற்கு பீப்பா ஒன்றிற்கு 15 முதல் 20 டொலர்கள்வரை செலவாகிறது. இப்போது 20 ஆயிரம் மீற்றர் ஆழத்திலிருந்து எண்ணெய் அகழ தொழில் நுட்பம் வழிகண்டிருக்கிறது.

அல்பேட்டாவில் மணற் படுக்கைகளில் பெருமளவு எண்ணெய்க் கசிவுகள் தென்படுகின்றன. இவற்றையெல்லாம் வடித்தெடுக்க இதுவரை காலமும் எவரும் நினைக்கவில்லை. இப்போது ஷெல் நிறுவனத்திற்கு சொந்தமான பாரிய புல்டோசர்கள் இப்பிராந்தியத்தில் தமது வேலைகளை ஆரம்பித்து உள்ளன. மூன்று மீற்றர் விட்டம் உடைய பாரிய ரயர்களை கொண்ட இந்த டிறக்குகள் ஒவ்வொன்றும் 365 மெற்றிக் தொன் எடைகொண்ட மண்ணைச் சுமந்து செல்ல வல்லன. அள்ள அள்ளக் குறையாத செல்வம் இது என இப்போதைக்கு கருத இடமுண்டு.

வடதுருவத்திற்கு நெருக்கமான அலாஸ்காவில் 1,300 கி.மீ. வரையில் நீளமான பாரிய எண்ணெய்க் குழாய் அமைத்துவிட 1970இலேயே அனுமதி வழங்கப்பட்டுவிட்டது. இத்தகைய பாரிய திட்டங்களின் மூலம் பெறப்படும் மசகு எண்ணெய் ~ பரல் ஒன்றிற்கான செலவு 20 டொலர்கள் மட்டுமே. இவ்வாறு குறைந்தபட்சம் 3 பில்லியன் பீப்பாக்களை பெறமுடியும் என நம்பப் படுகிறது. இந்தச் செல்வத்தை அள்ள நாடுகள் துடிக்கும்போது அலாஸ்காவில் சூழலுக்கு கேடுவிளைகிறது அரிய விலங்கினங்கள் அருகிவிடும் என்றெல்லாம் இயற்கைப் பிரியர்கள் கூச்சல் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

நகரங்களை நரகமாக்குவதில் பஸ்கள் விடும் புகை முக்கிய பங்கு வகிக்கிறது. அச்சுவேலி, ஆவரங்கால் வாழைக்குலையெல்லாம் பழுக்கிறது எங்கடை வசு விடுகிற புகையிலை என்று அண்ணை றையிற் நாடகத்தில் ஒரு வசனம் கேட்ட ஞாபகம். SEATTLE நகரத்தில் 235 பஸ்கள் புகைவிடுவதில்லை. எல்லாம் இயன்றவரை மோட்டாரில் இயங்கும் Hybrid தொழில்நுட்பம்தான் காரணம். இதனால் ஆண்டுக்கு 35 லட்சம் லீற்றர் எரிபொருள் மீதமாகிறது. சூழலுக்கு அச்சுறுத்தல் கிடையாது. மலையேற்றத்தில் டீசல் புகையை ஊதித் தள்ள வேண்டிய நிலைமை இங்கு பஸ்களுக்கு இல்லை. ஆனால் ஒரு பஸ்ஸின் விலையோ 200,000 டொலர்கள் அதிகம்.

### வீடு என்றொரு ஜெனறேட்டர்

ஒரு நவீன வீட்டில் சிக்கனம் பேண பல சாதனங்களைப் பொருத்த இயலும். சக்தியை உள்வாங்க பல சாத்தியமான வழிகளையும் பாவிக்கலாம். கூரையில் சில காற்றாடிகள், பல சோலர் தட்டுக்கள், ஒரு நிலத்தடி எரிபொருள் தாங்கியும் ஜெனரேட்டரும், மின் பிளக்கிற்கு இணைக்கப்பட்ட Hybrid கார், பற்றரிகள், அவற்றுக்கு மேலதிகமாக உள்வரும் மின்சார கேபிள் என்பன சாத்தியமானவை. இவை வழங்கும் அத்தனை சக்தியும் ஒரு chip மூலமாக நெறிப்படுத்தப்பட்டு வீட்டு மின் இணைப்பை கிரமமாக வழங்க முடியும். வெளிச்சமோ காற்றோ எரிபொருளோ எதுவானாலும் ஒன்றின் பற்றாக்குறையை இன்னொன்று நிவர்த்தி செய்துவிடும். மின்சாரம் எப்போதும் தடைப்பட மாட்டாது. தவிர மேலதிக மின்சாரம் தானாக வெளி லைனிற்கு விற்கப்படும். மின்சாரம் வரும் வழிகள்




அளவுகள், அதன் பாவனை, கையிருப்பு, விற்பனை என்பவற்றை துல்லியமாகக் காட்டும் கருவிகள் திட்டமிடலிற்கு துணைநிற்கும். மேலதிக வருமானத்தை இவை ஈட்டித் தரும். இயலாதபோது மின் கட்டணத்தையாவது கணிசமாகக் குறைக்கும்.

### தீர்வு கிடையாது

அரபு நாடுகள் தாம் நினைப்பதுபோல் எண்ணெயில் இனி ஆதிக்கம் செலுத்த இயலாது. என்றாலும் சும்மா வரும் காசு அவர்களுக்கு உரியது. ஏனைய அரசுகள் பாரிய திட்டங்களை வகுத்து பெருமளவு நிதி ஒதுக்கித்தான் மாற்று வழிகளைக் கண்டாக வேண்டும். எதற்கெடுத்தாலும் போற்றுவாரும் தூற்றுவாரும் இருக்கத்தான் செய்வார்கள். அரசியல்வாதிகள் இடையில் புகுந்து விளையாடுவார்கள். பெருமளவில் இயற்கை வாயு எரிபொருள் இருப்பதாக சொல்லப்படுகிறது. அதைக் கட்டுக்குள் வைத்து கருமம் ஆற்றுவது சுலபமான காரியம் அல்ல. என்றாலும் அடுத்து வரும் ஆண்டுகளில் வாயு ஆதிக்கம்

**கட்டுரை, படங்கள்: - மு. சிவநேசன்**

செலுத்தத்தான் போகிறது. ஆனால் சமையல் எரிவாயுவின் விலை இமயத்தை மிஞ்சுகிறது. Demand and Supply என்கின்ற இயல்பான சமநிலை எவரையும் மிஞ்ச விடாமல் பார்த்துக் கொள்ளும் என்று கூறலாம். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற ஐம்பெரும் பூதங்களின் சக்தி உலகினை வழிநடத்தும் என்று எப்போதோ சொல்லப்பட்டு விட்டது. அதற்காக முயற்சி எடுக்காமல் வாளா விருப்பது சாத்தியமற்றது.

எரிபொருள் தடை வடபகுதியில் உச்சம் கண்டிருந்த காலத்தில் பல்வேறு உத்திகளை மக்கள் பின்பற்றினார்கள். இந்த நிலைமை நீடித்து இருந்தால் இன்று சக்திக்கு மாற்றுவழி ஏதாவது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும். சிக்கனம் உச்சமடைந்திருக்கும். பட்டபாடுகளை மறந்து பகட்டாக வாழத்தான் இன்று பலரும் துடிக்கிறார்கள்.

---

## சின்ன ரோஜாக்களைக்கூட.....! சிறுமையில் அறைந்த சிங்களம்...!

கண்டதுண்டா.......!
வெள்ளைச் சீருடையில்
சிவப்பு ரத்தம்
கண்டதுண்டா.......!

பள்ளி சென்ற
பாலகரெல்லாம்
பாடையிலே வீதிவழி
வருகின்ற காட்சியினைக்
கண்டதுண்டா.......!

புத்தகம் சுமந்து சென்ற
பிஞ்சுக் குழந்தைகளை
புத்தமதத்தோரின் புக்காராக்
குண்டுகள் செய்துவிட்ட
கொடுமைகளைக்
கண்டதுண்டா......?

மாணவ மணியினத்தைச்
சுடுமணலில் சூட்சியாளர்கள்
சுட்டெரித்த காட்சியினை
நான்
கண்டதுண்டு.......!!!

வெள்ளைச் சீருடையில்
சிதறிய வெறிநகங்கள்
கீறிக்கிழித்த காயத்தைக்
கண்களால் கண்டதுண்டு......!

நாகர் கோவில்
வான்வெளியே வந்த
வல்லூறுகள்
தமிழினத்தை அழிப்பதென
மலரினத்தை அல்லவா
அழித்துச் சென்றன......!

நடந்தது
தமிழர்களுக்கெல்லாம்
வேதனை.........!
ஆதலால் இது
சந்திரிகாவிற்கு சாதனை.....!
மலரவிருக்கும் ரோஜாக்களை
மலரு முன்பும் சிலுவையில்
அறைந்த சம்பவமெல்லாம்
சந்திரிகாவிற்கு சாதனை.....!

இருட்டில் இருக்கும்
சமுதாயத்தை வெளிச்சத்தில்
காட்டும் மகத்தான
சாதனையாளர்கள் இந்த
மாணவர்கள்.........!

அப்படிப்பட்ட
அழகு பூக்கும் ரோஜாக்களை
சுட்டெரித்த சாதனையாளர்
சதிகாரச் சந்திரிகாவே......!

எந்த மனதுடன் இதை
செய்திருப்பார்......?

இரக்கமனம்
இருந்திருப்பின்

இதயத்தில்
ஈரம் இருந்திருப்பின்
இளையரத்தம் குடித்துவிட்டு
இரும்பு மனமாய்
இருந்திருப்பாரா......?

அந்தப் பூக்கள்
நாளைய சமுதாயத்தின்
இரும்புத் தூண்கள்......!

அந்த புள்ளிமான்கள்
நாளைய தமிழீழத்தின்
கல்விமான்கள்

அரசாங்கத்தின் அறிவில்லாத
செய்கையினால் – நாளைய
ஆதவன்கள்
குருதி சொரியும்
பூவைப் போலவும்......!

தவறி விழுந்த
சேயைப் போலவும்......!

தாகத்தில் தவித்த
மானைப் போலவும்......!

தரையில் துடிக்கும்
மீனைப் போலவும்
மாண்டனர் மாணவர்கள்
அந்த மகாவித்தியாலயத்தில்......!!

- ஆதியாள்

நாகர்கோவில் மகாவித்தியாலயத்தில் மாணவப் பிஞ்சுகள் மீது விமானப் படையினர் தாக்குதல் நடத்தி 9 ஆண்டுகள் நிறைவுபெற்றதையொட்டி வரையப்பட்ட கவிதை.

# அடுத்த நிகழ்ச்சி

# இன்னும் சில வினாடிகளில்....

தமிழக அறிஞர்களான பேராசிரியர் கலாநிதி இரா.மோகன். அவர் தம் துணைவியாரான பேராசிரியை கலாநிதி நிர்மலா மோகன் ஆகியோர் அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தனர். அவர்கள் இங்கு நடைபெற்ற சில பாரதி விழாக்களிலும் கலந்து சிறப்பித்தனர்.

இவர்கள் இருவரும் தமிழ்த்துறைத் தலைவரும் பேராசிரியருமான அமரர் டாக்டர் மு.வரதராசனாரின் மாணவர்கள். அவர் மீது மிகுந்த பற்றும் மதிப்பும் கொண்டவர்கள்.



இருவரும் காதலித்துத் திருமணம் செய்து கொண்ட தகவலும் தெரியவந்தது. இங்கும் இவர்கள் இணை பிரியாத தம்பதியினராகப் - புன்னகை பூத்த முகத்தினராகவே நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடந்த நிகழ்ச்சியில் அதிபர் க.சிவாஜி அவர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் பின்வரும் கவிஞர் மருதகாசியின் பாடல் வரிகளை நினைவூட்டியமை அவர்களுக்கு மிகவும் பொருத்தமாக இருந்தது.

**"வண்டு ஆடாத சோலையில் மலர்ந்து வாடாமல் இருக்கும் பூ என்ன பூ?"**

**"அன்புக் கணவனின் முன்னாலே மனைவி அழகாகச் சிந்தும் புன்சிரிப்பு"**

* * *

கதைகள் எழுதுவதில் சில முறைகள் இருக்கின்றன. எழுத்தாளனே தான் ஒரு மூன்றாவது ஆளாக நின்று கதை சொல்லுவது தான் பெரு வழக்காக உள்ளது. கதை மாந்தரில் ஒருவராக எழுத்தாளனே நின்று கொண்டு கதை சொல்வதும் வழக்கிலுள்ளது. இடைக் காலத்திலே ஒரு புதுமையாகக் கதை மாந்தர்கள் தனித்தனியாகத் தோன்றி தாம் சம்பந்தப்பட்ட சம்பவங்களை மாறிமாறிச் சொல்லிக் கதையை நகர்த்திச் செல்லும்முறையும் வந்தது. மு.வவின் பெருமபாலான நாவல்கள் அந்த வகையானவைகளே. அவரின் 'கரித்துண்டு' நாவலும் அப்படியே! அந்த நாவலின் கதாநாயகனின் பெயர் **மோகன** நாயகியின் பெயர் **நிர்மலா**.

'நெய்க்குத் தொன்னை ஆதாரமா அல்லது தொன்னைக்கு நெய் ஆதாரமா?' என்றெல்லாம் ஆராய்ச்சியில் ஈடுபடுவதை விடுத்து அடுத்த கட்டத்துக்குள் நுழைகிறேன்.

* * *

மோகன் - நிர்மலா இருவருமே சாதாரண மக்களும் ரசித்து மகிழும் வகையில் நகைச்சுவையாக உரையாற்றுபவர்கள். அதிலும் நிர்மலா பூப் பூவாய் வார்த்தைகளைக் கொட்டியது அழகாயிருந்தது. மாணவ - மாணவியர்களைப் பார்த்து அவர்களுக்கு விருப்பமான பூக்களின் பெயர்களைக் கேட்டவர் அதைவிட அவர்களிடம் இருக்கவேண்டிய மூன்று பூக்களாக படிப்பு, பண்பு, உழைப்பு என்பதையும் வலியுறுத்தினார். இன்றைக்கெல்லாம் சில மாணவர்கள் விரும்புகின்ற பூக்களாக குஷ்பு, பிரபு இருப்பதையும் நையாண்டி செய்தார்.

அவர்கள் காதலித்துத் திருமணம் செய்தவர்கள் என்பதை முன்பே குறிப்பிட்டிருந்தேன். அதனால் அவர்கள் காதலுக்கு மதிப்பு கொடுப்பவர்களாகத் தானே இருக்கவேண்டும்? ஆனால், பெண்கள் மீது இளைஞர்கள் புரிகின்ற சில்மிஷச் சேட்டைகளை **(EVE TEASING)** நிர்மலா கடுமையாகக் கண்டித்தார். அதற்குப் பதிலடியாகப் பெண்கள் தங்கள் நகங்களை - பற்களைக் கூட பயன்படுத்துவதில் தவறில்லை என்றும் வலியுறுத்தினார்.

நான் சொல்லுகிறேன் அவர்களுடன் ஒட்டி உறவாடுகின்ற ஊசிகளைக்கூட அதற்குப் பயன்படுத்தலாமே! அதனால் 'பெண்புத்தி 'பின்'புத்தி' என்பதையும் வெளிப்படுத்தலாம் அல்லவா?

இந்த இடத்தில் திருமதி நிர்மலா மோகன் சொன்ன அந்தச் செய்தியும் சுவையாக விருந்தது.

பாடசாலை பேருந்துகளில் மாணவ - மாணவியர் நெருங்கி அடித்துக் கொண்டு, பயணிப்பதுண்டல்லவா? தமிழ் நாட்டிலும் அப்ப




டித்தான்.

ஒரு பேருந்தில் ஒரு மாணவன் அந்த நெருக்கடியைப் பயன்படுத்தி ஒரு மாணவியின் தோளில் இடித்து விடுகிறான்.

மாணவி திரும்பி அவனை முறைத்துப் பார்த்தபோது அவன் "தடங்கலுக்கு வருந்துகிறோம்" என வானொலி மொழியில் சொல்லுகிறான். மாணவி தனது ஒருகால் செருப்பைக் கழற்றிக் கையில் ஏந்தியவாறே சொன்னாள்

"அடுத்த நிகழ்ச்சி இன்னும் சில வினாடிகளில் தொடரும்" - என்று.

**- சண் அங்கிள்.**



# யாழ். பாணம்



## உணரத் தவறும் உண்மைகள்

அரச சேவையில் கடமையாற்றி ஓய்வு பெற்ற அவர் சுமாரான வசதி படைத்தவர்; அலுவலகத்தில் மட்டுமன்றி வெளியிலும் கூட 'ஒரு றிசேவ் ரைப்' என விமர்சிக்கப்பட்டவர். இறுக்கமான பேர்வழி என்பதோடு எடுத்ததற்கெல்லாம் குற்றம்குறை கண்டு பிடிக்கும் தன்மை கொண்டவர்.

ஆஸ்திக்கும் ஆசைக்கும் சேர்த்து அவருக்கு ஒரேயொரு மகன் மட்டுமே;

பெற்றோருக்கு கீழ்ப்படிந்த - சகஜமாகப் பழகத்தெரியாத தன்மையால் பொதுவாக அந்த மகனும் கூட 'ஒரு றிசேவ் ரைப்' எனவே ஏனையோரால் விமர்சிக்கப்படுபவன்.

விஷயத்துக்கு வருவோம்;

படிப்பில் அதிக அக்கறை காட்டாத மகனை 'ஏஜென்சிக்காரர்' மூலம் ஜேர்மனிக்கு அனுப்பி வைத்தார் தந்தை; பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற சம்பவம் அது; அச்சமயம் அவரது மகனுக்கும் வயது பதினைந்து மட்டுமே. மகன் ஜேர்மனியில் என்ன தொழில் செய்கிறான் என எவரும் தகப்பனைக் கேட்டதுமில்லை. அவரும் அது குறித்துப் பெரியளவில் அக்கறை எடுத்துக் கொண்டதுமில்லை. ஜேர்மனிக்குச் சென்ற இரண்டு வருடங்கள் கழித்து இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை தகப்பனது வங்கிக் கணக்குக்கு கணிசமானதொரு தொகை அனுப்பி வைக்க மகன் தவறியதில்லை. இந்த வகையில் மகன் அனுப்பி வைத்த பணம் அவரது வங்கிக் கணக்கில் பல லட்சங்களாக வளர்ந்து நிற்கிறது. இருந்தபோதும், வெளிநாடுகளில் வாழும் தம் பிள்ளைகள் குறித்து ஏனைய பெற்றோரிடம் காணப்படும் அக்கறை போன்று தனது மகன் மீது இவர் அக்கறை காட்டியதில்லை.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தான் தனது மகனுக்குத் திருமணம் செய்து வைக்கும் எண்ணம் இவருக்கு உதயமானது. தமது குமர்ப்பிள்ளைகளை கரையேற்றவேண்டிய பொறுப்புடைய ஒரு சில தந்தையர் மற்றும் ஒரு சில திருமணத் தரகர்கள் அவரை அணுகத் தொடங்கியதன் விளைவே 'புத்தருக்கு ஏற்பட்ட போதி மரத்தடி ஞானம்' போன்ற இத் திடீர் அக்கறை அவருக்கு ஏற்படக் காரணமாய் இருக்கக் கூடும்.

தனக்கொரு மனைவியைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை "நீங்கள் பார்த்து முடிவ செய்யும் பெண்ணையே திருமணம் செய்து கொள்கின்றேன்" எனத் தெரிவித்ததன் மூலம் பெற்றோரிடமே விட்டு விட்டான், பெற்றோருக்குக் கீழ்ப்படிந்தே பழக்கப்பட்ட அவரது மகன். இதனைப் பலரிடமும் பல தடவைகள் சொல்லிச் சொல்லி பெருமைப்பட்டுக் கொண்டார் தந்தை.

ஆனால், தனது திருமணம் தொடர்பாக மகன் விதித்த நிபந்தனை தான் அவருக்குக் கொஞ்சம் கூடப்பிடிக்கவில்லை.

பெற்றோர் பார்த்து முடிவு செய்யும் பெண் தரப்பாரிடம் சீதனம் எதுவும் கேட்கக் கூடாதாம்.

ஓரளவு நெருக்கமாகப் பழகுபவர் என்ற வகையில் தனது மனக்குமுறலை என்னிடம் கொட்டித்தீர்த்தார்.

"இந்தப் பெடியன் இன்னமும் உலகம் புரியாதவனாக இருக்கின்றானே!"

அவரது இந்த வார்த்தைகள் அவரது மன ஆதங்கத்தின் வெளிப்பாடு.

முக்கியமான தகவலொன்றை இங்கு தெரிவித்ததாக வேண்டும். அவருடைய இரு இளைய சகோதரிகள் சாதாரண இடங்களில் வாழ்க்கைப்பட்டுச் சிரமமான வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்குத் திருமண வயதில் சுமாரான அழகுடைய ஒவ்வொரு மகள்மாரும் உண்டு.

அவர்களில் எவரையாவது நினைத்துத்தான் இவருடைய மகன் அவ்வித நிபந்தனை விதித்திருப்பானோ என எண்ணினாலும் நான் அது பற்றி எதுவும் பேசவில்லை. அவ்வித விருப்பம் இருப்பினும் துணிச்சலோடு அதனைக் கூறும் தன்மை அவரது மகனிடமும் இல்லை. குடும்ப விவகாரத்தில் எவரது கருத்துக்கோ ஆலோசனைக்கோ இடமளிக்க விரும்பாத நபர் அவர். தமது உடன் பிறந்த சகோதரிகளுடன் கூட ஒட்டிப்பழகாத இயல்பு கொண்டவர்.

திருமணம் பேசி வந்தவர்களிடமெல்லாம் சீதனமாக 20 லட்சம் ரொக்கம் தரவேண்டுமென நிபந்தனை விதித்தார். ஒன்றரையாண்டுகள் இப்படி இழுத்தடிக்கும் திருமண ஏற்பாடு கை கூடுவதாய் இல்லை. இதனிடையே கேட்ட தொகையை சீதனமாக வழங்க முன்வந்த ஒரு சில இடங்களையும் ஜாதகப் பொருத்தம் சரியில்லை; மணப்பெண் அழகாயில்லை; அவர்கள் தரப்புப்பற்றித் திருப்தியில்லை என்று நொட்டை நொடுக்கு கூறித்தட்டிக் கழித்தாயிற்று. இத்தகவல்களைக் கேள்விப்பட்ட அவரது மகனுக்கு சலிப்புத் தட்டியிருக்கும். ஆனாலும், பெற்றோருக்கு மதிப்பளித்து பொறுப்பை அவர்களிடம் விட்டுக் காத்திருந்த அவரது மகனின் பண்பு குறித்து எனது மனதில் அவனைப் பற்றி ஒரு மதிப்பு உருவாகியிருந்தது.

இடையில் பேச்சு வாக்கில் ஓரிரு தடவைகள் இத்தகைய போக்கைக் கைவிட்டாலொழிய மகனுக்குக் கல்யாணம் ஒப்பேற்றுவது கஷ்டம் எனச் சொல்லிப் பார்த்தேன். பேய்க்கதை கதையாதேயும்; சீதனம் வாங்காமல் கல்யாணம் செய்ய முன்வருகிற எந்தவொரு ஆணையும் இந்தக் காலத்துப் பெண்பிள்ளைகள் மதிக்க மாட்டாளவை.

பல தரப்பிலிருந்து கிளம்பக்கூடிய விமர்சனங்களுக்கு ஒரேயடியாக முற்றுப்புள்ளி வைத்துவிட்ட அவரது சாமர்த்தியத்தை எண்ணி என்னால் வியப்படையாமல் இருக்க முடியவில்லை.

இரண்டு மாதகால இடைவெளியின் பின்னர் சென்ற வாரம் அவரைச் சந்திக்க நேர்ந்தது. பல நாள் காய்ச்சலில் விழுந்து எழுந்தவர் போல முகமெல்லாம் பேயறைந்தவர் போன்ற தோற்றததில் காணப்பட்டார். "எல்லாமே போச்சுதப்பா.... பெடியன் இப்படிச் செய்வான் எண்டு நான் கனவிலும் நினைக்கவில்லை"

துக்கம் தொண்டையை அடைக்க, இறங்கிய குரலில் அவர் தொடர்ந்தார்.

"ஜேர்மனிக்காரி ஒருத்தியை 'றெயிஸ்ரர்' கல்யாணம் செய்திருக்கிறானாம். வருகிற மாதம் எங்களைப் பார்க்க இரண்டு பேரும் இங்கை வரப்போகினமாம்."

அவருக்கு எப்படி ஆறுதல் கூறுவது என்று எனக்குப் புரியவில்லை;

"உரிய காலத்தில் ஆற்றும் பணியே ஒட்டு மொத்த பலனை அளிக்கும்;"

அர்த்தமில்லாமலா முன்னோர்கள் இப்படிச் சொல்லிவைத்திருப்பார்கள்?

பிள்ளைகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல், அவர்களைத் தொடர்ச்சியாகப் பணந்தேடும் இயந்திரங்களாக்கிப் பயனடைய நினைக்கும் ஒரு சில பெற்றோருக்கு இது சமர்ப்பணம்!

**- பொன்வேலன்.**



# போராட்டம்

எதைப் பெறுவது
எதை விடுவது என்ற
தடுமாற்றம்
எனக்கு இல்லை.
எனது போராட்டம் உறுதியானது.
வலுவான பாறையின் மேல்
உறுதியான அத்திவாரம்
இடப்பட்டுவிட்டது.
இனி..........
புயலோ..........
மழையோ..........
எது வரினும்
திட்டமிடப்பட்ட
கட்டடத்தைக்
கட்டியே தீருவேன்

இது
எனது நிலம்
எனது உரிமை
என்னைத் தடுப்பவன் யார்?
ஜனாதிபதி போல
தேவையானபோது ஒன்றைச்
சொல்லி
பின்..........
மறப்பவன் நானல்ல
எனக்கு
எது தேவையென்பதை
நான் நன்கு
தெரிந்து வைத்திருப்பவன்
எதையும்
போராடிப் பெறுபவன் நான்
மண்டியிடுபவன் அல்ல.
நான் நினைத்தது நடக்கும் வரை
எனது போராட்டம்
தொடரும்
இதை எவராலும் தடுக்க முடியாது

**- அ.சூரியன்.**

# தெற்கின் தோழிக்கு

தோழி...!
நீ வா...!
நாம்
கரம் கோர்ப்போம்!

சேலை கட்டிய
வீரப் பேடிகளும்
இரத்தக் கரங்களுடைய
சமாதானப் புறாக்களும்
இங்கிருந்து
தொலைந்தே போகட்டும்!

நீ..வா...!
நாம்
கரம் கோர்ப்போம்!

வடக்கு... தெற்கு
சிங்களம்... தமிழ்
இந்த எல்லைகள்
எவையும் வேண்டாம்...

போதனைகளால்
எதிரியாக்கப்பட்டவர்கள்
தானே
நாம்?

உண்மையைச்சொல்...
என்மீது
உண்மையில்
உனக்கேதும் பகையுண்டா?

இல்லையே...!

பிறகேன் இன்னும் தயக்கம்?

இரத்தக் கறைகள்
கறை தோய் உடலங்கள்
உடலங்கள் எரி சாம்பல்
சாம்பல் சூழ் சூழல்
இவை
எமக்குரிய நாள்களிற்கு
விதிக்கப்பட்ட நிகழ்வுகளா?

ஆயின்...
எம் தொடரிகளுக்கு?

வா...தோழி...!
எமக்கேன்
எம்மையே பொசுக்கும்
இந்தப் பகைமை?

வா... நாம்
கரம் இணைத்து
எமக்குரிதான நாள்களை
மீட்டு வருவோம்...

புதைக்குழிகள் மேல்
புல் முளைத்தால் தான்
இங்கு
சமாதானமும்
விடுதலையும் என
எவராயினும்
சபதமெடுத்தனரா...

அன்றி -

சமாதானத்தையும்
விடுதலையையும்
என்றும்
தேடிக் கொண்டே
இருக்கக் கடவீர்
என
யாராயின்
சாபமிட்டனரா...?

அப்படியே ஆயினும் -


சபதங்களும்
சாபங்களும்
விதித்தவரையே
சேருவதாக...!

நீ வா...
தோழி,
நாம்
காம் கோர்ப்போம்!!

நீயும்
நானுமாவது
மனங்கள் உருவேற்றப்பட
முன்பும்
கரங்கள் விலங்கிடப்பட
முன்பும்
முகங்கள் தொலைந்துபோக
முன்பும்
நாங்களாவோம்...
மனிதம் உடை மனிதராவோம்!

- யாழ். ஆதிரை.

# யாழ்.நகரின் எழில்.....


மீள உருப்பெறும் சுப்பிரமணியம் பூங்கா...

**யாழ்.**பொதுசன நூலகத்தில் நடைபெற்று வரும 'வரலாறுகளின் வரலாறு' என்ற காண்பியக் கலைக்காட்சியை பார்ப்பதற்காகக் கடந்த வாரம் அங்கு சென்றிருந்தேன். நீண்ட துயர்தோய்ந்த வரலாறுகளின் வரலாறை ஒருமுறை மீட்டுப் பார்க்க நேர்ந்ததில் மனம் கனத்தது.

ஓர் அரும்பொருள்காட்சியகம் போல ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பொதுநூலகக் காட்சியகத்தின் மேல்தளங்களில் நின்றபோது காட்சிப் பொருள்களுக்கு அப்பால் ஓர் அழிவுண்ட அழகிய நகரின் துளிர்ப்பையும் காணக் கிடைத்தது.

பொதுநூலகக் கட்டடத்தின் மேல்தள பல்கனியில் நின்றவாறு யாழ்.நகரின் பெரும் பகுதியைக் கண்டுகொள்ளமுடிந்தது. என்னைப் பொறுத்தவரை அது ஓர் அபூர்வமான காட்சியாகவே தெரிந்தது. ஆம்..... எங்கள் நகருக்குத்தான் எத்தனை வனப்பு.

மணிக்கூண்டுக் கோபுரம், பாடசாலைகள், விளையாட்டு மைதானம், முற்றவெளி, கோட்டை, குளம், பின்னணிகாயத் தெரியும் கம்பியிடப்பட்ட கடல்.... இவை அனைத்தையும் மேலே இருந்தவாறு ஒருசேரக் கண்டபோது ரம்மியமாக இருந்தது. நீண்ட நேரமாக மனம் லயித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன். இப்படியான லயிப்பு இந்தக்கண் காட்சியைக் காணவந்த பலருக்கும் ஏற்பட்டிருக்கக் கூடும்...

உடைந்த கட்டடங்களும் வீதிகளும் இப்போது உயிர் பெறுகின்றன. பேய் அறைந்த பிரதேசமாய்க் கிடந்த நகரின் இருதயப் பகுதி இப்போதுதான் மெல்ல உயிர் பெறுகின்றது.

என்றாலும் நகரின் இயற்கை அழகிற்கு இதம் சேர்க்கும் கட்டடங்களையும் புல்வெளிகளையும் தாண்டி சில விடயங்கள் நகரின் எழிலுக்குப் புறம்பாய் துருத்திக் கொண்டு தெரிகின்றன. அவற்றில் ஒன்று புதிதாக நிர்மாணிக்கப்பட்ட யாழ். பிரதம தபாலகக் கட்டடத்துக்கு பூசப்பட்ட வர்ணங்கள். அடுத்தது மெல்ல மெல்ல உருப்பெறும் சுப்பிரமணியம் பூங்காவின் காட்சி.

பிரதம தபாலகக் கட்டடம் எழிலுடன் நிமிர்ந்து நின்றாலும் அதன் வர்ணங்கள் கண்ணுக்கு இதமாய் இல்லை. இந்த வர்ணத்தெரிவுக்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படலாம். என்றாலும் எனக்கு ஏனோ அது இதமாய் இல்லை. என் போலப் பலரும்... அப்படித்தான் சொல்கிறார்கள்...

இதுபோல சுப்பிரமணியம் பூங்கா. நம்மில் பலருக்கு இப்படி ஒரு பூங்கா யாழ்.நகரில் இருந்தது என்பது கூடத் தெரியாது. என்றாலும் என்னுடைய சிறுபராயத்தின் மங்கலான நினைவுகளில் இந்தப் பூங்காவின் பதிவுகள் இன்றும் இருக்கவே செய்கின்றன.

தற்போது வெட்ட வெளியாக இருக்கும் அந்தக் காணித் துண்டில் முன்பு 'ஒரு சொர்க்கம்' இருந்தது எனக்குத் தெரியும். என்போலப் பலருக்கும் தெரியும். பூங்காவின் செடிகள் அதன் வடிவமைப்பு... அங்கு நின்ற பெரிய மரங்கள்... இப்படி மனதில் உணர்ந்த அழகுகள் ஏராளம். இப்போது அந்த வெற்றுக் காணியில் பூங்காவுக்கு மீண்டும் அடிகோலப்படுகிறது. ஆயினும், அடிப்படைக் கட்டமைப்பான சிமெந்து பாத்திகளுக்கும், அங்கு நிறுவப்பட்டுவரும் சிமெந்து ஆசனங்களுக்கும் (Stone Bench) பூசப்படும் பெயின்ற் வர்ணங்கள் பூங்காவுக்கு இதம் சேர்க்குமா என்பது புரியவில்லை. வீதிக்குறியீடுகளுக்குப் பெரிதும்பயன்படும் நிறங்களும் மூல வர்ணங்களும் பயன்படுத்தப்படுவதால் அது பூங்காச் சூழலின் இயற்கை எழிலுடன் பொருந்துவதாக இல்லை. இது எனது ரசனை. இதுபோல வேறு எவரும் கூட எண்ணியிருக்கலாம். பூங்காவை மீள வடிவமைப்போர் வர்ணத்தெரிவில் கவனம் செலுத்துவது நல்லது. குழந்தைகள் கூடும் இடங்களுக்கு ஏற்ப வர்ணங்கள் பொருத்தமாக இருப்பது நல்லது. இது என் கருத்து.

இதுவரை (கிட்டத்தட்ட இரு தசாப்தகாலம்) யாழ்.ஆஸ்பத்திரி, பஸ்நிலையம் என்பவற்றைச் சூழ இருக்கும் சந்தடியும் இரைச்சலும் மிகுந்த பகுதியையே 'எங்கள் நகரம்' என்று ரசித்து வந்திருக்கும் புதிய தலைமுறைக்கு யாழ்.நகரின் - இருதயப் பகுதியை - உண்மையான தோற்றத்தை - அதன் முந்திய எழில் வடிவத்தில் காட்ட வேண்டாமா?

- ரசிகன்.

# நடிப்புக்கு இலக்கணம்

அம்மம்மா நடிப்புக்கு இலக்கணம்
அளித்திட்ட நாயகன் சிவாஜி
எம்மினிய தமிழாலே சிவாஜி
எத்தனை வித்தை செய்தான்
சிம்மக் குரலோன் சிவாஜி
செவாலிய விருது பெற்றான்
இம்மண்ணில் இவன் புகழோ
இருந்திடும் நடிப்பு இருக்கும்வரை
அடுக்கு மொழியைச் சிவாஜி
அழகழ காய் பேசிடுவான்
அங்க அசைவொவ் வொன்றும்
அநேக அர்த்தங்கள் சொல்லும்
நடிக்கின்ற பாத்திரமாய் சிவாஜி
நமையெல் லாம் மாற்றிடுவான்
துடிக்கின்ற உணர்ச்சியைக் கொட்டித்
தொட்டிடுவான் நெஞ்சை யெல்லாம்
நடிப்பு உலக மேதையவன்
நடிகர் திலகம் அவன்
நம் தமிழுக்கு அணி செய்யும்
நல்லதொரு முத்து அவன்.

~ வ.யோகானந்தசிவம்.



வகுத்த நாயகன்

# பந்தயக் குதிரைகள்

கடுகுக் கதை



இண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை. பள்ளிக்கூடம் இல்லை. அவசரப்படாமல் எழும்பி முகம் கழுவிப் போட்டு முன்வாசலுக்கு வாறன்.

படியிறங்கக்குள்ளேயே தோட்டத்தில பூத்திருக்கிற பூவெல்லாம் தெரியுது. சரியான வடிவு. இண்டைக்கு முழுக்கப் பார்த்துக்கொண்டு நிக்கலாம் போல அவ்வளவு வடிவு.

வாசலில சைக்கிளொண்டு வந்து நிக்குது. அது எங்கட செல்வம் மாமா. நான் ஓடிப்போய் கேற்றைத் திறக்கிறன். அவற்ற முகத்தில் ஒரு நாளும் சிரிப்பு இருக்காது. எப்பவும் ஏதோ ஒரு கோவத்தில இருக்கின்ற மாதிரித்தான் கிடக்கும்.

"உன்ர கொம்மா எங்க..? உன்ர மாக்ஸ் என்னெண்டு பார்த்தவையளே..."

"....மாக்சோ... என்ன மாக்ஸ் மாமா?"

"சோக்காயிருந்தது பகிடி. ஊர் முழுக்க உன்னையொத்த பிள்ளையள் ஸ்கொலஷிப் மாக்ஸ்பாக்க நேற்றுத் துவக்கம் ஓடித்திரியுதுகள்.

... உனக்கெங்க அதுப்பற்றி அக்கறை ... கொப்பர் கொம்மாவும் அக்கறைப்படேல்லையே... கூப்பிடடி கொம்மாவை..." நான் அம்மாவைக் கூப்பிட உள்ளுக்குப்போறன். நெஞ்சு படக்குப் படக்கெண்டு அடிக்குது. கடவுளே என்ன மாக்ஸ் வந்துதோ... தற்சமயம் குறைஞ்சால்... அம்மா என்னைக் கொண்டே போடுவா...

"வாணி மாமாவிட்ட உன்ர இன்டெக்ஸ் நம்பரைக் கொணந்து குடு. அவர் மாக்ஸ் பாத்துச் சொல்லுறாராம். நானும் அதைப் பற்றி மறந்து போனன். அப்பாவும் வெளியில போட்டார்."

மாமாவரும்வரைக்கும் நான் கேற்றடியில் நிற்கிறன். நெஞ்சிடி இன்னும் நிக்கேல்ல.

கொஞ்ச நேரத்தில மாமா வாறார். அவற்ற முகம் இன்னும் கோவமா இருக்கு.

எனக்குச் சரியான பயமாக்கிடக்குது...

"என்ன முழுசிக்கொண்டு நிக்கிறாய்... மொக்குச் சாம்பிராணி. முக்கிப் படிச்சும் நூறு மாக்சைத் தாண்ட முடியேல்ல. உன்னால... உன்னைப்போலதானே அவன் சுந்தரத்தின்ர சுபாவும்... அவளுக்கு நூற்று முப்பத்தேழு வந்திருக்கு. ரியூசனுக்கே போகாத புனிதமலரின்ர மோனுக்கு நூற்றி நாப்பத்தேழு...

நட உள்ளுக்குள்ள. எல்லாம் உன்ர கொம்மாவும் கொப்பரும் தாறஇடம்."

என்னால் அழுதுகொண்டு கெதியா நடக்க முடியேல்ல. மாமா என்ர காதை முறுக்கிக் கொண்டு முதுகில கை வைச்சு உள்ளுக்கு தள்ளுறார்.

நான் படியடியில் விழப் பாத்தன். அதுக்கிடேல அம்மா வந்திட்டா.

"இவளுக்கு என்னமாக்ஸ் அண்ணை"

"மாக்சோ அதை என்னெண்டு வாயால சொல்லுறது. தாயும் தேப்பனும் உத்தியோககாறர் எண்டு சத்தியம் செய்தாலும் சனம் நம்பாது பிள்ளையின்ர வண்டவாளம் அப்படி எண்பத்தேழு எடுத்துவைச்சிருக்கிறாள்."

"எட மரியாத கேடு... கேக்கிற ஆக்களுக்கு நான் என்னெண்டு சொல்லுறது... இவ்வளவு தானோ உங்கட மகள் எண்டு கேக்கப்போகுதுகள் சனமெல்லாம். விடிய விடிய எழும்பிப் பூக்களத் தடவுறதும் பாட்டுப் பாடுறதும் உதுகள்தான் உன்னால ஏலும்."

அம்மாட முகத்தில கடுமையான கோவம் தெரியுது. "எல்லாம் நீங்கள் குடுக்கிற இடம். நானெண்டால் தடிமுறிச்சு ஆளுக்கு நல்ல சாப்பாடு குடுத்திருப்பன்! ஓமோம் இப்ப இவவுக்கு நான் குறிக்கத்தான் போறன் நாலு. எங்கட மரியாதையைக் கெடுத்து வச்சிருக்கிறாளே!!" அம்மா ஏசிக்கொண்டு வேலிக்கரைப் பூவரசில் தடி முறிக்கிறா. எனக்கு அழுகை அழுகையா வருகுது.

- நிஜன்.



# முதுமைக்குதவும் கலைகளைப் பிரசவிப்போம்...!

"தம்பி கொஞ்சம் தண்ணி வாத் துத்தாவன" இது முதுமையின் உருக் கமான வேண்டுதல். "இந்தக் கிழவா னால் ஒரே கரைச்சல்" இது இளமை ஒன்றின் வெளிப்பாட்டுப்பதில் இவ்வா றான பல வேண்டுதல்களுக்கு வெளிப் பாட்டுப்பதில்கள் பல மாறுதல்களில் வெளிப்படுகின்றன. இதன் தாக்கத் தால் முதுமை நொந்து போகின்றது.

ஒவ்வொரு மனிதனும் வாழும் காலத்தில் முதுமைப்பருவ வாழ்க்கைக் குள் வாழ இயற்கை நிர்ப்பந்தம் செய் கின்றது. இப்பருவத்தினை அழகான தாக வடிவமைப்பதற்கு மனித மனங் கள் கடந்த பருவங்களின் வாழ்க்கை ஒழுங்குகளை செப்பனிட்டு வந்திருக்க வேண்டும்.

பொதுவாக முதியவர்களின் ஆரோக கியம் (Healthy) தளர்ச்சியடைந்து காணப்படும். இதனை அவர்க ளின் உடலியல் தொழிற்பாட்டின் விளைவுகளின் வெளிப்பாடுகளால் அறிந்துகொள்ளமுடியும். இன்று எமது பிரதேசங்களில் முதியவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. அதேவேளை யில், அவர்கள் அனுபவிக்கும் துன்பச் சுமைகளும், ஏக்கப் பெருமூச்சும், தனிமையுணர் வுகளும் வரையப்பட முடியாதனவாக இருப்பதுடன், அவை களையப்படாமலும் கவ்னிக் கப்படாமலும் தொடர்கின்றன. இத்தகைய நிலை தொடருமானால் எமது சமுதாயத்திற்கு ஆரோக்கியமாக இருக்காது. உறவுகளைப்பிரிந்து வாழ்தலும், தனிமைக்குள் சிக்கித்த விப்பதும், மனச்சுமைகளின் வடுக்களால் துடிப்பதும் முதுமையின் உயிர்த்துடிப்பினை மெல்ல மெல்லக் கொல்கின்றன. இத்தகைய தாக்கத்திற்கு தொடர்ந்து முதுமை உட் படும்போது அறளை பெயர்தல் (Dementia) என்னும் அசாதாரணமான நிலை ஏற்படு கின்றது. இதனால் இடர்படும் முதியவர்களுக்கு பொருத்தமான வழிகளில் கரங்கொடுத்து உதவ முன்வரவேண்டும்.

குடும்ப அமைப்புகளில் மூத்தோரை முதன்மைப்படுத்தி, அவர்களுக்குரிய தேவைகளை நிறைவு செய்யும் பழக்கத்தை பெற்றோர் பிள்ளைகளுக்கு வழிப்படுத்த வேண்டும். பிள்ளை கள் மூத்தோருக்கு செய்கின்ற சிறிய உதவிகளைக் கூட பெற்றோர் பாராட்ட வேண்டும். இன்று பெற்றோர் தமது பிள்ளைகளைத்தானும் பாராட்டுவது மிகக் குறைவாகவே காணப் படுகின்றது. இந்நிலை மாற்றப்படவேண்டும்.

முதியோர்களை குடும்ப இணைப்பில் இணைத்துக்கருமமாற்ற வேண்டும். இது அவர் களுக்கு மனமகிழ்வையும் ஆறுதலையும் தரும்.

பாடசாலைகளினூடாக சிறார்களுக்கு முதியோர்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உயிரோட்டமாக உணர அனுபவங்களைக் கற்றுக்கொடுக்க வேண்டும். தனியே "முதியோர் தின விழா" தினத்தில் மாத்திரம் முதியோரைக் கௌரவித்தால் போதும் என்ற நிலை மாற்றியமைக்கப்பட்டு தொடரான ஒழுங்கில் மனதிற்கு இதமான கலைப் படைப்புக்களை முதியோர் முன் பிரசவிக்கவேண்டும். அப்போது முதுமை முழுமைபெற முயலும்.

பிள்ளைகள் பெரியவர்களின் கதைகளை நன்கு செவிமடுக்கவும், அவர்களுடன் நல்ல நட்புறவான தொடர்பாடலை மேற்கொள்வதற்கும் பயிற்றுவிக்கப்படுதல் வேண்டும். இவற்றின விளைவாக பிள்ளைகள் ஆரோக்கியமான நெறிகளைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

எனவே, முதியோரை எம் வளச்சொத்தான முத்தாகக்கருதி
அவர்களின் இயலாமையை உணர்ந்து உதவிடுவோம்.!

- வை.சசிகுமார்.

# சனியின் பகைவீட்டுச் சஞ்சாரம் இலங்கையில் அமைதியைக் குலைக்கும்?

2005 ஆம் ஆண்டு ஜனவரி

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | சனி (வக்) |
| புத. சூரி | | | |
| சுக். | | | |
| செவ். | | கேது | குரு |

2001 ஆம் ஆண்டு ஜூலை

| | | | |
|---|---|---|---|
| | | சுக். சனி | புத. ராகு குரு |
| | | | சூரி. |
| | | | |
| கேது | செவ். (வக்) | | |

இலங்கையின் இன்றைய குழப்ப நிலை இன்னும் எவ்வளவு காலத்திற்குத் தொடரும்? கிரகசஞ்சாரங்களுக்கும் சாதகமாக அமையுமா?

இலங்கையை ஆளும் லக்கினம் கும்பம். அதன் அதிபதி சனீஸ்வரன். 2000ஆம் ஆண்டு மே மாதம் முதல் நட்பு வீடுகளில் சஞ்சாரத்தை மேற்கொள்ளும் சனீஸ்வரன் இதுவரை காலமும் நாட்டில் அமைதியை தந்தவண்ணமே உள்ளார் என்பது ஓரளவு உண்மையே. ஆயினும், அவ்வப்போது பதட்டமும் கூடவே இருந்தது. திருக்கணிதப்படி செப்ரெம்பர் 5முதல் கடகராசியில் பிரவேசத்தை மேற்கொண்டுள்ளார். கடகராசி சனிக்கு பகைவீடு. அங்கே 2½ வருடம் இருக்கப்போகின்றார். இவருடைய பகை வீட்டுச் சஞ்சாரம் பொதுவாக உலகிற்கு நன்மையல்ல. இலங்கையை பொறுத்தவரையிலும் சனி பகைவீட்டில் இருக்கின்ற காலங்களில் நன்மையளித்ததாக வரலாறு இல்லை. 98ஆம் ஆண்டிலிருந்து 2000 மே மாதம் வரையில் சனி மேடராசியில் சஞ்சாரத்தை மேற்கொண்டிருந்தார். மேடம் சனிக்கு நீசவீடு. அக்காலப் பகுதியில் நாட்டில் நடந்த அனர்த்தங்கள் எல்லோருக்கும் தெரிந்ததே. இவ்வருடம் நவம்பர் 2இல் செவ்வாய் துலாராசிக்குச் செல்கின்றது. சனிக்கு கேந்திரத்தில் அமைவதுடன் 90 பாகை சதுரப்பார்வையையும் பெறுவதினால் நவம்பர் முற்பகுதியில் சிறிய அளவிலாவது பிரச்சினையைக் கொடுக்காமல் போகாது. 2005 ஜனவரி 13 முதல் சனி வக்கிரகதியில் மிதுனராசிக்குச் செல்வது நன்மையளிக்காது. அத்துடன், ஜனவரி 29இல் செவ்வாய் தனுராசியினுள் பிரவேசிக்கின்றது. செவ்வாயும் வக்கிரம் பெற்று நிற்கும் சனியும் ஒன்றை ஒன்று நோக்குவது (மோதுவது) நாட்டுக்கு நல்லதல்ல. இக்காலப்பகுதியில் பற்பல பிரச்சினைகள் உருவாக வாய்ப்புண்டு. பேச்சுக்கள் முறிந்துபோகும் சந்தர்ப்பங்கள் உண்டு. செவ்வாயோ அல்லது சனியோ வக்கிரம் பெற்று ஒன்றையொன்று நோக்கும் காலம் இலங்கைக்கு பாதிப்பையே ஏற்படுத்தும். உதாரணத்திற்கு கட்டுநாயக்கா விமான நிலையத் தாக்குதல் சம்பவத்தை எடுத்துக் கொள்ளலாம். 2001 ஜூலை மாதம் இடபராசியிலிருந்த சனியை செவ்வாய் வக்கிரம் பெற்று விருச்சிகராசியிலிருந்து நோக்கியதால் நாட்டிற்கு பொருளாதாரத்தில் பேரழிவு ஏற்பட்டது. ஜனவரி 29இற்கு மேலும் பாரிய பிரச்சினைகளை நாடு எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படலாம். உலக நாடுகளிலும் தீவிரவாதம் தலைதூக்கும். அமைதிப் பேச்சுக்கள் முறிவடையும். இயற்கை அழிவுகள், விமான விபத்துக்கள் என பலவிதத்திலும் தீமையான சம்பவங்கள் இடம்பெற வாய்ப்புண்டு.

- அ.ஜெயாகரன்.
தொண்டைமானாறு.

# யாரோடு நோவோம்...?

ஒரு காலத்தில் உடல் வலிமைமிக்கவன் உயர்ந்தவனாகக் கருதப்பட்டான்; தலை வனாக, அரசனாக அவன் விளங்கினான். பின்னர், அதிக சொத்துக்களை வைத்திருப்ப வன் மேலோங்கினான். இன்று அறிவுழைப் பால் மேம்பட்டவனே உயர்ந்த நிலையில் இருக்கின்றான். இன்றைய உலகம் அறிவை அடிப்படையாகக்கொண்டது. இன்றைய வல்லமை மிக்க நாடுகள் எல்லாமே அறிவுப்புலத்தில் முன்னேறி, அதனால் வலிமைபெற்ற நாடுகளே.

'அறிவு நின்குறி, அறிவின் குறி, நீ' என்றார் பாரதியார். வள்ளுவரும் 'மெய்ப் பொருள் காண்பதே அறிவு' என்று அறிவின் மூலமுரைக்கிறார்.

முன்னர் எமது கல்விமுறையில் மனனம் செய்து ஒப்புவிக்கும் தன்மையே மேம்பட்டி ருந்தது. தொல்காப்பிய, நன்நூற் சூத்திரங்களை, புராண இதிகாசப் பாடல்களை, நீதி நூல்களை அப்படியே நெட்டுருப்பண்ணி ஒப்புவிப்பவனே 'அறிவாளி'யாகப் பார்க்கப்பட்டான்.

ஆனால், இன்று அப்படி எதிர்பார்க்கப்படுவதில்லை. அறிவின் மூலங்களைக் கண்டறிவதே போதுமானது. குறித்த ஒரு விடயம் தொடர்பாக அறிய வேண்டு மெனில், குறித்த நூலிலோ, குறித்த துறையிலுள்ள நூலிலோ தேடிப்பெறலாம் என்ற விழிப்புணர்வே வேண்டப்படுகின்றது.

அவ்வகையில், அறிவுத்தேடலுக்கான களமாக, அறிவுத் தொகுப்புக்களின் களஞ் சியமாக நூலகங்கள் விளங்குகின்றன. இந்த ஒக்ரோபர் மாதம் வாசிப்பு மாதமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

1981ஆம் ஆண்டு அரச படைகளால் எரிக்கப்பட்ட பண்பாட்டுக்கருவூலம் - யாழ்ப் பாண பொதுநூலகம் 23 வருடங்களின் பின்னர் மீளத்திறக்கப்பட்டுள்ளது. நமது தொன்மங்களைப் பேசிய ஆவணங்கள் தீயின் கங்குகளால் காவுகொள்ளப்பட்ட சோகம் நெஞ்சை அடைக்கிறது. இருக்கும் ஆவணங்கள் கூட சரியாகப் பேண முடியாத, பேண விரும்பாத அவலமும் இருக்கத்தான் செய்கின்றது. ஏலவே, கலைஞானியின் அரும் பொருள்கள் கணிசமான அளவு அழிந்துபோய்விட்டன. குரும்பசிட்டி கனகரத்தினம் அவர்களின் ஆவணப்பேணுகை நுண்படச்சுருள் மூலமாக அழியாமற் பேணப்படுவது ஒன்றே நம்பிக்கை தரும்செய்தியாகும்.

நமது வரலாற்றுச் சின்னங்கள், புதைபொருள்கள் கூட முழுமையாக நம்மிட மில்லை. தென்னிலங்கையிலும் பிரித்தானியாவிலும் ஆய்வு என்ற கோதாவில் தஞ் சாவூர் பல்கலைக்கழகத்திலுமாக பரவிக்கிடக்கும் நிலையும் மறுக்கவொண்ணாதது.

நமது நூலகங்கள் ஆவணப்படுத்துவதில் அதிகம் கரிசனை காட்டுவதில்லை. வருடாந்தம் ஒதுக்கப்படும் நிதியினைப் பயன் படுத்தி நூல்களைக் கொள்வனவு செய்து, உசாத்துணைப்பகுதியிலோ, இரவல் வழங் கும் பகுதியிலோ போட்டுவிடும் கைங்கரியத் தையே ஆற்றுகின்றன. உள்ளூராட்சித் திணைக் களத்தின் கீழியங்கும் நூலகங்கள் எல்லாமே பொதுவான நடைமுறைப்பிரச்சி னைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் நிலை மறுப்பதற்கில்லை. கட்டட, தளபாடப் பற்றாக்குறை, ஒதுக்கப்படும் நிதியின் அளவு, கொள்வனவு தொடர்பாக இருக்கும் நிதி சார்ந்த நடைமுறைகள், ஆளணிப்பற்றாக்குறை எனப் பல பிரச்சினைகளுடனும், போதாமைகளுடனுமே நூலகங்கள் இயங்குகின்றன.

ஆனால், இருக்கும் வளங்களுடன் நூல்களைக் கொள்வனவு செய்யும்போது தரமான நூல்களைக் கொள்வனவு செய்வது இன்றியமையாதது.

பிரதேச சபை நூலகங்களின் கொள்வனவுப்பட்டியலை ஆராய்ந்து பார்த்தால் ரமணிச்சந்திரன் முதலானோரின் ஜனரஞ்சகமான மனோரதியக் கதைப் புத்தகங்க ளும், பாடத்துணை நூல்கள், பயிற்சிப் புத்தகங்களுமே அதிகம் இடம்பெற்றிருக்கும். கூடுதலான வாசகர்கள் - குறிப்பாக மாணவர்கள், சில ஆசிரியர்களின் - வேண்டு கோள்களைக் கவனத்திற்கெடுத்தே இந்நூற் கொள்வனவு நடந்திருக்கும். நூல கங்களில் அமைக்கப்பட்டிருக்கும் 'வாசகர் வட்டங்களும்' கூட இதற்குத் தூண்டு கோலாக இருக்கும்.

ஆனால், நூலகர்களுக்கு நூல்கள் தொடர்பான உயர்ந்த விழிப்புணர்வு அவசிய மாகும். தரமான சமூகத்திற்கு - சமூக முன்னேற்றத்திற்கு உதவக் கூடிய பல்துறை சார்ந்த படைப்புக்களையும் கவனத்திற்கொள்ள வேண்டியது இன்றியமையாதது. வாசகர் விருப்பங்களைச் சரியான திசைவழிக்கு இட்டுச்செல்லக்கூடிய நூல்களை அறிமுகஞ் செய்வதும் நூலகருக்கான சமூகக்கடமையாக இருக்க வேண்டும். குறிப் பாக, ஈழத்துப் படைப்புக்கள், சஞ்சிகைகள் தொடர்பில் நூலகங்களின் கவனம் அதிகரிக்கப்படவேண்டும்.

இப்போது பாடசாலைகளிலும் 'ஆசிரிய நூலகர்'கள் நியமிக்கப்பட்டு, நூலகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலே சொன்னவை இவர்களுக்கும் பொருத்த மானவையே. மாணவர்களின் தேடலை ஊக்குவிப்பதே பாடசாலை நூலகங்களின் பிர தான பணியாக இருக்கவேண்டும். வினாவிடை நூல்களைக் கொள்வனவு செய்து, அவர்களின் தேடலை இல்லாதொழிக்கும் கைங்கரியங்களில் பாடசாலை நூலகங் கள் ஈடுபடாதிருப்பது நன்மை பயக்கும்.

- ஏகலைவன்.

# வானில் பறந்தபடி திருமணம் 'Elephant Corridor' தரும் வாய்ப்பு!

"Elephant Corridor' – சொகுசுடன் கூடிய நவீன வசதிகள் கொண்ட ஹோட்டல். இது சிகிரியவில் அமைந்துள்ளது.

ஹெலிக்கொப்டரில் சென்று அங்கு தங்கும் வசதியும் உண்டு. அதன் மூலம்,

கிறது.

இதனோடு, "Elephant Corridor'இல் மேலும் பல வசதிகளும் பொழுதுபோக்கு அம்சங்களும் உள்ளன. வானில் வெப்பக் காற்று அடைக்கப்பட்ட பலூனில்சென்று மகிழ்

காட்டின் நடுவே ஏகாந்தமான – ரம்மியமான – மனதைக் கொள்ளை கொள்ளுகின்ற –சூழலில் அமைந்துள்ள "Elephant Corridor' இல் சுற்றிவரவுள்ள தருக்கள், உள்ளேயுள்ள தளபாடங்கள், அலங்கார வேலைப்பாடுகள், அமைதியான நிலைமை மற்றும் ஏனைய வசதிகள் போன்றவற்றையெல்லாம் வாடிக்கையாளர்கள் முழுமையாக அனுபவிக்கக் கூடிய விதத்தில் "Elephant Corridor'இலுள்ள ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் கூடிய சேவையினை விருந்தினர்களுக்கு வழங்குகின்றனர்.

விருந்தினர்கள் உச்ச மகிழ்வையும் பயனையும் அடைவதுடன் அதிலுள்ள சௌகரியத்தையும் முழுமையாக உணர்வர்.

இதற்கென 120 அங்கத்தவர்களைக் கொண்ட "Elephant Corridor' ஊழியர் குடும்பம் ஆர்வம், கூட்டுப் பொறுப்பு ஆகிய உணர்வுடன் நாளாந்தம் சிறந்த சேவையை வழங்கி வருகின்றது.



'Elephant Corridor' ஹோட்டலின் உதவி விற்பனை முகாமையாளர் றயன் பிளக், முகாமைத்துவப் பயிலுநர் சஞ்சய் மட்வனி ஆகியோர் ஹெலிக்கொப்டர் முன்னால் உள்ளனர்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு வெளியில் விமானப் பயணம் மேற்கொள்ளும் வசதியுடைய ஒரேயொரு ஹோட்டல் எனவும் "Elephant Corridor' பெருமை கொள்கிறது.

வசதிகளையும், வாய்ப்புகளையும் அதிகம் வழங்கும் "Elephant Corridor'

தல் அவற்றினுள் ஒன்று எனவும் தெரிவிக்கப்படுகிறது.

திருமண பந்தத்தில் இணையும் புதியவர்கள் தமது இன்பகரமான பொழுதை இப்படி வானில் கழித்து மகிழ முடியும். நடுவானில், திருமண சந்தோஷத்தை அனுபவிக்க "Elephant Corridor' ஏற்பாடு செய்து



ஹோட்டலின் முகாமைத்துவ அமைப்பான Tropical Leisure Management Ltd வசம் சொகுசு கார் தொகுதி ஒன்றே உள்ளது. மலேசிய மகாராணி 1952இல் பயன்படுத்திய 'ஜகுவார்', நிர்வாக இயக்குநர் சுசுனா பிலிப்பினாலும், இலங்கைப் பிரதமரால் இறக்குமதி செய்யப்பட்டு ஆளுநரால் பயன்படுத்தப்பட்ட 1966இன் ஒஸ்ரின் பிரின்ஸஸ், கம்பனித் தலைவர் பிரசன்ன டபிள்யூ. ஜெயவர்த்தனவாலும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

அங்கு வருகை தருவோரின் நலனில் என்றும் அக்கறை செலுத்தி அவர்களை சந்தோஷமடைய வைப்பதில் தன்னை அர்ப்பணித்துள்ளது. வருகை தருவோருக்கு

தருகிறது.

இவ்வாறான நடுவான் திருமண குதூகலிப்புக்கு "Elephant Corridor'



ஹோட்டலின் பணியாளர் குடும்பம்

புதிய அனுபவத்தை வழங்கி, புதுத்தெம்பைக் கொடுக்கிறது அது.

ஹோட்டலில் தரிக்கும் வேளையில், ஹெலிக்கொப்டர் மூலம் சிகிரிய மலைச் சூழலைக் கண்டுகழிக்கும் வாய்ப்பும் உண்டு. இதன்போது, சிகிரிய மலைத் தோற்றத்தையும் அதன் இயற்கை எழிலையும் அதன் மூலமான புதிய அனுபவத்தையும் பெற்றுக் கொள்ள "Elephant Corridor' வாய்ப்பளிக்கிறது.

ஏற்பாடு செய்து தரும் என அதன் முகாமை அறிவித்துள்ளது.

16 பேருக்கு அதிகமல்லாதோர் ஒரு நிகழ்வில் பங்குகொண்டு, நடுவான் திருமண வசதியை அனுபவிக்கலாம் எனவும் "Elephant Corridor' தெரிவிக்கிறது.







# அமிர்தாஞ்சன் - நோவு நீக்கி நிவாரணி

அமிர்தாஞ்சன் – சகல வீடுகளிலும் சகலரோக நிவாரணியாக உச்சரிக்கப்படும் பெயர்.

இந்தியாவில் 1893 முதல் தன்னுடைய தயாரிப்புகளை வழங்கி, மக்களை சௌபாக்கியவான்களாகவும் சுகதேகிகளாகவும் பேண உதவிவரும் இந்நிறுவனம் 1936 இல் வரையறுக்கப்பட்ட கம்பனியாக மாறியது.

நூற்றாண்டைத் தாண்டிய சிறப்பான – நேர்த்தியான – அனுபவப் படிவுகளைக் கொண்ட இந்த நிறுவனம் நூற்றாண்டு இளமையோடு திகழ்வதுதான் அதன் சிறப்பாகும்.

களிலிருந்து மீட்சி பெற்று புத்துயிர்ப்புத் தரும் மருந்துகள் வரை பலரகப்பட்டவை.

வலி, நோவு ஆகியவற்றிலிருந்து மட்டுமல்லாமல் தலையிடி, தலைக்குத்து, சளி, சுரம், சுளுக்கு, தசைப் பிடிப்பு, வாத நோவு, இடுப்பு வாதம் (கீல்வாதம்) போன்றவற்றிலிருந்து நிவாரணம், விடுதலை பெறுவதற்குப் பல ஆயுர்வேத மூலிகைகள் அடங்கிய மருந்துத் தயாரிப்புக்களை வெற்றிகரமாகத் தந்துள்ளது அமிர்தாஞ்சன்.

'அமிர்தாஜ்சன் நோவு பாம்' – இதுவே அதிகம் மக்களின், பல மில்லியன் கணக்கானோரின் – ஏக வரவேற்புக்குள்ளாகியிருக்கும் முக்கிய உற்பத்தி.




இந்தியாவிலும் இலங்கையிலும் பட்டிதொட்டிகளில் எல்லாம் – மாடமாளிகை வாசஸ்தலங்கள் முதல் குடிசை வீடுகள் வரை எல்லாம் – அமிர்தாஞ்சன் நோவுக் களிம்புப் புட்டி (Amrutanjan Pain Balm) இல்லாத வீடே இல்லை எனலாம். அத்துணை தூரம் நோவு, வலிகளில் இருந்து நிவாரணமும் விடுதலையும் பெற்றுத் தருவதில் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றுள்ளது அது.

அமிர்தாஞ்சன் பல வகை ஆயுர்வேதத் தயாரிப்புகளை வழங்குகின்றது. அவை நோவு, வலிகளிலிருந்து நிவாரணம் தரும் களிம்புகள் முதல் பல்வேறு பாதிப்பு

அமிர்தாஞ்சன் – தொன்மையான மூலிகை மருந்துகள் தொடர்பாகத் தனக்குக் காலம் காலமாக இருந்து வரும் பட்டறிவை புதிய விஞ்ஞானபூர்வ அனுபவங்களோடு இணைத்து சிறந்த மருத்துவ உற்பத்திகளையும் நிவாரணிகளையும் தனது வாடிக்கையாளர்களுக்குத் தருவதற்கு திடசங்கற்பம் பூண்டுள்ளது என்று அந்நிறுவனம் கூறுகின்றது.

தரமான உற்பத்திகளைத் தருவதற்குத் திறமான நிபுணத்துவ சேவை தங்களிடம் தயாராகக் காத்திருக்கிறது என்று கூறும் அமிர்தாஞ்சன் நிர்வாகிகள், வாடிக்கையாளர்களுடனான தமது உணர்வுபூர்வ – சிநேகபூர்வ – தொடர்பு மேலும் மேலும் வலுப்பட்டு வருவதாகவும் பெருமிதம் கொள்கின்றனர்.

அமிர்தாஞ்சன் தயாரிப்புகள் இப்போது இலங்கையிலும் தாராளமாகக் கிடைக்கின்றன. உற்பத்திகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற "ஸ்பீட் பாமர்சூட்டிகல் டிஸ்ரி பியூட்டர்ஸ் லிமிட்டெட், 28, பியர்னராம பிளேஸ், அலன் அவெனியூ ஊடாக, தெஹிவளை, (தொலைபேசி 2739899)" என்ற நிறுவனத்துடன் வாடிக்கையாளர்கள், விற்பனையாளர்கள் தொடர்புகொள்ளும்படி கோரப்பட்டுள்ளனர்.


**உங்கள் வாழ்நாள் முழுவதும்**
**நிலைத்து நிற்கக்கூடிய அழகிய நிறங்களுடனும்**
**பலவித சித்திர வேலைப்பாடுகளுடனும் கூடிய**
**உயர்ரக கவர் / தரை ஓடுகள்**




.... இன்னும் பல அளவுகளில்!

யாழ் நகரில்
பின்வரும் விற்பனை நிலையங்களில்
பெற்றுக்கொள்ளலாம்.

கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதி

**NEW KAMAAL CERAMICS,**
இல. 37 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2085

**JAFFNA CERAMICS,**
இல. 2C ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 3667

**VENKE IMPEX,**
இல. 27/3 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 6738

LWL **லங்கா வோல்டைல் லிமிரெட்,**
215, நாவல வீதி, கொழும்பு-5.
தொ.பே: (011) 2 805460/(011) 2 806450

நீடித்து நிலைக்கும் அழகுமயம்





**மாங்கல்யம் சுப மாங்கல்யம்**

பெயாரோஸ் சுப மாங்கல்யம்

பெயாரோஸ் சுப மாங்கல்யத்துடன்
**உத்பல - டில்ருக்ஷி இருவரும்**
இல்லற பந்தத்தில் கோலாகலமாக
இணைந்து கொள்கிறார்கள்.

பெருமளவில் வந்து குவிந்த தபால் அட்டைகளில் இருந்து அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்பட்ட பதுளையைச் சேர்ந்த டில்ருக்ஷி டி சில்வா, ஹெல ஹல்பேவைச் சேர்ந்த உத்பல சஜித்திர சோமசிறில் ஆகியோர் உற்றார் உறவினர்களின் ஆசியுடன் 2004ம் ஆண்டு நவம்பர் மாதம் 18ம் திகதி வியாழக்கிழமை கண்டியிலுள்ள ஒரு முன்னணி ஹோட்டலில் இல்லற பந்தத்தில் இணைய பெயாரோஸ் வழங்கும் வரத்தைப் பெற்றுள்ளார்கள். இவர்களுக்கு மாங்கல்யம் சுப மாங்கல்யம்.




உடைக அனுசரணை

புடவைக்கான அனுசரணை
SAREE MANDIR

மலர் அலங்கார அனுசரணையாளர்
Sterling Flowers (Pvt) Ltd.,

சிகை அலங்கார அனுசரணையாளர்
Salon Nayana

தங்க நகைகளுக்கான அனுசரணை

மென்மையான சருமத்திற்கு
வெண்மையான முகத்திற்கு

ஆறுதல் பரிசாக 10 தங்க நாணயங்களைப் பெற்றவர்கள்



PHOENIX O&M401630